

# ஆவிக்குரிய குழப்பங்கள் ஏன்?

டாக்டர். பீட்டர் மாஸ்டர்ஸ்
டாக்டர். ஜான் சி. விட்கோம்

# ஆவிக்குரிய குழப்பங்கள் ஏன்?

டாக்டர். பீட்டர் மாஸ்டர்ஸ்
டாக்டர். ஜான் சி. விட்கோம்

தமிழாக்கம்: பாஸ்டர். இ. ஜான் நெல்சன்

# பொருளடக்கம்


*i. முன்னுரை - 01*

*1. அடையாளத்திற்கான எதிர்பார்ப்பு - 06*

*2. இன்றைய அற்புதங்களைச் சோதித்தல் - 11*

*3. எவை பெரிய கிரியைகள்? - 18*

*4. இன்றைய வரங்களின் நிலை என்ன? - 23*

*5. வரங்களின் நோக்கம் - 30*

*6. தேவனுடைய வார்த்தை பரிபூரணமானதா? - 36*

*7. அந்நியபாஷைகள் தனி மேம்பாட்டிற்கானதல்ல - 44*

*8. நாம் வரங்களை நாடலாமா? - 49*

*9. சிந்தையையும் வார்த்தையையும் தவிர்த்தல் - 55*

*10. ஆவியானவருக்கு சம்பந்தமுண்டா? - 64*


## பகுதி 2 கேள்வி / பதில்கள்


*11. மாற்கு 16ம் அதிகாரத்தின் அடையாளங்களின் நிலை என்ன? - 70*

*12. பவுலின் போதனைகள் இன்றைக்கும் பொருந்துமா? - 73*

*13. உண்மையான வரங்கள் ஏன் வேறுபடுத்தப்பட வேண்டும்? - 76*

*14. ஆதித் திருச்சபை வாழ்க்கை முறை என்ன? - 80*

*15. இன்று ஆண்டவர் சுகமளிக்கிறாரா? - 85*

*16. நாம் பிசாசுகளைத் துரத்தலாமா? - 90*

*17. தீர்க்கத்தரிசனம் அபிஷேகிக்கப்படுவதில்லையா? - 94*

*18. ஆண்டவர் வரும் வரை வரங்கள் இருப்பதில்லையா? - 98*

*19. தனி தியானத்தில் பாஷைகளின் நிலை என்ன? - 100*

*20. பிசாசின் தந்திரங்கள் - 104*

*21. அப்போஸ்தலர்கள் அல்லாதவர்களும் அற்புதங்கள் செய்தார்களே? - 107*

*22. முடிவுரை - 114*

# முன்னுரை

பெந்தகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்ய ஆரம்பித்த நாள் முதல், புதிய ஏற்பாட்டு சபையின் 2000 ஆண்டுகள் முடிகிற நிலையில், சாத்தானுக்கும் சபைக்குமிடையே தொடர்ந்து பலவிதமான போர் நடந்து கொண்டிருக்கிறது. பிசாசு வெளியிலிருந்து சரீரப் பிரகாரமாக தாக்குதலைத் தொடுக்கிறது மாத்திரமல்ல, சுவிசேஷத்தின் வல்லமையைக் குறைக்கும்படியாக சபைக்குள்ளும் பலத்த கிரியை நடப்பிக்கிறதை பார்க்கிறோம். என்றாலும், ஜீவனுள்ள கற்களான உண்மையான விசுவாசிகளைக் கொண்ட சபையானது வெற்றியுடன் வளர்ந்தே வந்திருக்கிறது.

சபை சரித்திரம் முழுவதும் மாறாத, ஜீவனுள்ள வசனத்தினாலே மட்டும் தொடர்ந்து புத்துயிர் பெற்று, இப்படிப்பட்ட வெற்றிகளைப் பெற்ற அத்தியாயங்களால் சபை முழுவதும் நிறைந்துள்ளது. இப்படிப்பட்ட ஆவிக்குரிய எழுச்சியும், உண்மையான வளர்ச்சியும் நாம் இப்பொழுது கேள்விப்படுகின்ற “அடையாள எழுச்சி உபதேசங்களால்" சபைக்கு ஏற்பட்டதென்று நிச்சயமாக கூற முடியாது. பெந்தகோஸ்தே இயக்கம் 19-ம் நூற்றாண்டில் துவக்கப்பட்ட முதல் ஐம்பது ஆண்டுகள் வரை ஒரு குறுகிய அளவிலான இயக்கமாகவே இருந்து வந்தது. 1955-ம் ஆண்டு வரையிலும் இந்த வகை “அடையாள எழுச்சி உபதேசங்கள்" (Charismatic Teaching) பெந்தகொஸ்தே சபைகளில் இடம் பெறவில்லை என்றே சொல்லலாம். புதிய ஏற்பாட்டு சபையின் இரண்டாயிரம் ஆண்டு வரலாற்றில், கடந்த 40 ஆண்டுகளாக தான் இத்தகைய அடையாள மற்றும் எழுச்சியை மட்டுமே

சார்ந்த உபதேசங்கள் வழக்கத்தில் உள்ளன. இந்தப் போதகங்கள் கடந்த நூற்றாண்டுகளில் சபையில் நடந்து வந்துள்ள ஊழியங்களை, அனலற்ற, எழுச்சியில்லாத, வல்லமையில்லாத, முழுவதும் வெளிச்சம் பெறாத ஊழியங்கள் என்றும், இதுவரை ஏறெடுக்கப்பட்ட ஆராதனைகள் உண்மையில்லாத ஆராதனைகள் எனவும் அதிபயங்கரமாக வர்ணிக்கப்படுகிற அளவிற்கு சென்றுள்ளன.

சபை மக்கள் ஆவிக்குரிய சிலாக்கியங்களை ருசிப்பதற்கென்று இருப்பதாகவும், அதிகாரத்தின் மேல் விருப்பம் கொண்ட சுயநல ஊழியர்கள், இந்த வரங்களைப் பற்றிய உண்மைகளை விசுவாசிகளிடமிருந்து இதுவரை மறைத்து வந்துள்ளதாகவும் அடையாளப் போதகர்கள் அழுத்தமாக கூறுகின்றனர். இப்படிக் கூறுவதின் மூலம் இதுவரை நிறைவேற்றப்பட்ட உண்மையான ஊழியங்களை சடங்காச்சாரம் நிறைந்த இருளான காலத்தில் நடைபெற்ற ஊழியங்களாக அர்த்தப்படுத்துகின்றனர். அப்போஸ்தல நடபடிகளுக்குப் பின்பாக, சமீப காலத்தில் இந்த புதிய அடையாள உபதேசங்கள் இவர்களால் கண்டுபிடிக்கப்படும் வரையிலும், தேவனுடைய ஜனங்கள் ஆவிக்குரிய நிலையில் குருட்டாட்டமாக இருந்ததாக இவர்கள் பறைசாற்றுகின்றனர். இந்த கருத்து எவ்வளவு வேதனைக்குரியது! இதன் விளைவுகள் எத்தனை பயங்கரமானவைகள்! கிறிஸ்தவ விசுவாசத்திற்கு இன்றைய நாட்களில் காணப்படும் அடையாள உபதேசங்கள்தான் உண்மையான கண்டுபிடிப்புகளா? இதுவரை பிரசங்கிக்கப்பட்ட சத்தியங்களும், இயற்றப்பட்ட கருத்து நிறைந்த பாடல்களும் ஆவிக்குரிய அறியாமையிலிருந்து தோன்றினவைகளா? இதுவரை ஏறெடுக்கப்பட்ட ஆராதனைகளில் ஜீவனும் வல்லமையும் காணப்படவில்லையா? பல தேவனுடைய மக்களின் வாழ்வில் காணப்பட்ட பக்தியும், அர்ப்பணிப்பு நிறைந்த சேவையும் அர்த்தமில்லாத முயற்சியின் விளைவுகளா? என்ற கேள்விகளை நிச்சயம் நாம் கேட்க வேண்டியதாகின்றது.

எனவே, ஒன்று இந்நாட்களில் காணப்படுகின்ற அடையாள எழுச்சி உபதேசங்கள் உண்மையாய் இருப்பதாக கருதப்படுவதால், கடந்த நூற்றாண்டுகளில் காணப்பட்ட ஆவிக்குரிய ஈடுபாடுகள் குறைவுள்ளதாக கருதப்படவேண்டும். இது வேதனையானதே! அல்லது இந்த அடையாள உபதேசங்கள் நம் முற்பிதாக்களின் ஆழமான விசுவாசத்தைக் குறைத்து மதிப்பிட்டு, சில துணிச்சலான காரியங்களை வெளிப்படுத்தும் அடையாளங்களாக மட்டுமே இருக்கவேண்டும். இதில் ஏதோ ஒன்றுதான் உண்மையாக இருக்கமுடியும். இன்று நாம் கேள்விப்படுகின்றதைப் போன்ற சில எழுச்சி மிகுந்த சம்பவங்களும் அடையாளங்களும் சபை சரித்தரத்தில் நடந்ததை நாம் நிச்சயம் மறுப்பதில்லை. ஆனால், சிலரை வயப்படுத்துவதற்காக ஆவியானவர் இத்தகைய அடையாளங்களை நடபிக்கிறாரென்று சில அடையாளப் போதகர்கள் வேகமாக விளம்பரப்படுத்துவதை நாம் ஏற்க முடிவதில்லை. இது முற்றிலும் சரியான உபதேசமல்ல என்று இவர்களும் அறிந்தே இருக்கிறார்கள். இரண்டு அல்லது மூன்று செங்கற்களை வைத்து பெரிய சாம்ராஜ்யத்தைக் கட்ட ஒருவன் முயற்சிப்பது போல இந்த போதகர்கள் செயல்படுவதினால், தங்களைச் சார்ந்தவர்களையும் தவறாக இவர்கள் வழிநடத்துகின்றனர். இந்த எழுச்சி அடையாள உபதேசங்கள் ஏதும் இல்லாமலேயே, ஆவியானவரின் கிரியையோடு சபை செயல்பட்டு வந்துள்ளது என்பதே உண்மையாகும்.

நாம் ஏற்கனவே கண்டபடி, பெந்தகொஸ்தே சபையின் உபதேசக் கொள்கைகள் **1955**-ம் ஆண்டு துவங்கி பல சபைப்பிரிவுகளையும் பாதித்து வந்துள்ளது. ஆரம்பத்தில் அமைதியாகத் துவங்கிய இந்தப் போதகங்கள், **1960**-ம் ஆண்டு அமெரிக்காவில் கலிபோர்னியா பட்டணத்தின் ஒரு சடங்காச்சார சபைப் போதகர், தாம் திடீரென்று பரிசுத்த ஆவியானவரின் ஸ்தானத்தைப் பெற்று பற்பல பாஷைகளில்

பேசியதாக தம் சபைக்கு அறிவித்ததிலிருந்தே வேகம் பிடித்தது என்று கூறலாம். இன்று நாம் கேள்விபடுகின்ற இந்த அடையாள உபதேசங்களுக்கெல்லாம் முன்னோடியாக உள்ள மேலே சொல்லப்பட்ட இச்சம்பவம் பத்திரிகைகள், புஸ்தகங்கள் மற்றும் தொலைகாட்சி விளம்பரங்கள் மூலம் எல்லா இடங்களிலும் வேகமாக பிரசித்தப்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் சுவிசேஷ உபதேசங்களில் பெலவீனமானவர்களிடமும், வேதபுரட்டைக் கடைபிடிக்கிறவர்களிடமும் இந்த உபதேசம் மிக வேகமாகப் பரவ ஆரம்பித்தது. ஆச்சரியவிதமாக, எல்லாச் சபைகளும் ஒன்று சேரவேண்டுமென்ற புதுக் கருத்திற்கு இந்த அடையாள உபதேசங்களே காரணமாகவும் அமைந்துவிட்டது. ஒருவர் தலைமையில் உலகமெங்குமுள்ள சபைகள் ஒன்று சேருமென இதன் அடிப்படையிலேயே அநேகர் இன்று எதிர்பார்க்கின்றனர். கிறிஸ்தவர்கள் மத்தியில் இந்த உபதேசம் மிகவும் பிரபலமானதொன்றாகும். தங்கள் அடிப்படை சடங்காச்சார உபதேசங்களை விட்டுவிடாத அநேக பாதிரிமாரும், இந்த எழுச்சி உபதேசங்களில் மிக்க நாட்டம் உடையவர்களாக இருக்கின்றனர். பெரும்பாலான ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளில் இந்த உபதேசம் மிக வேகமாகப் பரவியுள்ளது. துரதிஸ்டவசமாக இது ஒரு சபையைப் போன்று செயல்படாமல், தனிமனித கொள்கை வழிபாடு (Cult) மாதிரியே அநேக இடங்களில் காணப்படுவது வேதனைக்குரியதாகும்.

உண்மையான ஆண்டவரின் சில பிள்ளைகளும் இந்தக் குழுக்களில் சம்மந்தப்பட்டுள்ளதை அநேக இடங்களில் நாம் காண்கிறோம். இந்த அடையாள உபதேசங்களுக்கே உரியதான மாம்சீகம், மாயமாலம், வேற்று நம்பிக்கைகள் போன்ற குணாதிசயங்கள், ஆண்டவரின் வார்த்தைக்குப் புறம்பான வழிமுறைகள் சில விசுவாசிகளின் ஆவிக்குரிய நிலையை சூறாவளியைப் போல் தவிர்க்க முடியாத பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய அபாயம் நிறைந்ததாகவே உள்ளது.

இந்நிலையில் இந்த உபதேசங்களைப் பற்றி நாம் கரிசனையற்று நிச்சயமாக அமைதியாயிருக்க முடியாது. நமது வாழ்விற்கு எல்லா நிலைமையிலும், போதுமான வழிகாட்டுதலாய் உள்ள ஆண்டவரின் ஜீவனுள்ள வார்த்தையின் வெளிச்சத்தில், இங்கு சொல்லப்பட்டுள்ள கருத்துக்களை வாஞ்சையுள்ள கிறிஸ்தவர்கள் சிந்தித்து ஒரு தீர்மானத்திற்கு வர வேண்டுமென்பதே இந்த நூலின் முக்கிய நோக்கமாகும்.

# 1. அடையாளத்திற்கான எதிர்பார்ப்பு

பொதுவாக எல்லா இடங்களிலும் காணப்படும் பக்தி குறைபாட்டினால், சத்தியத்தை விட்டுவிலகிச் செல்லும் மனப்பான்மையின் விளைவே இன்று நாம் காண்கிற அடையாள உபதேசத்திற்கான முக்கிய காரணமாகும். பொருளாதாரம், அரசியல் மற்றும் மதத்தைப் பற்றிய புதிய தத்துவங்களினாலும், கடவுள் இல்லை *(Atheism)* என்ற சித்தாந்தங்களினாலும் ஆண்டவருடைய தன்மைகளும், அவருடைய கிரியைகளும் மறுதலிக்கப்படுகின்ற இந்த கடைசிக் காலத்தில், எப்படியாவது ஆண்டவர் ஜீவிக்கிறாரென்றும், வேதத்தில் குறிப்பிட்டுள்ள அவரது ஞானம், வல்லமை மற்றும் அற்புதமான செயல்களெல்லாம் உண்மையானவைகள் என்றும் நிரூபிக்க வேண்டிய கட்டாயத்திற்கு சபை இன்று தள்ளப்பட்டுள்ளது. இதன் விளைவே, நாமும் மற்றவர்களும் ஆண்டவருடைய வல்லமையை "அடையாளங்களாகப்" பார்க்க வேண்டுமென்கிற ஆபத்திற்கு நம்மை தள்ளிவிடப்பட்டிருக்கிறோம். ஆண்டவரின் வல்லமை வெளிப்படையாக நிரூபிக்கப்பட வேண்டுமென்று, இதே வண்ணமாக தேவனுடைய மக்கள் வேதத்தில் வாஞ்சித்ததை நிச்சயம் வாசிக்கிறோம். இதற்காக ஜெபங்கள் ஏக்கத்தோடு ஏறெடுக்கப்பட்ட போதிலும், வெளிப்படையான அடையாளங்கள் ஆண்டவரால் எல்லா சமயங்களிலும் கொடுக்கப்படவில்லை என்பதை வேத வசனங்களில் ஆதாரத்தோடு நாம் சிந்திக்க வேண்டும். உதாரணத்திற்கு, ஏசாயா **64**-ம் அதிகாரத்தை இங்கு சற்று கவனிப்போம்.

அவபக்தி நிறைந்த ஆகாய் இராஜாவின் நாட்களில் பலவிதமான தவறான வழிபாடுகளும், வணக்கங்களும் காணப்பட்டது. இந்த நிலையில் (ஏசாயா 8-ம் அதிகாரம்) இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தாம் ஜீவனுள்ள ஆண்டவர் என்பதை தமது மகத்துவமான, வெளிப்படையான அடையாளங்களால் காண்பித்தால் எவ்வளவு நலமாயிருக்கும் என்று அந்நாட்களில் வாழ்ந்த ஏசாயா விரும்பினார். அவருடைய ஜெபத்தை நாம் ஏசாயா 64:1-2 வசனங்களில் காண்கிறோம். இவ்விதமான ஜெபம் சரியான விருப்பந்தானா? நிச்சயமாக இதில் தவறேதும் இல்லையே. அவபக்தியும், கடின இருதயமும் நிறைந்து காணப்படும் இந்த உலகத்தில், தேவன் தம்முடைய வல்லமையை நிரூபித்தால் நல்லது என்றுதானே ஏசாயா விரும்பினார். 700 ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் ஆண்டவர் செய்த அற்புதங்களை ஏசாயா இங்கு 3-ம் வசனத்தில் முதலில் நினைவுகூருகிறார். இஸ்ரவேலருக்கும், மற்ற ஜனங்களுக்கும் முன்பாக தமது தாசனாகிய மோசேயின் செயல்களை உறுதிபடுத்துவதற்காக எப்படி தமது மகத்துவத்தால், ஆண்டவர் சீனாய் வனாந்திரத்தை அதிரப்பண்ணினாரென இங்கு ஏசாயா எழுதியுள்ளதைக் காண்கிறோம். எனினும் ஏசாயாவின் “இந்த எதிர்பார்ப்பின்படியே" அவருடைய நாட்களில் அடையாளங்கள் கொடுக்கப்படவில்லை. எசேக்கியா ராஜாவின் நாட்களில், சூரிய பாகை மறைவைத் தவிர ஏசாயா எந்தவிதமான வெளிப்படையான அடையாளத்தையும் காணவேயில்லை. காரணம் என்னவாக இருக்கமுடியும்? நமது ஆண்டவருக்கு எதை, எப்படி, எப்பொழுது செய்ய வேண்டுமென்று தெரியும். ஆண்டவர் மனித விருப்பங்களையோ, திட்டங்களையோ, ஆலோசனைகளையோ சார்ந்து தம்முடைய மகத்துவத்தை நிரூபிப்பதில்லை. அது முற்றிலும் அவருடைய சர்வ வல்லமையுள்ள சித்தத்தைச் சார்ந்ததாகும் என்பதை நாம் அறிந்துகொள்ளுவது இங்கு மிக அவசியம்.

அப்போஸ்தலர் 1:6-ல் சீஷர்கள் இப்படிக் கேட்டதை நாம் வாசிக்கிறோம். "ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்?". ஆண்டவர் அவர்களுக்கு கூறிய பதிலே இன்றைய சூழ்நிலைகளுக்கும் மிகவும் பொருத்தமானதாகும். எல்லா சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டியதே சீஷரின் கடமையன்றி, ஆண்டவரின் வல்லமையை வெளிப்படையாக நிரூபிக்க முயற்சி செய்வதோ, திட்டமிடுவதோ, ஒழுங்குபடுத்துவதோ அல்லவே. பழைய ஏற்பாட்டில் ஏசாயா வேண்டியதைப் போன்று (புதிய ஏற்பாட்டில் யோவான் ஸ்நானகன் எதிரொலித்ததும் இதுவே) இன்றும் அநேகர் "ஆண்டவரே இப்பொழுது வெளிப்படையாக எதையாவது செய்யும்" என்று வேண்டுவதைக் காண்கிறோம். சபையின் தரமும் ஆசீர்வாதமும் தாழ்ந்துள்ள இந்நாட்களில், தமது ஊழியர்களை நிரூபிக்க ஆண்டவர் ஏதாவது செய்ய வேண்டுமென்று அநேகர் எதிர்பார்க்கின்றனர்.

ஏற்கனவே நாம் குறிப்பிட்டது போல, அவிசுவாசம் நிறைந்து காணப்படுகின்ற இந்த உலகத்தில், தனி மனித வழிபாட்டை சார்ந்த எல்லா இயக்கங்களும் தங்களைப் பின்பற்றுவர்களுக்கு சில அடையாளங்களைக் காட்ட விரும்புவது இயல்பே. இத்தகைய "வெளிப்பாடான அடையாளங்கள்" ஜனங்களுக்குள் பரவசமான உணர்வை உண்டு பண்ணி, அதன் மூலம் தாங்கள் சொல்லுவதை நம்புவதற்கு ஏதுவாகவே இவர்கள் அடையாளங்களைச் செய்ய விரும்புகின்றனர். "வேத புஸ்தகத்தில் அடையாளங்கள் எழுதப்படவில்லையா? முன்பு இருந்த மக்கள் கண்ட அற்புத அடையாளங்களை நாமும் ஏன் காணக்கூடாது?" என்று இந்த மக்கள் எதிர்க்கேள்வி கேட்பதை நாம் கடந்து வந்திருப்போம். இங்குதான் ஆண்டவருடைய வார்த்தையை கூர்ந்து கவனிக்கவேண்டும். வேதத்தில் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் அடையாங்களும், அற்புதங்களும் நடக்கவில்லை என்று நாம் வேதத்தை ஆராயும்பொழுது கண்டு கொள்ளலாம். இதற்கு சில உதாரணங்களைக் கீழே காண்போம்.

உலகம் சிருஷ்டிக்கப்பட்டு 1700 ஆண்டுகளுக்குப் பின்பு, நோவாவின் காலத்தில் வெள்ளம் ஏற்பட்டதுவரை, ஏனோக்கு மரணத்தைக் காணாமல் தேவபிரசன்னத்திற்கு எடுக்கப்பட்ட நிகழ்ச்சியைத் தவிர வேறு எந்த வெளிப்படையான அடையாளத்தையும் நாம் வாசிப்பதில்லை. பின்பு நோவா உண்டுபண்ணின பேழையைக் குறிப்பிடலாம். அதற்குப்பின் பாபேல் கோபுர சம்பவத்தைக் குறிப்பிடலாம். பின்பு மோசேயின் காலம் வரையிலும் வெளிப்படையான அடையாளத்தையும் நாம் வாசிப்பதில்லை. சுமார் 400 ஆண்டுகள் இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்தில் வாழ்ந்த நிலைமையில் வானாந்தரத்தில் மோசேயின் மூலமும், யோசுவாவின் மூலமும் நடந்த அற்புத அடையாளங்களை நாம் யாத்திராகமத்தில் காண்கிறோம். நியாயாதிபதிகளின் புஸ்தகத்திற்குப் பிறகு சாலமோன் நாட்கள் வரையிலும் மிகவும் குறைவான வெளிப்படையான அடையாளங்களை நாம் வாசிக்கிறோம். பின்பு நெகேமியாவின் காலம் வரையிலும், எலியா மற்றும் எலிசாவின் நாட்களில் காணப்பட்ட அற்புதங்களைத் தவிர வேறு எதையும் வாசிப்பதில்லை. இந்த நாட்களில் தேவபக்தி நிறைந்த எஸ்றா, நெகேமியா, செருபாபேல் போன்றவர் வாழ்ந்த போதும் அடையாளங்களாக நாம் எந்த அற்புதங்களையும் வாசிப்பதில்லை. மீண்டும் பழைய ஏற்பாடு முடியும் தருவாயில் யோவான் ஸ்நானகன் வெளிப்படும் வரையிலான 400 வருட காலமும் “மௌனமான காலம்" என்று வர்ணிக்கப்படும் அளவிற்கு எந்த அடையாளமும் வெளிப்படையாக நடந்ததாக நாம் வாசிப்பதில்லை.

ஆச்சரியவிதமாக, உலகில் வாழ்ந்த பெரிய தீர்க்கதரிசிகளில் ஒருவரான, யோவான் ஸ்நானகனைப் பற்றி வேதம் குறிப்பிடும் பொழுது “தன் வாழ்நாள் முழுதும், அவர் ஒரு அற்புத அடையாளமும் செய்யவில்லை"(யோவான் 10:41) என்றே கூறுகிறது. உண்மைதானே! இது ஒரு ஆச்சரியமென்றால்,

நமது ஆண்டவரைப் பற்றி என்ன காண்கிறோம்? அவர் உன்னதமானவராய் இருந்தும், ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாயிருந்தும் இந்த உலகத்தில் தாம் வாழ்ந்த முதல் 30 வருடங்கள் எந்த ஒரு அற்புதத்தையும் நிகழ்த்தியதாக வேதத்தில் வாசிப்பதில்லை. எனவே தான், ஆண்டவர் செய்த முதாலாம் அற்புதமாக யோவான் 2:11-ல் எழுதப்பட்டதை தெளிவாகக் கவனிக்கவேண்டும். ஆண்டவர் எல்லா நாட்களிலும் அற்புதங்கள் நிகழ்த்தியதாக நிரூபிக்க வேண்டி சிறு பிராயத்தில் அவர் செய்த அற்புதங்களாக சிலவற்றை தள்ளுபடியாகமம் என்று சொல்லப்படும் புத்தகங்களில் இருந்து எடுத்துக் காண்பிக்க முயற்சி செய்கின்றனர். அப்படி வேதத்தின் எந்தப் பகுதியிலும் நாம் வாசிப்பதில்லையே. இது வேதப் புரட்டுதானே தவிர வேறென்னவாக இருக்கமுடியும்? தேவன் தமது ஞானத்தில் தேவையான இடங்களில், தெளிவான காரணங்களுக்காக, தமது சித்தத்தின் படி மட்டும் அற்புதம் செய்ததாக ஆண்டவரின் வார்த்தையிலிருந்து வாசிக்கிறோம். மனித விருப்பத்தின்படி அவர் ஒருபோதும் செயல்படவேமாட்டார். யோவான் ஸ்நானகன் ஆண்டவரின் ராஜ்ஜியத்தைப் பற்றி முன்னறிவித்தானே அன்றி அடையாளங்கள் நிகழ்த்தி கொண்டிருக்கவில்லை. மேசியா வரும்பொழுது அவர் இன்னார் என்பதை ஜனங்கள் கண்டு விசுவாசிக்கும்படிக்கு மேசியாவின் அற்புத கிரியைகள் “அடையாளங்களாக" வெளிப்படும் என்பதாகவே நாம் பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் வாசிக்கிறோம்.

# 2. இன்றைய அற்புதங்களை சோதித்தல்

நமது ஆண்டவர் என்ன காரணத்திற்காக அற்புதங்களை செய்தாரென்று கூர்ந்து வாசிக்கும்பொழுது, நாம் அறிந்துகொள்ளலாம். யூதர்களிடத்தில் தேவனுடைய பிரமாணங்கள் பல ஆண்டுகள் வழக்கத்தில் இருந்தபடியால், ஆண்டவரின் வல்லமையையும் கிரியையும் அவர்கள் நன்றாகவே அறிந்திருந்தார்கள். ஆண்டவர் அற்புதங்கள் செய்வதற்கான உண்மையான காரணம் நிச்சயம் இதுவாயிருக்க முடியாது. யோவான் 20:31-ல் இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்னும் "மேசியா" என்று ஜனங்கள் விசுவாசித்து, நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளுவதற்காகவே இந்த அற்புதங்கள் "அடையாளங்களாகக்" கொடுக்கப்பட்டுள்ளதாக நாம் வாசிக்கிறோம். இயேசு கிறிஸ்துதாமே, தேவனிடத்திலிருந்து வந்த மேசியா என்று ஜனங்கள் கண்டு ஏற்றுக் கொள்ளும்படியான "அடையாளமாகவே" அற்புதங்கள் நிகழ்ந்ததாக அப்போஸ்தலர் 2:22-ல் வாசிக்கிறோம். தாம் தேவனிடத்திலிருந்து வந்த மெய்யான மேசியா என்பதை பின்வரும் இரண்டு செயல்களால் ஆண்டவர் நிரூபித்தார். முதலாவது, ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டு கொடுக்கப்பட்ட தேவனுடைய வார்த்தையின் அடிப்படையிலேயே ஆண்டவர் பேசினார். இரண்டாவது, தாம் செய்யப் போகிற அடையாள அற்புதங்களைக் குறித்து தாமே தீர்க்கதரிசிகளைக் கொண்டு முன்னுரைத்து, அதையே நிறைவேற்றினார்.

மத்தேயு 9:2-8 வரையிலான வசனங்கள் மூலம் ஆண்டவர் நடப்பித்த அற்புதங்களின் அவசியத்தை இப்படி நாம் விளங்கிக் கொள்ளலாம். ஒரு திமிர்வாதக்காரனை அவனது நண்பர்கள் ஆண்டவரிடம் கொண்டுவந்தார்கள். அவர்களின் விசுவாசத்தைக் அவர் கண்டு திமிர்வாதக்காரனை நோக்கி, “மகனே திடன் கொள், உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது" என்றார். அவர் தேவ தூஷணம் சொல்லுவதாக அவரை புறக்கணித்தவர்கள் குற்றம் சாட்டினார்கள். எந்த அதிகாரமும் இல்லாத பாவியான சாதாரண மனுஷன், எப்படி மனிதனின் பாவங்களை மன்னிக்க முடியும் என்பதே அவர்கள் சிந்தையின் சாராம்சம். ஆண்டராகிய இயேசு கிறிஸ்து, தேவனுடைய குமாரனாக இல்லாமலிருந்தால், தம்மை குற்றம் சாட்டக் காத்துக் கொண்டிருக்கும் மக்கள் மத்தியில், “நீ எழுந்து நட" என்று மட்டுமே சொல்லியிருக்க முடியும். ஆனால் பூமியில் பாவங்களை மன்னிக்க மனுஷக்குமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை எல்லோரும் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி, “நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டிற்கு போ" என்றார். இதை நாம் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். திமிர்வாதக்காரனுடைய பாவங்கள் முழுவதும் மன்னிக்கப்பட்டுவிட்டது என்று ஆண்டவர் சொன்னது உண்மையே என்று விளங்கும்படியான “அடையாளமாகவே" இந்த அற்புதம் நடந்ததாக நாம் நிதானமாக வாசிக்கும்பொழுது கண்டு கொள்ளலாம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே பாவத்திற்கு பரிகாரம் செய்யக்கூடிய அதிகாரமும், வல்லமையும் பெற்றவர் என்பது இந்த அற்புதத்தின் மூலம் நிரூபணமாகிறது. கடவுள் உயிரோடிருக்கிறார் என்று நிரூபிக்கப்பட வேண்டுமென்ற காரணத்திற்காக இந்த அற்புதங்கள் நடப்பிக்காதபடி, இயேசுகிறிஸ்துவுக்கு மட்டுமே பூமியில் பாவங்களை மன்னிக்க அதிகாரமுண்டென்றும்

அவர் மூலமே நித்திய ஜீவனுன்டென்றும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக இந்த அற்புதங்கள் "அடையாளங்களாக" கொடுக்கப்பட்டது தான் உண்மையாகும். இந்த சத்தியத்தை நாம் விளங்கிக்கொள்ளவேண்டியது மிகமிக அவசியமாகும். "அடையாளமான" இந்த அற்புதத்தோடு சம்மந்தப்பட்டுள்ள செய்தி மிக அவசியமானது. தேவனுடைய தெளிவான செய்தியோடும், சித்தத்தோடும் செய்யப்படாத எந்த ஒரு அற்புதமும் அபாயகரமானது.

அப்போஸ்தலர் 14-ம் அதிகாரத்தில் பவுலும், பர்னபாவும் லீஸ்திராப் பட்டணத்தில் ஒரு சப்பாணியைக் கண்டு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவனைக் குணமாக்க தீர்மானித்ததை வாசிக்கிறோம். இந்த அற்புதம் நிகழ்ந்த பிறகு தாங்கள் யாரென்றும், தங்களின் தேவன் யாரென்றும் இவர்கள் சொல்லுவதற்கு முன்பே, அந்த பட்டணத்தார் மிகுந்த உற்சாகத்தோடே, தங்கள் தெய்வங்களின் பூசாரிகளின் தலைமையில், இவர்களுக்கு பலியிட வந்துவிட்டார்கள். பவுலும் பர்னபாவும் இப்படிப்பட்ட மேன்மையை விரும்பவில்லை. அவர்கள் இதைக் கண்ட பொழுது தங்களின் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு சத்தமிட்டதை நாம் வாசிக்கிறோம். எங்கே தவறு நடந்தது? இந்த அற்புதத்தோடு உடனடியாக சரியான செய்தி சொல்லப்படும் முன்பே இங்கு குழப்பமும், சந்தடியும் ஏற்பட்டுவிட்டது. இதுதான் இன்றைக்கும் நடக்கிறது. தினந்தோறும் நூற்றுகணக்கான இடங்களில் பிரசங்கிமார்கள் தங்களை மேன்மைபடுத்த விரும்பி, ஆண்டவரை நிருபிக்கிறோம் என்று சொல்லி அநேக அற்புதங்களை நடபிக்க விரும்புகிறார்களே அன்றி, அற்புதங்களின் உண்மையான நோக்கம் குறித்து வேதம் என்ன சொல்லுகிறது என்பதைப்பற்றி இவர்களுக்கு கவலையே கிடையாது.

இதன் அடிப்படையில் தான், ஆண்டவர் தங்கள் மூலம் இன்றும் “நேரடியாக பேசுகிறார்" எனக் கூறி அற்புதங்கள் மூலம் அதை உறுதிப்படுத்த முயற்சி செய்கிறார்கள். ஆச்சரியம் என்னவெனில், உண்மையான சில விசுவாசிகளையும் இந்த வாதம் இன்று ஈர்க்கிற சக்தியாகிவிட்டது. இப்படி தேவனிடத்திலிருந்து தாங்கள் இன்றும் “நேரடியான வெளிப்பாடு" *(Direct Revelatoin)* பெறுகிறோம் என்று சொல்பவர்களை எப்படி சரியாய் நிதானிப்பது என்பதே இன்று நம் முன்னுள்ள முக்கியமான கேள்வியாகும். இன்று நாம் கேள்விப்படுகின்ற அற்புதங்கள் மற்றும் அடையாளங்கள் உண்மையாகவே தேவனிடத்திலிருந்து தான் வருகின்றனவா? அல்லது வேறு காரணங்கள் ஏதேனும் உண்டா? என்று முடிவு செய்வது எப்படி என்ற எண்ணம் இதை வாசிப்பவர்களுக்கு நிச்சயம் எழும்பும். பிரியமானவர்களே, தேவனுடைய வார்த்தையை ஜெபசிந்தையோடும், கருத்தோடும் கிரமமாக ஆராய்ந்து பார்ப்பதைத் தவிர வேறு என்ன அருமையான வழி இருக்க முடியும்? இதையே இந்த நூலின் மூலம் நாம் அறிய முயற்சி செய்கிறோம். தேவனுடைய வார்த்தையில் அனைத்து ஆலோசனைகளும் கிரமமாக கருத்தோடும், வாஞ்சையோடும் படிக்கும் எல்லா கிறிஸ்தவர்களும் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆலோசனைகள் 1யோவான் 4:1-ல் கொடுக்கப்பட்டுள்ள போதனைக்கு கீழ்படியும்படி நம்மை அழைக்கிறது. “பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்".

கிட்டத்தட்ட எல்லா பிரிவு மக்களாலும் இன்று நம்பப்படுகிற அற்புதங்கள் என்று சொல்லப்படுபவைகள், நாம் எவ்வாறு சோதிக்க முடியும்? புதிய ஏற்பாட்டில் நாம்

வாசிக்கின்ற அற்புதங்களுக்கும், இன்று நாம் கேள்விப்படுகின்ற அடையாளங்களுக்கும் வேறுபட்டுள்ளது என்பதை எந்த அடிப்படையில் நிர்ணயிக்க முடியும்? இந்த மிக முக்கியமான கேள்விகளுக்கு வேதத்தின் அடிப்படையில் மூன்று வழிமுறைககளில் பதிலைப் பெற அழைக்கப்படுகின்றோம்.

*1. எந்த நிலையிலும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் அற்புத சுகங்கள் விசேஷித்த தன்மைகள் கொண்டவை.*

*2.* ஆண்டவர் நடப்பித்த அற்புதங்கள் எந்த சந்தேகத்திற்கும் இடமில்லாதபடிக்கு, எல்லோரும் பார்க்கக் கூடிய வகையில் சரீர அவயங்களிலும் அவைகளின் செயல்பாடுகளிலும் பிரமாண்டமான மாற்றத்தைக் கொண்டுவந்தது. (அதற்கு முற்றிலும் மாறாக, இன்று அற்புதக்கூட்டங்கள் மூலம் காயங்கள் மற்றும் வலிகள் சுகப்படுத்தப்பட்டுள்ளன என்று விளம்பரம் செய்கிறார்களே தவிர, சரீர அவயங்களில் அல்லது செயல்பாடுகளில் மாற்றங்கள் ஏற்பட்டதற்கான அறிகுறிகளே காணப்படுவதில்லை. இதனால் எல்லோரும் அப்படிப்பட்ட தெளிவான மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று நிச்சயமாக சொல்ல முடியாத நிலையே உள்ளது). இதற்கு உதாரணமாக கெத்சமெனே தோட்டத்தில் நடந்த நிகழ்ச்சியைப் பார்ப்போம். அங்கு பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனின் காதை வெட்டியது மட்டுமே பேதுருவின் ஒரே பங்கு என்று அறிகிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அந்தக் காதை பொருத்தியதுமட்டுமல்ல, காயத்தையும் முற்றிலும் குணப்படுத்தினார். இன்று அற்புதங்கள் செய்கிறோம் என்று சொல்லுபவர்கள் இப்படிச் செய்ய முடியுமா? நிச்சயமாக முடியாது. பிறவிக் குருடன் ஒருவனை ஆண்டவர் சொஸ்தமாக்கினார். அந்த மனிதன், "பிறவிக் குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானது முதல் கேள்விப்பட்டதில்லையே"(யோவான்

*9:33)* என்று அழுத்தமாக சொன்னான். இன்று அற்புத ஊழியம் செய்பவரிடம், இறந்துபோன லாசருவை ஆண்டவர் உயிரோடு எழுப்பியதுபோல செய்யுங்கள் என்று சொன்னால், என்ன நடக்கும்? சாமார்த்தியமாக இதை மறைப்பதற்கு ஜனங்களிடம் காணப்படும் விசுவாசக் குறைவே இப்படிப்பட்ட பெரிய அற்புதங்கள் நடைபெறாமல் போவதற்கு காரணமென்று சாக்கு சொல்லுவது வழக்கமான ஒன்றாகிவிட்டது. புதிய ஏற்பாட்டில் இப்படிப்பட்ட அற்புதங்கள் நடைபெறுவதற்கு எல்லா இடங்களிலும் விசுவாசம் அவசியமாக இருந்ததாக நாம் வாசிக்கிறது இல்லயே. பத்து குஷ்டரோகிகள் சொஸ்தமான சம்பவத்தில், ஒன்பது பேருக்கு விசுவாசம் இருந்ததாக நாம் அறிகிறதில்லை. அவர்களில் ஒருவன் மாத்திரமே ஆண்டவரை விசுவாசித்து நன்றி சொல்ல திரும்பி வந்தான் என்று காண்கிறோம். லாசரு உயிரோடு எழும்பி வருவதற்கு அவனிடம் விசுவாசம் ஏதும் தேவைப்பட்டதாக நாம் அறியவில்லை. எனவே ஜனங்களிடம் அற்புதம் நடைபெறுவதற்கு விசுவாசக் குறைவே காரணம் என்று சொல்லப்படும் சாக்கு எப்படிச் சரியாக முடியும்? ஆண்டவர் நடப்பித்த அற்புதங்கள் பிரத்தியேகமானவைகள் என்றே இந்த சரித்திரங்கள் தெளிவாய் போதிக்கின்றன.

3. தாம் தேவனிடத்தில் இருந்து வந்த மேசியா என்று எல்லோரும் அறிந்துகொள்ளும் படியாக ஆண்டவர் நிகழ்த்திய எல்லா அற்புதங்களும் மறுக்க முடியாத அடையாளங்களாக வெளிப்பட்டது. யோவான் *3:2* -வது வசனத்தில் நிக்கொதேமு என்னும் இஸ்ரவேலின் போதகன் இதை அழகாக எடுத்துரைப்பதை நாம் வாசிக்கிறோம். ஆண்டவர் செய்த அற்புதங்களை பார்த்தவர்கள் “உண்மையாக நடந்ததா?" என்று கேட்கவில்லை. அதேபோல இஸ்ரவேல் எகிப்திலிருந்து

புறப்படுமுன் நடந்தவைகளைக் கண்ட எகிப்திய மந்திரவாதிகள் கலங்கி, “இது தேவனுடைய விரல்" என்று அறிக்கையிட்டார்கள். இவ்விதமான நியதிகளின் மூலம் இன்று இப்படிப்பட்ட அற்புதங்கள் உண்மையாகவே நடைபெறுகின்றனவா? என்று நிச்சயமாக தீர்மானம் செய்யமுடியும். எனவே அற்புதம் நடக்கிறது என்று சொல்லப்படும் பட்சத்தில் நிரூபிக்கப்படாவிட்டால் அது வேதத்திற்கு புறம்பானதாக மட்டுமே இருக்கமுடியும். சந்தேகத்திற்குரிய எந்த காரியத்தோடும் ஆண்டவர் சம்மந்தப்படவே முடியாது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், அவரால் நியமிக்கப்பட்ட அப்போஸ்தலர்களும் நடபித்த கிரியைகளுக்கும் இன்று நடைபெறுகின்றதாக சொல்லப்படுகின்ற அற்புத அடையாளங்களுக்கும் பெரிய இடைவெளிகள் இருப்பதை நாம் காணலாம்.

# 3. எவை பெரிய கிரியைகள்?

இன்று தங்களால் நடத்தப்படும் அற்புதங்கள், யோவான் *14:12*-ல் குறிப்பிடப்பட்டுள்ள "பெரிய கிரியைகள்" போலதான் என்று வியாக்கியானப்படுத்துவது எவ்வளவு பயங்கரமானது! இந்த வசனத்தின் பின்னணியிலுள்ள உண்மையான அர்த்தம் என்னவென்று இந்த அத்தியாயத்தில் காண்போம்.

ஆண்டவர் தாம் மரிப்பதற்கு முந்தின இரவு சீஷர்களுக்கு மேலறையில் இந்த வாக்குத்தத்தத்தை கொடுப்பதைப் பார்க்கிறோம். யூதாஸ் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்ட பின்பு தம்மோடிருந்த பதினொரு சீஷர்களையும் நோக்கி ஆண்டவர் கூறியதாவது, "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான்". இந்த பதினொரு சீஷர்களும் நிச்சயமாகவே அற்புதங்களைச் செய்தார்கள். ஏன், மரித்தவனையும் உயிரோடு எழுப்பினார்கள். இந்த வசனத்தை முழுவதும் நன்றாக கவனிப்போம். ஏனெனில், இன்றுள்ள விசுவாசிகளுக்கு இவைகள் மிகவும் பொருத்தமான வாக்கியங்களாகும். "...நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால்,... இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்" ஆண்டவர் செய்த பிரம்மாண்டமான கிரியைகள் எது? தண்ணீரை திராட்சரசமாக மாற்றியது அவைகளில் ஒன்று. தண்ணீரின் சுபாவம் விஞ்ஞான ரீதியாக மாறி புதிய சுபாவத்தைப் பெற்றது. அதுபோலவே அப்பங்களையும், மீன்களையும் பெருகச் செய்த சம்பவம் இதுவரை நடைபெறாத அற்புதமாகும். குஷ்டரோகிகள், குருடர்கள், திமிர்வாதக்காரர்கள் இப்படி அநேகருடைய

வாழ்வில் ஏற்பட்ட பிரம்மாண்டமான விடுதலையை எண்ணிப்பார்ப்போம். இந்த ஒவ்வொரு அற்புதத்தையும் கூர்ந்து கவனித்தால், ஆண்டவர் தமது மகத்துவத்தால், தெளிவான நோக்கத்திற்காக இவைகளை செய்வதைக் காணலாம். தண்ணீர் ரசமாக மாற்றப்பட்டபொழுது, திருமணத்தில் அப்பொழுது ஏற்பட்ட தற்காலிக பிரச்சனை மட்டும் தீர்க்கப்பட்டது. ஆனால் அதற்கு பிறகு இப்படி ஒரு அற்புதம் நடந்தாக நாம் வாசிப்பதில்லை. ஒரு வேளை கலிலேயாவில் இதே விதமான பிரச்சனைகள் நிறைய ஏற்பட்டிருக்கலாம். இந்த இடங்களிலெல்லாம் ஆண்டவர் இதேவிதமாக அற்புதம் செய்யவில்லையே. இன்னொரு விதமாக சொல்லப்போனால் இந்த பிரச்சனையை ஆண்டவர் முழுவதுமாக கலிலேயாவை விட்டு நீக்கிவிடவில்லையே. அது அவருடைய நோக்கமும் அன்று. ஆண்டவர் இரண்டு தடவை சிலரை போஷித்ததினால் அங்குள்ள உணவு பிரச்சனைகளை முற்றிலும் நீக்கினாரென்று சொல்லமுடியாது. அது ஆண்டவரின் திட்டமுமல்ல. அவர் அநேகரை சொஸ்தமாக்கினது நூற்றுக்கு நூறு உண்மையே. எனினும், அவர்கள் எல்லோருமே சரீரப்பிரகாரமாக பின்பு மரித்துப் போனார்களே! இன்னொரு விதமாகச் சொல்வதென்றால், வயது கூடுவதால் சரீரத்தில் இயற்கையாக ஏற்படும் பெலவீனமான விளைவுகளை ஆண்டவர் முற்றிலும் மாற்றிவிடவில்லையே. அவர் சர்வ அதிகாரம் கொண்டவராக இருந்தபோதிலும் அப்படிச் செய்யவில்லை. ஆண்டவர் லாசருவை உயிரோடு எழுப்பியது உண்மையாயினும், பின்னொரு நாளில் மீண்டும் சரீரப் பிரகாரமாக அவன் மரிப்பானென்று ஆண்டவருக்குத் தெரியுமே. அவன் உயிர் பெற்ற பொழுது ஏற்கனவே இருந்த, அழியக் கூடிய சரீரத்தோடு வாழ்ந்தானே அல்லாமல் மரணமே காணாத நிலைமைக்கு ஆண்டவர் அவனை மாற்றிவிடவில்லை. இந்தப் பின்னணியில்தான் பெரிய கிரியைகளை என்று ஆண்டவர் குறிப்பிட்டதைப் பற்றி சிந்திக்க வேண்டும். பெரிய கிரியைகள்

என்று ஆண்டவர் சொல்லும் பொழுது, அவர் தாமே தனிப்பட்ட முறையில் நிறைவேற்றாத கிரியை ஒன்று உண்டென்பதை நாம் விளங்கிக்கொள்ளலாம். தமது விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தி, மரித்து, உயிர்த்தெழுந்து இந்த பெரிய கிரியைக்கான வழியை உண்டுபண்ணிச் சென்றுள்ளதை அடிப்படையாகக் கொண்ட செயலே அதுவாகும். தமது பாவப்பரிகார மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் மூலம் தம்மை விசுவாசித்து தேவனின் பிள்ளைகளானவர்கள் (கடவுளின் வெளிப்பாடாகிய இயேசு கிறிஸ்துவின்) மகிமையான சுவிசேஷத்தை உலகின் எல்லா பகுதிகளுக்கும் அறிவிக்க வேண்டும் என்பதே பெரிய கிரியையாகும். இந்த சுவிசேஷத்தைக் கேட்கிற ஆயிரக்கணக்கானவர்கள், உலகெங்கிலும் பரிசுத்த ஆவியானவர் மூலம் ஆண்டவரை விசுவாசிப்பதற்கு இந்த கிரியை காரணமாக இருக்கிறது. பாவம் ஆட்கொண்டதினால் இருளடைந்து, ஆவிக்குரிய ரீதியில் மரித்துப்போன உள்ளங்களில் சுவிசேஷத்தின் மூலம் இந்த விசுவாசம் அற்புதத்தைச் செய்கிறது. இது ஒரு மாறாத நித்திய அற்புதமாகும். இந்த சுவிசேஷம் விசுவாசிக்கிறவர்களின் எல்லா பிரச்சனைகளுக்கும் கொடுக்கப்பட்ட நிரந்தரமான அற்புதமாக விளங்குகிறது. இப்படிப்பட்டவர்களின் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, இரட்சிக்கப்பட்டவர்களாக கிறிஸ்துவின் சரீரத்தில் நித்தியமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர். நிரந்தரமில்லாத, மேலோட்டமான சரீரப்பிரகாரமான சுகத்தைக் காட்டிலும் இது மேலான அற்புதம் என்பதை நாம் மறுக்க முடியுமா? அற்புதங்கள் ஒரு அடையாளத்திற்காக கொடுக்கப்பட்டனவே அன்றி வேறொன்றுக்குமல்ல. மனிதனின் ஆழமான தேவைகள் சந்திக்கப்படுவதற்காக அற்புதங்கள் ஒருபோதும் கொடுக்கப்படவில்லை.

ஆண்டவருடைய மரணம், உயிர்தெழுதலாகிய இரட்சிப்பின் திட்டமான இந்த பெரிய கிரியையில் இரண்டு அம்சங்கள் அடங்கியுள்ளன. அவைகள் பின்வருமாறு:

*1.* இந்த பெரிய கிரியை மூலம் மனித வம்சத்தின் மிகப் பெரிய சாபமாகிய பாவம் மற்றும் அதன் விளைவுகளை ஆண்டவர் நிவர்த்தி செய்கிறார். தனி நபரிடத்திலோ அல்லது ஒரு கூட்டத்திலோ ஜெபத்தோடும், கருத்தோடும் நாம் சுவிசேஷத்தை பகிந்துகொள்ளும் பொழுது ஆவியானவர் கிரியை செய்கிறார். இதன் பாதிப்பு சரீர அற்புதங்களைக் காட்டிலும் மிக முக்கியமானது. இப்படி தமது பிரதான கட்டளைக்குக் கீழ்படிந்து சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்கள் மூலம் ஆண்டவர் நடத்துகிற அற்புதங்களைக் காட்டிலும், வேறு பெரிய கிரியை இல்லையே.

*2.* மேலும் இரட்சிப்பின் சிகரமான, எதிர்காலத்தில் நமது சரீரத்தை முழுவதுமாக ஆண்டவர் எப்படி விடுவிக்கிறார் என பவுல் ரோமர் *8:23*-ல் அழகாக விவரிக்கிறார். “அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்". இரட்சிப்பின் மேன்மையாக நாம் மரணத்தினின்று எழுப்பப்பட்டு, மகிமையான சரீரத்தை ஒரு நாளில் பெறப்போகிறோம். அப்பொழுது நம்மிடம் காணப்படும் எல்லா நோய்களும், பெலவீனங்களும், குறைவுகளும் முற்றிலும் நீக்கப்பட்டு, வேதனைகளும், கஷ்டங்களும் மாறி பாவம் அறவே ஒழிந்து, ஆண்டவரை நாம் நித்தியமாக தரிசிக்க போகிறோம். தற்போது நாம் இப்படிப்பட்ட சரீர விடுதலையை முற்றிலும் அனுபவிக்காவிட்டாலும், அநித்தியமான இந்த உலகத்தில் நாம் கடந்துவரும் பலவிதமான அனுபவங்கள் மூலம் இப்படிப்பட்ட மேன்மைக்கு ஆண்டவர் நம்மை ஆயத்தப்படுத்துகிறார். நமது விருப்பம், நமது சுகம், நமது வழிகள், நமது தேவைகள், நமது ஆசைகள் என்று சுயத்தை சுற்றியே நாம் இயங்கிக் கொண்டிராதபடி, உண்மையான ஆசீர்வாதங்களுக்காக நமது கவனம் அவர் மேலிருக்கும் படியாக, அவர் தமது கிருபையினால் நம்மை ஆயத்தப்படுத்துகிறார். இதற்கு

மாறாக, அடையாள போதக வாழ்க்கையும், அனுபவங்களும் சுயத்தையே பிரதானமாக சுற்றி விரும்பி வாழும்படி மட்டும் போதிக்கின்றன. இது தவறானது மட்டுமல்ல, ஆண்டவரின் வார்த்தைகளோ, கட்டளைகளோ, திட்டங்களோ, அல்லது அவரது நேரமோ, சித்தமோ, வாக்குத்தத்தங்களோ முதலிடம் பெறுவதில்லை.

இன்றைய சபையின் பிரதான தேவை எழுச்சியான புது கண்டுபிடிப்புகளோ, சுகமளிக்கும் கூட்டங்களோ, புது பாஷைகள் பேசுவதோ அல்ல. அதற்கு மாறாக பரிசுத்தமுள்ளதும், மாறாததும், போதுமானதுமான ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தையின் மீது முழுப் பிரியம் வைத்து, நித்தியமாக அழிகின்ற அபாயத்திலுள்ள ஜனங்கள் மேல் உண்மையான அன்பு வைத்து, பரிசுத்த ஆவியானவரின் பெலத்தோடு சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்ற உணர்வே ஆகும்.

# 4. இன்றைய வரங்களின் நிலை என்ன?

எப்பொழுதெல்லாம் இன்றைய அடையாளப் போதகர்கள் வரங்களை உபயோகிக்கிறோமென்று சொல்லுகிறார்களோ, அப்பொழுதுதெல்லாம் இந்த வரங்கள் நிச்சயமாக புதிய ஏற்பாட்டு திருசபையின் காலத்தில் அப்போஸ்தலருக்குக் கொடுக்கப்பட்ட "அடையாள" வரங்களைப் போல அல்ல என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இன்று தாங்கள் அந்நிய பாஷைகளைப் பேசும் வரம் பெற்றுள்ளதாக சிலர் கூறும்பொழுது, இந்த வரம் ஆதித்திருச்சபையில் இருந்ததைப் போல என்று சில விசுவாசிகள் அப்படியே ஏற்றுக் கொள்ளுகின்றனர். ஆனால் இன்று நாம் கேள்விப்படுகின்ற அந்நிய பாஷைகளில் பேசுதல், அற்புத சுகங்கள் அளித்தல் போன்றவைகள் புதிய ஏற்பாட்டு சபைகளில் காணப்பட்டது போலல்ல. அந்த நாட்களில் வாழ்ந்த மக்கள் கேட்டிராத, படித்திராத மொழிகள் தான் இந்த அந்நிய பாஷைகள் ஆகும். இன்று முற்றிலும் வித்தியாசமாக, தங்கள் விருப்பப்படி இதை பரலோக பாஷை என்றோ, நவீன பாஷை என்றோ விளக்கமளிக்க முற்படுகின்றனர். புதிய ஏற்பாட்டு சபையின் காலத்தில் காணப்பட்ட அற்புத சுகங்களிலும் மருத்துவ ரீதியாக சரீர செல்களிலும் ஏற்பட்ட உயிருள்ள மாற்றங்களே உண்மையான அற்புதங்களாகும். ஆண்டவர் தமது அப்போஸ்தலர் மூலம் நடப்பித்து பார்க்கும்படியான பிரத்தியட்சமான மாற்றத்தைக் கொண்டு வந்தது. இன்று அப்படி மருத்துவ ரீதியாக சரீர செல்களில் மாற்றம் காணப்படுகின்ற அற்புதங்கள் இல்லையே.

இன்று அந்நிய பாஷைகளை நியாயப்படுத்துவதற்காக ஆதித்திருச்சபையில் "பரலோக பாஷை" பேசப்பட்டதாக அர்த்தம் சொல்லுகின்றனர். 1 கொரிந்தியர் 13:1-ம் வசனத்தை

இதற்கு மேற்கோளிட்டு காட்டுகின்றனர். அதாவது பவுல் கூறிய, “நான் மனுஷர் பாஷைகளையும், தூதர் பாஷைகளையும் பேசினாலும்..." என்கிற வசனத்தைக் குறிப்பிடுவர். பவுல் இந்த அதிகாரத்தில் “அன்பின் முக்கியத்துவத்தை" வலியுறுத்திச் சொல்லுவதற்காக உவமானமாக சொல்லுகிற காரியங்களை இப்படித் தவறாகப் போதிப்பது வழக்கமாகிவிட்டது. இதை நாம் சற்று கவனிப்பது மிக நல்லது. நான் முடியாததொரு காரியத்தை செய்தாலும் (இங்கு தூதர் பாஷை பேசினாலும்) என்னில் அன்பில்லாவிட்டால் பயன் ஏதும் இல்லை என்று பவுல் அழுத்திச் சொல்லுவதைக் கவனிக்க வேண்டும். இதே அதிகாரத்தில் அன்பை வலியுறுத்துவதற்காக இன்னும் சிலவற்றைப் பவுல் உவமானமாகக் கூறுவதைப் பார்க்கிறோம். இரண்டாம் வசனத்தில், நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்க விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை என்று சொல்லும்பொழுது, நாம் மலைகளை பெயர்க்க வேண்டும் என்று அர்த்தப்படுத்த முடியுமா? ஒரு விசுவாசிக்கு பரலோகத்தில் மட்டுமே காணப்படக்கூடிய முழுமையான அறிவு மற்றும் விசுவாசத்தன்மையை பவுல் இங்கு படம் பிடித்து, விசுவாசியிடம் இந்த உலகத்தில் காணப்பட வேண்டிய அன்பின் தன்மையைத் தான் இப்படி உவமானமாக கூறுவதைக் காண்கிறோம். இதை விட்டுவிட்டு நாம் தூதர் பாஷைகளைப் பேச வேண்டும் என்று போதிப்பதை எவ்வாறு தேவனுடைய வசனத்தின் அடிப்படையிலான போதனை என்று ஏற்றுக்கொள்ள முடியும்?

அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் மற்ற மொழி பேசுகிறவர்களும், அந்நிய பாஷைகளைப் புரிந்து கொண்டார்களென வாசிக்கிறோம். அந்நிய பாஷை பேசப்பட்ட முதல் சம்பவத்திற்கு எட்டு வருடங்களுக்குப் பின்பு

பெந்தகொஸ்தே நாளைப் போன்றே அந்நியபாஷைகளில் பேசப்பட்ட சம்பவத்தை பேதுரு விவரிக்கிறதை அப் 11:15-17 -வது வசனங்களில் வாசிக்கிறோம். அந்நிய பாஷைகள் உண்மையாகவே மற்ற மொழிகள் என்று 1கொரிந்தியர் நிருபம் முழுவதிலும் பவுல் வலியுறுத்திக் கூருகிறதைப் பார்க்கலாம். பரியாச உதடுகளினாலும், அந்நிய பாஷைகளிலும் இந்த ஜனத்தோடே பேசுவாரென்று ஏசாயா 28:11-12 -வது வசனங்களில் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டபடி, யூதர்களுக்கு பாடம் புகட்டுவதற்கான ஒரு அடையாளமாகவே ஆண்டவர் இந்த வரத்தை ஏற்படுத்தினாரென்று மேலே குறிப்பிட்டுள்ள வசனங்களின் பின்னணியோடு ஆராய்ந்தால் புரிந்து கொள்ளலாம். புறஜாதிகளைக் கொண்டு ஆண்டவர் இஸ்ரவேலை சிட்சித்தாரென்று இங்கு விளங்குகின்றது. யூத ஜனங்கள் பாபிலோனியரால் சிறைபிடிக்கப்பட்டதை வைத்து இதன் அர்த்தத்தை நாம் விளங்கிக்கொள்ளுகிறோம். இந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக புதிய ஏற்பாட்டு காலத்தில் கொடுக்கப்பட்ட அந்நிய பாஷைகளின் அடையாளத்தின் மூலம் இதை உறுதி செய்யலாம். புறஜாதியிலிருந்து இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளை தாழ்வாக மதிப்பிட்ட யூத மக்களுக்கு, “திருச்சபைக்கு தாமே காரணர்" என்று தேவன் தமது மகத்துவத்தை விளங்கச் செய்வதற்காக கொடுத்த அடையாளம் தான் இந்த அந்நியபாஷை. பவுலும், அப்போஸ்தல நடபடிகளை எழுதிய லூக்காவும் அந்நிய பாஷைகள் என்ற பதத்திற்கு வித்தியாசமான அர்த்தங்களைக் கொடுத்திருப்பார்கள் என்று யூகிக்க முடியாது. அதாவது ஒருவர் இதை அந்நிய மொழியென்றும், இன்னொருவர் இதை ரகசிய அர்த்தமுள்ள மொழி என்றும் எப்படி சொல்ல முடியும்? என்ற கேள்வி நிச்சயம் எழுகிறதல்லவா! பவுலும், லூக்காவும் நிச்சயமாக இப்படிப்பட்ட குழப்பத்தை உருவாக்க முயற்சித்திருக்கமாட்டார்கள். தேவனுடைய வார்த்தையின் மூலாதரமான பரிசுத்த ஆவியானவர் உண்மையின்

ஆவியானவராயிற்றே. புதிய ஏற்பாட்டுச் சபையில் சீஷர்கள் பேசியதை போன்று, இன்று எந்தக் கூட்டங்களிலும் தாங்கள் அறியாத, படித்திராத பாஷைகளில் பேசுகிறோமென்று யாரும் சொல்ல முடியாது. பயிற்சிகளின் மூலமும், பல உபகரணங்கள் மூலமும் இன்று பேசப்படும் அந்நிய பாஷைகளை சுலபமாக நாம் கற்று பேசமுடியுமல்லவா? வேதத்தில் அப்படி நாம் காண்பதில்லையே.

தங்கள் சொந்த மொழியில் சிந்திப்பதையோ, ஜெபிப்பதையோ நிறுத்திவிட்டு, சாதாரணமாக நாம் சிந்திக்கும் வார்த்தைகளை மறக்க ஆண்டவர் உதவி செய்வாரென நம்பி நாவைத் திறக்கும்பொழுது ஆண்டவர் நமது சத்தத்தை பரலோக பாஷையாக மாற்றித்தருவார் என்றும், தொடர்ந்து நாம் சில வார்த்தைகளை சொல்லிப்பழக வேண்டுமென்றும் சில அடையாளப் பிரசங்கிமார் போதிக்கின்றனர். இப்படிச் செய்யும்பொழுது தான் நமக்கு புரியாத, உணர்ச்சிப்பூர்வமான வார்த்தைகள் வெளிவரும் என்றும் கற்று கொடுக்கின்றனர். அந்நிய பாஷைகளில் பேசுகிறவர் அதைப்புரிந்தே பேசுகிறார் என்பதும், வியாக்கியானம் செய்கிறவர் மூலம் உறுதியாகிறது என்பதும் புதிய ஏற்பாட்டு காலத்து உண்மை என்பதை பின் அதிகாரமொன்றில் நாம் காணப்போகிறோம். இதனால் இந்த வரம் போலியானது என்பதற்கோ, அதன் செய்தியை அலட்சியப்படுத்துவதற்கோ எந்த முகாந்திரமுமில்லை. இப்படி எல்லா வகைகளிலும் அந்நிய பாஷைகள் உண்மையாயிருந்த படியினால் யூத மத வைராக்கியம் கொண்டிருந்தவர்களும் இந்த வரங்கள் பிரயோகிக்கப்பட்ட பொழுதெல்லாம், இதைக் குறித்து பிரம்பிப்படைந்து, ஆச்சரியப்பட்டதாகவே காண்கிறோம்(அப் **2:6-7).** எனினும் அந்நிய பாஷைகள் இரட்சிப்புக் கேதுவான விசுவாசத்தைக் கொண்டுவராமல், யூதர்களின்

விசேஷ சிலாக்கியங்கள் முடிவு பெற்று, புதிய ஏற்பாட்டு திருச்சபையின் மீது தேவனுடைய வல்லமை ஊற்றப்பட்டதை அடையாளமாகவே உணர்த்தியது. இந்த அடையாளத்தின் பின்னணியில் எப்போதும் ஒரு தெளிவான செய்தி இருந்தது. இன்று இந்த அடையாளத்திற்கு அவசியமேயில்லை.

டென்னிஸ் பென்னட் என்பவர் எழுதிய "பரிசுத்தாவியானவரும் நீயும்" என்ற நூலில், அந்நிய பாஷைகளைப் பற்றி எழுதப்பட்டுள்ளதை நாம் படித்தால், இந்த வகை உபதேசம் தேவனுடைய வார்த்தைக்கு எவ்வளவு தூரமாக உள்ளது என்று விளங்கிக் கொள்ளலாம். அந்நிய பாஷைகளில் பேசுகிறவர்கள் தாங்கள் பேசுகிறது இன்னதென்றே அறியாமல் பேசுகிறார்கள் என்று இவர் கூறுகிறார். டச்சு நாட்டு பெண்மணி ஒருவரின் அனுபவத்தை திரு. பென்னட் தனது நூலில் விவரித்துள்ளதைக் கீழ்க்கண்ட உரையாடலில் நாம் காணலாம்.

பெண்மணி: "ஒருமுறை நான் அந்நிய பாஷை பேசினேன். மீண்டும் அதேபோல பேச விரும்புகிறேன்".

திரு. பென்னட்: "நீங்கள் ஏன் மீண்டும் பேச முயற்சி செய்யவில்லை?"

பெண்மணி: "நான் இப்பொழுதெல்லாம் என் குழந்தையோடு விளையாட்டு பாஷையில் பேசி சந்தோஷமாக நேரம் செலவிடுகிறேன். நான் அந்நிய பாஷையில் பேசினால், இந்த விளையாட்டு பாஷைத்தான் திரும்பி வருமோ? என்ற ஐயப்பாடு உள்ளது. எனவே நான் முயற்சி செய்ய விரும்பவில்லை".

திரு: பென்னட்: "இந்த விளையாட்டு பாஷைதான் ஆவியானவர் உங்களுக்குக் கொடுத்துள்ள அந்நியபாஷை வரம் என்று

நினைப்பூட்ட விரும்புகிறேன்".

புதிய ஏற்பாட்டு காலத்தில் கொடுக்கப்பட்டுள்ள அந்நிய பாஷை காலப்போக்கில் மறக்கப்பட்டுவிட்டதாகவும், தங்களைப் போன்ற வரம் பெற்றவர்களே அதைக் கண்டுபிடித்து மீண்டும் பேச உற்சாகமூட்டுவதாகவும் இவர் கூறுகிறார். மேலும் அந்நிய பாஷையில் பேசும்பொழுது முதலில் நாம் எதையும் மனதில் நினைக்கமாட்டோம் என்றும், சில நேரத்தில் ஆவி விடுவிக்கப்படும் போது நம் நினைவைக் கடந்து தேவனுடைய கொடுத்தலைப் போன்ற உணர்வைப் பெறுவோம் என்றும் எழுதியுள்ளார். அப்பொழுது சில புரியாத வார்த்தைகளைப் பேசுவோம் என்ற உணர்ச்சிகளோடு சம்பந்தப்பட்ட அனுபவங்களையே இவர் எழுதுகிறார். இங்கு பக்திவிருத்திக்கோ, ஏதாவது செய்திக்கோ இடமில்லாத நிலையில் இதை புதிய ஏற்பாட்டு விசுவாசிகளின் அனுபவத்திற்கு முற்றிலும் மாறுபட்ட போதகமாகவே காண்கிறோம். மேலும் இதே விதமான தனது ஆலோசனையின் மூலம் உணர்ச்சிகரமான அனுபவத்தை ஒரு இளம் போதகர் பெற்றதாகவும் திரு. பென்னட் தொடர்ந்து எழுதுகிறார்.

இன்று வரங்கள் என்று சொல்லப்படுபவைகள் புதிய ஏற்பாட்டு சபையில் காணப்பட்டது போல் நிரூபிக்கப்படுகிறதில்லை. அப்போஸ்தலரும் அவர்களைச் சார்ந்தவர்களும் பிரயோகித்த வரங்களை யாரும் போலியாகச் செய்ய முடியாதபடி அவர்களுக்கே உரிய தனித்தன்மை பெற்றிருந்ததெனக் காணலாம். மாறாக, இன்று மற்ற மதத்தினரும், தனிமனித வழிபாடுகளில் ஈடுபட்டிருப்பவர்களும் கூட இத்தகைய செயல்களில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம். புத்த மதத்தினர், இந்துக்கள், முகமதியர்கள் மற்றும் ஆவிகளை வணங்குகிறவர்களும், ஆண்டவரின் வார்த்தையை முழுவதும் நம்பாத, ஆனால் "கிறிஸ்தவர்கள்" என்று சொல்லுபவர்களும்

கூட இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுகிறதைப் பார்க்கிறோம். புத்தி சுயாதீனத்தினால் மனதளவிலும், உணர்ச்சியிலும் ஏற்படும் இனம் புரியாத வேறுபாடுகளின் நிமித்தம் சில சமயங்களில் மனிதர்கள் வேறு மொழிகளில் பேச முடியுமென்று மருத்துவ ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து நாட்டில் சில ஆண்டுகளுக்கு முன்பு உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் சிலர் பத்திரிகை நிருபர்கள் முன்னிலையில் மற்றவர் மனதை மயக்கி தங்கள் இஷ்டத்திற்கு இயங்கச் செய்யும் “ஹிப்னாடிசம்" வித்தையின் மூலம் அநேக பாஷைகளைப் பேசி நடித்துக் காண்பித்துள்ளனர். அந்நிய பாஷை பேசுவதுதான் ஆவியானவரின் அபிஷேகத்திற்கு அடையாளம் என்று போதிப்பது எவ்வளவு தவறானது!

புதிய ஏற்பாட்டில் நாம் காணும் இந்த வரங்கள் யாராலும் போலியாக செய்யப்படக்கூடாமல், தேவனுடைய மகத்துவமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த அடையாளங்களின் பின்னணியில் தெளிவான செய்தி அடங்கியிருக்கிறது. இன்றைய சில போதங்களும், அதைச் சார்ந்த அனுபவங்களும் ஆண்டவரிடத்திலிருந்து வருகின்ற அடையாளங்கள் என்று நாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதே உண்மை.

# 5. வரங்களின் நோக்கம்

புதிய ஏற்பாட்டுச் சபையின் காலத்தில் வரங்கள் தெளிவான செய்தியுடன் கொடுக்கப்பட்ட "அடையாளங்களாக" இதுவரையிலும் சிந்தித்த நிலையில், இந்த வரங்களைப் பற்றிய வித்தியாசமான விளக்கங்களை நாம் கேள்விப்படுவது ஒன்றும் ஆச்சரியமான காரியமல்ல. ஆனாலும், இந்த உபதேசங்களும், வியாக்கியானங்களும் தேவனுடைய வார்த்தைக்கு எவ்வளவு தூரமாயுள்ளது என்று இந்த அத்தியாயத்தில் நாம் சிந்திப்பது மிகவும் பயனுடையதாக இருக்கும்.

அந்நிய பாஷைகளில் பேசுவது ஒரு சமயத்தில் விசுவாசிகளின் ஐக்கியத்தில் ஒரு செய்தி சொல்லுவதற்காக என்றும், இன்னொரு சமயத்தில் ஆண்டவரை ஆராதிப்பதற்காக என்றும் சிலர் விளக்கம் சொல்லுகின்றனர். கூடவே விசுவாசிகள் பலப்படவும், ஆண்டவரிடம் நெருங்கி வருவதற்குமான விசேஷ அனுபவமாகவும் இதை சித்தரிக்கின்றனர். அந்நிய பாஷைகள் தேவனோடு பேசுவதே என்றும் இதை பேசுகிறவரோ மற்றவர்களோ விளங்கிக் கொள்ளவே முடியாதென்றும் சாதிக்கின்றனர். சிலர் இன்னுமொருபடி மேலே சென்று அற்புதங்களும், அடையாளங்களும் நடைபெறாததால்தான், ஜனங்கள் நாம் சொல்லுகிற செய்தியைக் கேட்டு மனம் மாறுகிறதில்லை என்றும், எனவே அநேகமாயிரம் ஜனங்கள் ஆண்டவரை விசுவாசிப்பதற்கு இந்த அடையாளங்கள் அவசியமென்றும் வலியுறுத்திக் கூறுகின்றனர். இந்த வார்த்தைகள் சத்தியத்திற்கு அப்பாற்பட்டவைகள்.

அந்நியபாஷைகளை நோக்கிப்பார்த்தால், புதிய ஏற்பாட்டுத் திருச்சபையில் தமது பிரசன்னம் தங்கியிருப்பதை யூதர்களுக்கு ஒரு படிப்பினையாக ஏற்படுத்தியதாகவே 1கொரி 14:21-22 -ம் வசனங்களை, ஏசாயா 28:11-12 -ம் வசனங்களோடு ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால் நாம் கண்டுகொள்ளலாம். இந்த வரங்கள் தேவனுடைய தொடர்ச்சியான வெளிப்பாடாக, மேசியா உண்மையாகவே உலகத்தில் வந்ததையும், பரிசுத்த ஆவியானவர் சபையின் நடுவில் வந்ததையும் குறிக்கும் அடையாளங்களாகும். மேலும் அப்போஸ்தலர்கள் ஆண்டவரால் நியமிக்கப்பட்ட செய்தியாளர்கள் என்றும், ஆவியானவரால் ஏவப்படுகின்ற வார்த்தைகளை எழுதுகின்ற அதிகாரமுடையவர்கள் என்றும் நிரூபிக்கப்படுவதற்காகவே அற்புதங்களை செய்யும்படியான வரங்களும் அப்போஸ்தலர்களுக்கு கொடுக்கப்பட்டது. ஆதித்திருச்சபையில் ஜனங்கள் பாஷைகளைப் பேசினபொழுது, அவைகள் பரிசுத்த ஆவியானவரால் அருளப்பட்டவைகள் என்று எவ்விதமான சந்தேகத்திற்கும் இடமில்லாமல் விளங்கினது. அதேபோல் அடையாளங்களும் அற்புதங்களும் தெளிவான செய்தியோடு கூடியது என்று சொல்லலாம். கூடியிருந்த அந்நியர்கள் தேவனுடைய மகத்துவதத்தைக் கண்டு பிரமிப்படைந்தனர் என்றே நாம் வாசிக்கிறோம்.

இந்த சத்தியத்தை விட்டுவிலகிச் செல்லுகிறதினிமித்தமே "அடையாளமாகக்" கொடுக்கப்பட்ட இந்த வரங்களைப் பற்றி முன்னுக்குப்பின் முரணாக சிலர் வியாக்கியானம் செய்வது ஆச்சரியமான காரியமல்ல. இயற்கையாக நாம் பேசுகிற காரியம் நமக்கே விளங்கவில்லை என்றால், யார்-யாரிடத்தில் என்ன பேசுகிறார்கள் என்று எப்படி அறிந்துகொள்ள முடியும்? புதிய ஏற்பாட்டில் அந்நிய பாஷைகள் தேவன் மனிதனோடு பேசின சம்பவமாகவே காண்கிறோம். இது அசாதாரணமான முறையில் கொடுக்கப்பட்டாலும், தெளிவான அர்த்தமுள்ள உண்மையான பாஷைகளாகப் பின்னர் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இன்று சொல்லப்படுகிற அந்நியபாஷைகளோ அப்படி அல்ல. பேசுகிறவர்களுக்கும் கேட்கிறவர்களுக்கும் விளங்காத, அர்த்தமில்லாத வீண் பேச்சாகவே காணப்படுகின்றது.

அப்படியானாலும் அவிசுவாசிகள் கிறிஸ்துவை விசுவாசிப்பதற்கு இந்த அடையாளங்களும், அற்புதங்களும் அவசியமாகின்றது என்று சொல்லப்படுகின்ற வாதத்திற்கு என்ன பதில் சொல்லமுடியும்? என்று நாம் கேட்கக் கூடும். இன்று நாம் கேள்விப்படுகின்ற அற்புதங்களும், அடையாளங்களும் புதிய ஏற்பாட்டின் காலத்தோடு அடிப்படையில் ஒப்பிடவே முடியாது. எப்படியாயினும் புதிய ஏற்பாட்டின் காலத்திலும் இப்படிப்பட்ட அற்புதங்களைப் பார்த்தவர்கள் எல்லோருக்குள்ளும் இந்த அற்புதங்கள் இரட்சிப்புக் கேதுவான விசுவாசத்தைக் கொண்டு வந்ததாக நாம் காண்கிறதில்லை. இந்த புதிய செய்தி தேவனிடமிருந்து வந்ததற்கான அடையாளங்களாக அநேகருக்குக் காணப்பட்டாலும், இந்த அடையாளங்கள் தம்மில் தாமே அவர்களுக்கு ஆவிக்குரிய விசுவாசத்தைக் கொண்டுவர பெலனற்றிருந்ததைத் தெளிவாக நாம் அறியவேண்டும். நாம் ஏற்கனவே வாசித்த அப் 14:11-12 வசனங்களில் காணப்படும் சம்பவத்தைப் போல, இந்த சமயங்களில் மேலோட்டமாக ஏற்படும் சிலரது பக்தி வைராக்கியத்தால், சில சமயங்களில் மிஷினரிப் பணிகளும் பாதிக்கப்படுகின்றன என்பதுதான் உண்மை. எந்தக் கோணத்திலும் புதிய ஏற்பாட்டு சபையை உறுதிப்படுத்துவதற்கும், ஆண்டவரால் ஏற்படுத்தப்பட்ட அப்போஸ்தலர்களின் நிலையை உறுதிப்படுத்துவதற்காகவும் கொடுக்கப்பட்ட அடையாளங்களாகவே இந்த வரங்களைக் காண்கிறோம். இந்த நிலையை உறுதிப்படுத்துவதற்காக சில வசனங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த வசனங்களை நாம் கருத்தோடு சிந்திப்பது பயனுடையதாக இருக்கும். (அப் 5:12; ரோமர் 15:18; 2கொரி 12:12; எபிரெயர் 2:3-4).

*"அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது. எல்லாரும் ஒருமனப்பட்டுச் சாலொமோனுடைய மண்டபத்தில் இருந்தார்கள்" (அப் 5:12).*

*"புறஜாதியாரை வார்த்தையினாலும் செய்கையினாலும் கீழ்ப்படியப்பண்ணும்படிக்கு, அற்புத அடையாளங்களின் பலத்தினாலும், தேவ ஆவியின் பலத்தினாலும், கிறிஸ்துவானவர் என்னைக்கொண்டு நடப்பித்தவைகளைச் சொல்வதல்லாமல் வேறொன்றையும் சொல்ல நான் துணிவதில்லை" (ரோமர் 15:18).*

*"அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமைகளோடும், உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே" (2கொரி 12:12).*

எபிரெயர் 2:3-4 வசனங்கள் பலத்த அற்புத அடையாளங்களை கடந்தகால செயல்களாகக் குறிப்பிட்டுள்ளதை நாம் கவனிக்க வேண்டும். அப்படியானால், அப்போஸ்தலருடைய தன்மையை உறுதிப்படுத்தும் அடையாளங்களாக புதிய ஏற்பாட்டுத் திருச்சபையில் காணப்பட்ட பலத்த செயல்கள், தேவனுடைய வார்த்தை முழுவதும் எழுதப்பட்டு நமக்கு கொடுக்கப்பட்ட பிறகு அவசியமில்லாததாகிறதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தப் பின்னணியில்தான் விசுவாசத்தை வளர்ப்பதற்கும், காப்பதற்கும் வரம் பெற்ற ஊழியர்கள் என்று சொல்லுபவர்கள் அற்புத அடையாளங்களைச் செய்யவேண்டுமென்ற வாதத்தின் அடிப்படையே தவறான ஒன்றாக நாம் கருத வேண்டியுள்ளது. மாறாக, அற்புதங்களையும் அடையாளங்களையும் சார்ந்து

அதை மட்டும் எதிர்பார்க்கிற உண்மையான கிறிஸ்தவர்களின் விசுவாசம் பெலனடையாமல், இயற்கையாக பெலவீனமாகி நாளடைவில் சந்தேகத்திற்கு இடமாகிறது. அற்புதங்களைக் கொண்டு அல்ல, தமது வார்த்தையைக் கொண்டு மட்டுமே ஆண்டவர் இரட்சிப்புக்கேற்ற விசுவாசத்தை நம்மில் செயல்படுத்துகிறார். மேலும் வாஞ்சையுள்ள விசுவாசியின் வாழ்வில் தமது வார்த்தையின் மூலமே ஆண்டவர் கிரியை செய்து ஆசீர்வாதத்தைக் கொண்டுவருகிறார். விசுவாசத்தைப் பெலப்படுத்த அடையாளங்கள் தேவை என்ற வாதம் 1கொரி 1 -ம் அதிகாரத்தில் உள்ள போதனைகளுக்கு தூரமாயிருப்பதை நாம் அறியலாம். சிலுவையைப் பற்றிய உபதேசமே தேவனுடைய வல்லமை விளங்குவதற்கு ஏதுவாக உள்ளதென்ற சத்தியத்தை மீண்டும், மீண்டும் நினைவுபடுத்திய பின்பு, அடையாளத்தை தேடுகின்ற யூதர்களுக்கும், ஞானத்தை தேடுகிற கிரேக்கர்களுக்கும் அது கொடுக்கப்படுகிறதில்லை என்று பவுல் அழுத்தமாகச் சொல்லுகிறதை 1கொரி 1:22-23 -ல் வாசிக்கிறோம். ஒருவனை இரட்சிக்க பலனில்லாத அடையாளத்தையும், ஞானத்தையும், முறையே யூதர்கள் கேட்டும், கிரேக்கர்கள் தேடியும் அதைக் கொடுக்காமல், மாறாக யூதருக்கு இடறலாகவும், கிரேக்கருக்கு பைத்தியமாகவும் இருக்கிற சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கத்தையே ஆசீர்வதிக்கிற அடையாளமாக ஆண்டவர் கொடுத்துள்ளார்.

முதன்முதலாக கல்வாரியின் செய்தியை அறிவிக்கிறவர்கள், அதாவது அப்போஸ்தலரும் அவர்களைச் சார்ந்தவர்களும், தேவனுடைய வார்த்தையை எழுதுவதற்கு ஆவியானவரால் ஏவப்பட்டார்கள் என்ற நிரூபணத்திற்கான அடையாளமாக மட்டுமே வரங்கள் கொடுக்கப்பட்டன என்பதை நாம்

தீர்க்கமாக விளங்கிக்கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தை முற்றிலும் எழுதப்பட்டு வேத புத்தகமாக நமது கரங்களில் கொடுக்கப்பட்ட நிலையில், சிலுவையைப் பற்றின உபதேசமே நமது கடமையேயன்றி, அடையாள அற்புதத்தை நடப்பிப்பதல்ல. அடையாளப் போதகர்களுக்கு இடம் கொடுத்தால், தேவனுடைய இந்த பிரதான நோக்கத்திற்கு முற்றிலும் சம்பந்தமில்லாத புதிய காரணங்களையும் கண்டுபிடித்து ஜனங்களை குழப்பிவிடுவார்கள். இது உண்மைதானே?

# 6. தேவனுடைய வார்த்தை பரிபூரணமானதா?

அடையாளப் போதகங்களின் பின்னணியில் நாம் தேவனுடைய வார்த்தையின் "பரிபூரண தன்மையை" ஆராய்ந்து பார்க்க வேண்டியது மிக அவசியமாயிருக்கிறது. தேவனுடைய வார்த்தை பரிபூரணமாகிவிட்டதா? அல்லது சிலர் சொல்லுகிறபடி இன்னும் நேரடியாக வெளிப்பாடுகள் தொடர்ந்து தரப்படுகிறதா? என்பது நாம் கேட்க வேண்டிய மிக முக்கியமான கேள்வியாகும்.

புதிய வெளிப்பாடுகளையும், புதிய தீர்க்கத் தரிசனங்களையும் தாங்கள் இன்றும் ஆண்டவரிமிருந்து நேரடியாக பெறுகிறோம் என்று சொல்லுபவர்கள், வேதாகமம் "தேவனுடைய முழு வெளிப்பாடு" *(Complete Revelation)* என்ற அஸ்திபாரத்தையே குலைக்கிற பயங்கரமான காரியத்தை சொல்லுகிறவர்களாக ஆகிறார்கள். இவ்வித அடையாளப் போதகங்கள் தேவனுடைய வார்த்தையின் முழு அதிகாரத்தையும் குறைத்து மதிப்பிடுகிறது என்பதை முழுவதும் உணராமலேயே அநேகர் இந்த போதனைகளில் ஈர்க்கப்பட்டுள்ளனர். அப்போஸ்தலர் நாட்களோடு (அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வெளிப்பாடுகளோடு) ஆண்டவரின் நேரடி வெளிப்பாடு முடிவு பெற்றுவிட்டது என்பதை தேவனுடைய வார்த்தையை கருத்தோடு படிக்கும்பொழுது நாம் தெளிவாக அறிந்துகொள்ளலாம். தமது சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரால் எல்லா சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தப்பட்டு, முழுமையான, பரிபூரண நேரடி வெளிப்பாட்டைப் பெறுவார்கள் என்று தேவன் கற்றுக்கொடுப்பதை யோவான் **14:46, 15:26-27, 16:12-14** -ம்

வசனங்களில் இருந்து நாம் விளங்கிக் கொள்ளலாம். தேவனுடைய வார்த்தை முழுவதும் முற்றுப் பெற்றது என்பதை யூதாவின் புத்தகம் 3-வது வசனத்தில் வாசிக்கிறோம். இந்த இடத்தில் "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக" எழுதப்பட்டுள்ளதையே நாம் இவ்வாறு விளங்கிக் கொள்ளலாம். மேற்கொண்டு வேறொரு வெளிப்பாட்டிற்கு அவசியமில்லாதபடி தேவனுடைய வார்த்தை முற்றுபெற்றுவிட்டது என்பதை வெளிப்படுத்தின விசேஷம் கடைசி வசனங்களில் நாம் வாசிக்கிறோம். தரிசனங்களும், தீர்க்கதரிசன உரைகளும் முற்றுபெற்று முத்திரையிடப்பட்டுவிட்டது.

ஆண்டவர் இன்றும் தீர்க்கதரிசனங்கள் மற்றும் அந்நியபாஷைகள் மூலமாக நேரடியாகப் பேசுகிறார் என்பது மிகவும் அழுத்தமான உண்மை என்று ராட்மேன் வில்லியம்ஸ் என்ற அடையாளப் போதகர் தமது புஸ்தகத்தில் எழுதியுள்ளார். "ஆண்டவர் இப்பொழுது என் மூலம் சொல்லுகிறதாவது" என்ற வார்த்தையுடன் சபை ஐக்கியத்தில் யாராவது ஒருவர் திடீரென்று எழுந்து பேச ஆரம்பித்தால் எப்படி நாம் இதை ஏற்றுக் கொள்ளுவது? "ஆண்டவர் சொல்லுகிறதாவது" என்று ஏசாயா, எரேமியா போன்ற தீர்க்கத்தரிசிகள் உரைத்ததை நாம் வேதத்தில் வாசிக்கும்போது, அதை தேவனுடைய வார்த்தையாக அங்கீகரிக்கலாமே ஒழிய, இன்று சில பிரசங்கிமார்கள் சொல்லுவதையல்ல. புதிய ஏற்பாட்டோடு தேவனுடைய நேரடி வெளிப்பாட்டுடனான தீர்க்கத்தரிசனங்கள் நிறைவு பெற்ற நிலையில் இன்று அநேகர் தீர்க்கத்தரிசனம் சொல்லுகிறோம் என்று புறப்பட்டுள்ளனர். இவர்கள் உரைக்கிறதாகச் சொல்லும் தீர்க்கத்தரிசனங்கள் ஒரு குறுகிய வட்டத்தில் அல்லது ஒரு சபையில் நடைபெறும் காரியங்களாகவே இருக்கிறது. ஒரு ஊரில் ஒரு மனிதன் உண்மையில்லாதவன் என்று குற்றஞ்சாட்டப்பட்டுவதையும்,

சாதாரண வியாதியிலிருந்து ஒருவர் விடுதலை பெறுவதையும் உலகத்தின் தேவைகளின் அடிப்படையில் மாத்திரம் இன்று தீர்க்கத்தரிசனமாக சொல்லுகிறார்கள். இதுவும் நடைமுறையில் உண்மையாக நிரூபிக்கப்படுவதில்லை. இவர்கள் இப்படிப்பட்ட காரியங்களில் எந்தவகையில் ஈடுபட்டாலும் இதை தேவனுடைய வார்த்தையின் மேன்மை மற்றும் பரிபூரணத்தை குறைத்து மதிப்பிடும் செயலாகவே கருதமுடியும்.

தேவனுடைய எந்தவொரு சத்தியமும் வார்த்தை வாயிலாகவோ, விசேஷமான ஒலியாகவோ இன்று “நேரடியாக" கொடுக்கப்படுவதில்லை. நமக்கு தேவையான ஆலோசனைகளும், வாக்குத்தத்தங்களும், வழிகாட்டுதலும், போதனைகளும், ஆறுதல்களும், தீர்க்கதரிசனமும் முழுமையாக தேவனுடைய வார்த்தையில் ஏற்கனவே கொடுக்கப்பட்டுவிட்டதால் இதற்குமேல் வேதத்திற்கு வெளியே எந்த வெளிப்பாட்டையும் எதிர்பார்க்கவே முடியாது. ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தையை அஸ்திபாரமாக வைத்தே நமது விசுவாசம் கட்டப்பட வேண்டும். இதுவே சிறந்த அஸ்திபாரமாகும்.

வேறுவகையிலும் அடையாளப் போதகர்கள் தேவனுடைய வார்த்தையின் பரிபூரணத்தை குறைக்கிறார்கள். அது எப்படியென்றால், தாங்கள் நேரடியாகப் பெறுகிறதாகக் கூறும் வெளிப்பாடுகள், தரிசனங்கள் மற்றும் ஏவுதல்களின் அடிப்படையில் மட்டுமே ஜனங்கள் நடக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்துவதின் மூலம் தேவனுடைய வார்த்தையைப் படிக்கவோ, விசுவாசிக்கவோ அல்லது அதற்கு ஒப்புக்கொடுத்து கீழ்படிய அனுமதிக்காத போது தேவனுடைய மகத்துவமான ஜீவ வார்த்தையை இவர்கள் தாழ்த்துகிறார்கள். தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்கள் ஆகும்படிக்கு முன்பு எழுதியிருக்கிறவைகள் எல்லாம் நமக்குப் போதனையாக

எழுதியிருக்கிறது என்று ரோமர் 15:4 -ல் நாம் வாசிக்கிறோம். மேலே நாம் ஆராய்ந்து பார்த்த இந்த காரியங்கள் மூலம் தேவனுடைய வார்த்தையைப் பற்றிய மூன்று மிக முக்கியமான அம்சங்களை அடையாளப் போதகர்கள் புறக்கணிக்கிறதை நாம் கவனிக்கலாம்.

1. தேவனுடைய வார்த்தை “நேரடி வெளிப்பாடாக" முற்றுப்பெற்றது *(Complete).*

2. தேவனுடைய வார்த்தை நமது தேவைக்கு போதுமானதாகக் கொடுக்கப்பட்டுள்ளது *(Totally Sufficient).*

3. தேவ வார்த்தை நமது எல்லா சூழ்நிலைகளுக்கும், பிரச்சினைகளுக்கும் போதுமான வழிகாட்டியாக உள்ளது *(Perfect Guide).*

அறிந்தோ, அறியாமலோ இந்த பரிபூரண அம்சங்களை நாம் விட்டு விலகும் போது, தேவனுடைய வார்த்தையை தூஷிக்கும் நபர்களோடு சேரும் அபாயமிருக்கவே செய்கிறது. அநேக பெயர் கிறிஸ்தவர்கள் வேத புஸ்தகத்தை மட்டுமல்லாது தங்கள் சபையின் பாரம்பரியங்களையும், தலைவர்களையும் நம்புகின்றனர். விஞ்ஞானம் மற்றும் புதிய ஆராய்ச்சி போன்றவற்றிற்கு இணையாக வேத புரட்டர்கள் தேவனுடைய வார்த்தையை வைத்துள்ளனர். இந்த நிலைக்குதான் பெரும்பாலான அடையாளப் போதகங்கள் வந்துவிட்டது. இதன் பின்னணியில் 1689 -ம் ஆண்டு “சபை விசுவாச அறிக்கை", தேவனுடைய வார்த்தையின் மேன்மையை பின்வருமாறு அங்கீகரிக்கிறது.

“தேவனுடைய வார்த்தை எல்லா வகையிலும் பரிபூரணமானது. இதற்கு மேல் புதிதாக தேவனால் வெளிப்படுத்தப்படுபவைகள் என்று எதையும் சேர்க்கவோ அல்லது புதிதான தரிசனங்களைப் பெறுகிறோம் என்று விரிவுபடுத்தவோ எக்காரணத்தைக் கொண்டும் முயற்சிக்கக் கூடாது".

சபையின் “அஸ்திபார காலம்" புதிய ஏற்பாட்டுக் காலத்தோடு முடிகிறதாக நாம் காண்பதால், அந்த சமயத்தில் அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கதரிசிகளுக்குக் கொடுக்கப்பட்ட “அடையாள வரங்கள்" பின்னர் அவசியமற்றதாகிறது. நாம் எக்காரணத்தைக் கொண்டும் "கிறிஸ்துவே சபைக்கு தலையானவர்" என்பதை மறுப்பதில்லை. ஏனெனில் எந்த மனுஷனும் கிறிஸ்து இல்லாத அஸ்திபாரத்தைப் போடக்கூடாது. அப்படியானால், எபேசியர் **2:19-20** -ல் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரமென்று நாம் வாசிப்பதை எப்படி விளங்கிக் கொள்ள முடியும்? இயேசு கிறிஸ்துவே நமக்கு பதிலாக, நமது பாவங்களுக்கான ஒரே மெய்யான பரிகாரமாக மரித்து, நமது விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவருமான மகா பிரதான ஆசாரியராக இருந்தும், அவர்தாமே வேதத்தில் ஒரு வார்த்தையையும் "எழுதவில்லை". இந்த பணியைச் செய்வதற்கென்றே ஆண்டவர் அப்போஸ்தலரையும், தீர்க்கதரிசிகளையும் ஏற்படுத்தி, நேரடி வெளிப்பாடுகளைக் கொடுத்து, "அடையாள வரங்களினாலே" நிரப்பி அவர்கள் மூலமாக செயலாற்றியதையே எபேசியர் **2:19-20** -ம் வசனங்களிலிருந்து நாம் அறிகிறோம். சிலுவையில் ஆண்டவர் சொன்ன வார்த்தைகளையோ, அவர் செய்த அற்புதங்களையோ, அவரது உயிர்த்தேழுதலையோ நாம் அறிந்து கொள்ள இதுவே ஏதுவாகிறது.

நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார். மத்தேயு மற்றும் யோவான் என்னும் அப்போஸ்தலர்களும், மாற்கு மற்றும் லூக்கா என்னும் தீர்க்கத்தரிசிகளும், நான்கு சுவிசேஷங்களை எழுதியுள்ளனர். அப்போஸ்தலர் என்பவர்கள் ஆண்டவரால் தெரிந்துகொள்ளப்பட்டு, மூன்றரை ஆண்டு காலமும் அவருடைய ஊழியத்தில் நேரடியாகப் பங்கு பெற்றவர்கள். இவர்களில் சிலர் தேவனுடைய வார்த்தையை எழுத சிறப்பாக

ஏவப்பட்டவர்கள். தீர்க்கதரிசிகள் என்பவர்கள் ஆண்டவரோடு ஊழியத்தில் நேரடியாக தேவனிடத்தில் இருந்து செய்தியைப் பெற்றவர்கள். இவர்களில் சிலர் தேவனுடைய வார்த்தையை எழுத ஏவப்பட்டவர்கள் என்று அறியலாம். புதிய ஏற்பாடு முழுவதும் இப்படிப்பட்டவர்களால் எழுதப்பட்டுள்ளது. ஆண்டவருடன் ஊழியத்தில் ஈடுபட்ட யூத அப்போஸ்தலருக்கும், புறஜாதி உலகத்தாருக்குமிடையே பாலமாக செயல்பட்ட பவுல் தேவனாலே அப்போஸ்தலனாக விசேஷமாக தெரிவு செய்யப்பட்டவர். 1கொரி 15:7-8 -வது வசனங்களில், அப்போஸ்தலனாக ஏற்படுத்தியதை பவுல் குறிப்பிட்டுள்ளார். நேரடி வெளிப்பாடு முடிந்துவிட்டது என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறவர்கள் இன்று உண்டு. அப்போஸ்தலரைப் போன்ற விசுவாசம் தங்களுக்கு இருப்பதினால், தங்கள் மூலமாகவும் ஆண்டவர் புதிய வெளிப்பாடுகளை கொடுப்பதாக இவர்கள் விளம்பரங்கள் செய்கின்றனர். வேதத்தின் அடிப்படையில் இந்த வாதத்தை நாம் அங்கீகரிக்கவே முடியாது. ஆதித் திருச்சபையின் அஸ்திபாரம் எனும் காலம் கடந்து, மாளிகையாக இசைவாகக் கட்டப்படுகிற காலத்திற்கு நாம் வந்துள்ளோம். நமக்கு விசுவாசம் இருக்கிறது அல்லது இல்லை என்ற கேள்வியோ, ஆண்டவருக்கு வல்லமை இருக்கிறது, இல்லை என்ற வாதமோ இந்த அடையாள வரங்களைப் பொறுத்தளவில் எழவில்லை. ஆண்டவர் தமது சித்தத்தின்படி சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும் ஏற்படுத்தி கிரியை செய்து வந்துள்ளார். இன்று நமக்கு கொடுக்கப்பட்டுள்ள சிலாக்கியங்களும், பொறுப்புகளும் எந்த விதத்திலும் அவர்களை விடவும் குறைவானதாக இல்லாதபடியால் நாம் ஆண்டவரை மேன்மைப்படுத்த வேண்டும்.

தேவன் தமது திட்டத்தில் நமக்கு கொடுக்காத வரங்களுக்காக நாம் பரிதபிக்கவோ, கவலைப்படவோ அவசியமில்லை. இதற்காக தேவனுடைய வார்த்தையை

திரித்து அர்த்தப்படுத்த ஒருபோதும் முயற்சிக்கக் கூடாது. மேலும் அப்போஸ்தலரின் இறுதி நாட்களில் அவர்கள் இந்த "அடையாள" வரங்களை உபயோகித்தாக நாம் காண்கிறதில்லை. பவுலின் கடைசி நிருபங்களிலுள்ள அவரின் அனுபவங்களே இதற்கு சான்றாகும். பிலி 2:26-27 -ம் வசனங்களில், தன்னோடு ஊழியத்தில் சம்மந்தப்பட்டிருந்த எப்பாப்பிரோதீத்துவை நீண்ட நாட்களாக வியாதியோடிருந்ததை குறிப்பிடுகிறார். பவுல் ஒரு அப்போஸ்தலனாயிற்றே; ஏன் அவனைக் குணப்படுத்த முயற்சி செய்யவில்லை? துரோப்பீமுவை வியாதிப்பட்டவனாக மிலேத்துவிலே தான் விட்டு வந்ததாக 2 தீமோ 4:20 -வது வசனத்தில் கூறியுள்ளார். ஏன் துரோப்பீமுவை குணமாக்கவில்லை? இன்னும் சொல்லப்போனால் தீமோத்தேயுவுக்கு காணப்பட்ட சரீர பலவீனத்திற்கு பவுல் 1 தீமோ 5:23 -ல் கூறும் ஆலோசனையே இதற்கு சரியான உதாரணமாகும். "நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்." இங்கே தேவனின் பரிபூரண சித்தத்திற்கு இவர்கள் தங்களை அர்ப்பணிக்கிறதைக் காண்கிறோமேயன்றி, அற்புத சுகங்களையல்ல. தேவனுடைய வார்த்தை முழுவதும் நேரடியாக வெளிப்படுத்தப்பட்டு முடிகின்ற தருவாயில் அடையாளமாகக் கொடுக்கப்பட்ட இந்த வரங்கள் முற்றுப் பெற்றதையே இப்படி நாம் அறிகிறோம். இதற்கு மேல் நாம் எதையும் கூட்டவோ, குறைக்கவோ முயற்சி செய்யக் கூடாது. "தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்; தம்மை அண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடகமானவர். அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே, கூட்டினால் அவர் உன்னைக் கடிந்துகொள்வார், நீ பொய்யனாவாய்" (நீதி 30:5-6), "இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப்

புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்"( வெளி 22:18-19), மற்றும் வெளி 6-19 அதிகாரங்கள் ஆகியவைகளில் தெளிவாக இதற்கான ஆலோசனைகள் கொடுக்கப்பட்டுள்ளது. நாம் தேவனுடைய வார்த்தையின் வரம்பை மீராதபடிக்கு ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். தேவனின் பரிபூரணமான வார்த்தையோடு ஒரு வார்த்தையாவது கூட்டினாலும் நாம் நியாயந்தீர்க்கப்படுவோம். தங்களுக்கு தேவன் இன்றும் நேரடி வெளிப்பாடு கொடுக்கிறார் என்று சொல்லி அதற்கு மற்றவர்கள் கீழ்படிய வேண்டுமென்று சொல்லுபவர்களை இந்த வசனங்களில் அடிப்படையிலேயே சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். நாம் போதுமான, பரிபூரண தேவனுடைய வார்த்தைக்கு செவி சாய்க்கிறவர்களா? தேவ வார்த்தையின் வழியிலே நடப்பவர்களா? நம்மை நாமே சோதித்து அறிந்துகொள்ளுவது நல்லது.

# 7. அந்நியபாஷைகள் தனி மேம்பாட்டிற்கானதல்ல

அந்நியபாஷைகள் தனிப்பட்ட விசுவாசியின் மேம்பாட்டிற்காகக் கொடுக்கப்பட்டதென்று சிலர் பிரசங்கிக்கின்றனர். உணர்ச்சி வசப்பட்டு, உத்வேகமான அனுபவம் பெற இன்று அநேகர் இந்த வரத்தை அறிந்தும், அறியாமலும் விரும்புகின்றனர். ஆனால், எந்த வரமும் சபையின் பக்தி விருத்திக்காக கொடுக்கப்பட்டதேயன்றி மற்றபடியல்ல. 1கொரிந்தியர் 12:7 -வது வசனத்தின் மூலம் இதை நாம் விளங்கிக்கொள்ளலாம். ஆங்கில வேதாகமத்திலும் மூல பாஷையிலும் "எல்லாருடைய பிரயோஜனத்திற்கானது" என்று எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு வரமும் சபைக்கு பிரயோஜனமாகக் காணப்படுவது மிக அவசியம். இங்கு சபை என்று சொல்லும்பொழுது ஒரு குறிப்பிட்ட சபை பிரிவை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், பரந்த கண்ணோட்டத்தோடு சிந்திக்க வேண்டும். தங்கள் காலத்தில், அப்போஸ்தலர் எல்லா சபைகளிலும் பிரசன்னம் ஆகாவிட்டாலும், இவர்களின் போதனைகள் எல்லா சபைகளுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது. புதிய ஏற்பாட்டு திருச்சபையின் உண்மையை யூதர்கள் அறிந்துகொள்ளுவதற்கு உறுதியாக அந்நிய பாஷைகள் ஏற்படுத்தப்பட்டது என்ற பின்னணியை நாம் ஏற்கனவே ஏசாயாவின் புத்தகத்தில் இருந்து அறிந்து கொண்டோம். எனவே அந்நிய பாஷைக்குப் பின் அடங்கியுள்ள செய்தி மிக முக்கியமானது என்பதை இதன் மூலம் தெளிவாக அறிகிறோம்.

அந்நிய பாஷைகள் அர்த்தப்படுத்தப்படும் போதுதான் அது முழுமை பெற்று ஒரு செய்தியாகிறது. அப்படியானால் நேரடியான தீர்க்கதரிசனத்தைக் காட்டிலும் இது மேன்மை பெற்றதல்லவே. தேவனிடமிருந்து ஒரு செய்தி சொல்லப்பட்டதால் இதுவும் தீர்க்கதரிசனமாகத் தான் கருதப்பட்டது. எனவே இது தனிப்பட்ட விசுவாசியின் மேம்பாட்டிற்காக கொடுக்கப்படவில்லை என்பதே உண்மையாகும். தேவன் ஒரு வார்த்தையைக் கொடுக்கும்பொழுது நிச்சயமாக அதில் செய்தி இருக்கத்தானே செய்யும்? இப்படியிருக்க அந்நிய பாஷையில் பேசுகிறவர்கள் அதின் அர்த்தத்தை அறிந்தே பேசுகிறான் என்று நாம் விளங்கிக் கொள்ளலாம். எனவேதான் அவன் பக்திவிருத்தி அடைகிறான் என்று நாம் 1கொரிந்தியர் 14:2-4 -ஆம் வசனங்களிலிருந்து கற்றுக் கொள்ளலாம். ஆனால், கொரிந்து சபையில் பேசப்பட்ட அந்நிய பாஷையின் அர்த்தத்தை சபைக்கு விளக்கிச் சொல்லப்படாத கவனக் குறைவை பவுல் சுட்டிக் காட்டுவதை நாம் சரியாக விளங்கிக் கொள்ளவேண்டும். இங்கு பேசப்படுகிற அந்நியபாஷை அர்த்தப்படாத பட்சத்தில், யாருக்கும் அது விளங்காத நிலையில், அந்நிய பாஷையில் பேசுகிறவர் தேவனோடு பேசுகிறவராக மாறுகிறார் என்று பவுல் 2 -வது வசனத்தில் கூறுவதைப் பார்க்கிறோம். எப்படியென்றால், தேவன் மாத்திரம் அதை விளங்கிக் கொள்ளும் நிலையில், தேவனுக்கு இவன் பிரசங்கம் செய்யும் வித்தியாசமான நிலையாக மாறிவிடுகிறது. அப்படியானால் அந்நிய பாஷை பேசும் நோக்கமே மாறிவிடுகிறது. தேவனிடமிருந்து வருகிற செய்தி அந்நியபாஷைக்கு அர்த்தம் சொல்லுகிற வரமுடையவரால் உறுதிப்படுத்தப்படும். அர்த்தம் சொல்லப்படுகிற நிலையில் ஏற்றுக்கொள்ளப்படும் போது அது சபைக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவருகிறது. (ஆண்டவரிடமிருந்து வருகிற செய்தி எதுவும், அதைச் சொல்லுகிறவருக்கும் ஆசீர்வாதமாக இருக்கும் என்கிற சத்தியத்தை மறந்துவிடக்கூடாது). ஆண்டவரிடத்திலிருந்து

சபைக்கு செய்தி உண்டென்பதையே அந்நியபாஷை மற்றும் அதை அர்த்தப்படுத்துதல் என்று இங்கு நாம் விளங்கிக் கொள்ளுகிறோம் (1கொரி 14:5). தனிப்பட்ட பக்தி விருத்திக்காக அந்நியபாஷை கொடுக்கப்பட்டதென்று 1கொரி 14:4 வசனத்தை மட்டும் வைத்து நாம் வியாக்கியானப்படுத்த முடியாது. அர்த்தத்தைச் சொல்லாத பட்சத்தில் ஏற்படக்கூடிய விளைவுகளையே பவுல் இங்கு எடுத்துக் காட்டுகிறதை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும்.

கூடி வந்துள்ள சபைக்கு ஆண்டவரிடமிருந்து ஒரு தெளிவான செய்தி உண்டென்ற போதனையை மாற்றி வெறும் உணர்ச்சிகரமான அனுபவமாக மட்டும் அந்நியபாஷையைக் கருதுகிறவர்களுக்கே, மீண்டும், மீண்டும் பவுல் இவ்விதமாக தெளிவுபடுத்துவதை நாம் பார்க்கிறோம். கிரேக்க மொழியில் எப்பொழுதெல்லாம் "பக்திவிருத்தி" என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறதோ, அப்பொழுதெல்லாம், எல்லாக் குழப்பங்களையும், இரகசியங்களையும் கடந்து நமக்கு தெளிவை உண்டுபண்ணுகிற உண்மையான அனுபவமாகவே அர்த்தமாகிறது. எனவே அந்நியபாஷை தனிப்பட்ட பக்திவிருத்திகானதென்று நாம் ஏற்றுக் கொள்ளுவதை விட, சபையின் மேம்பாட்டிற்கானதென்று ஏற்றுக்கொள்ளலாம். போதனையின் மூலமாகவோ, சாட்சியின் மூலமாகவோ, ஆறுதலின் மூலமாகவோ, இப்படிப்பட்ட பக்தி விருத்திக்கேதுவான ஊழியஞ்செய்ய முடியும். (கருத்துடன் இந்த வசனங்களை தியானிக்கவும். ரோமர் 14:19, 15:2; 1 கொரி 8:1, 10:23, 12:2, 14:3; 2 கொரி 10:8, 12:9, 13:10; எபேசியர் 4:12-16; 1தெசலோ 5:11; 1தீமோ 1:4-5).

தாங்கள் பேசுகிற அந்நியபாஷையின் அர்த்தம் தங்களுக்கு தெரியாவிட்டாலும், அந்நியபாஷையில் பேச முடியுமென்று, சில அடையாளப் போதகர்கள் 1 கொரி 14:13-

*14 வசனங்களை மேற்கோள் காட்டி தவறாகப் போதிக்கின்றனர். விசுவாசிக்கு இப்படிப்பட்ட சந்தேகம் எழுவதற்கு வாய்ப்பே இல்லை. காரணம், ஆவிக்குரிய எல்லா நடவடிக்கைகளிலும் ஒரு விசுவாசியின் மனது (கருத்து) நிச்சயம் தெளிவாக ஈடுபட வேண்டும் (1 கொரி 14:15). அப்படியானால் இதற்கு முந்தின வசனங்களை நாம் எப்படி அர்த்தப்படுத்தக் கூடும்? அந்நியபாஷையில் பேசுகிற வரம் பெற்றவர் ஒருவர், சபை நடுவே ஒரு செய்தி சொல்ல மனதில் வடிவம் பெறுகிறார். எனினும் தற்சமயம் அதின் உண்மையான அர்த்தம் தனக்கு விளங்காத பட்சத்தில் அந்த சமயத்தில் தனது மனதை கட்டுப்படுத்திக் கொண்டு, அதற்காக ஜெபிக்க வேண்டுமென்று பவுல் கூறுகிறார். அந்நியபாஷை மனதில் இழையோடினாலும், அர்த்தம் விளங்காதபட்சத்தில் ஆண்டவரின் செய்தி ஏதும் சொல்ல வாய்ப்பில்லாத சூழ்நிலையில் கடைபிடிக்க வேண்டிய அணுகுமுறையே இங்கு பவுலால் கையாளப்படுகிறது. எனவே அந்நியபாஷைகள் பேசுவது,*

*1. ஆண்டவரின் மகத்துவத்தை யூத குலத்தில் முக்கியமானவர்கள் முதலில் விளங்கிக் கொள்ளுவதற்காக கொடுக்கப்பட்டது.*

*2. சபையின் பக்தி விருத்திக்காக கொடுக்கப்பட்டது.*

*3. அர்த்தம் சொல்லப்படாவிட்டால் பிரயோஜனம் ஏதுமில்லை.*

*அந்நிய பாஷை பேசப்படும் சமயத்தில் உற்சாக மிகுதியில் செய்தியை மிகைப்படுத்திச் சொல்லுவதையோ, வித்தியாசமாகப் பகிர்ந்து கொள்ளுவதையோ தவிர்ப்பதற்காக சபையில் அந்நியபாஷைகளின் அர்த்தம் சொல்லுகிற வரம்பெற்ற சக விசுவாசிகள் இருப்பதை உறுதி செய்து கொள்ளவேண்டும். இப்படி பேசுகிறவரும், அர்த்தப்படுத்துகிறவரும் அதின் அர்த்தத்தை அறிந்து உறுதிப்படுத்துவது எல்லா வகையிலும் தேவனுடைய வார்த்தைக்கு உடன்பட்டதே. இப்படி யாரும் உறுதி செய்ய முடியாதபட்சத்தில், ஆண்டவர் தமக்கு சித்தமான*

சமயத்தில் இதைப் பயன்படுத்த வேண்டி தனக்கு தானே ஜெபித்து சமாதானமடைய வேண்டும் என்பதே 1 கொரி 14:28 -ல் நாம் கற்றுக் கொள்ளும் ஆலோசனையாகும்.

பவுல் அந்நியபாஷை பேசுதலைப் பற்றிக் குறிப்பிடுகிற சாரம்சம் இதுதான். இது பேசுகிறவருக்கு நிச்சயம் விளங்கக் கூடியதே, சபையின் பக்தி விருத்திக்காக கொடுக்கப்பட்டது. அர்த்தம் சொல்லுகிற வரமுடையவர் இருக்கும் பட்சத்தில் இது உறுதிப்படுத்தப்படுகிறது. அப்படியே அர்த்தஞ் சொல்லுகிறவர் இல்லாத பட்சத்தில் ஆண்டவரின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து, ஆண்டவருடைய நடத்துதலுக்காக காத்திருக்க வேண்டுமென்பதேயாகும்.

# 8. நாம் வரங்களை நாடலாமா?

எல்லா விசுவாசிகளும் வெளிப்படையாகக் காணப்படக் கூடிய வரங்களை நாட வேண்டுமென்று 1 கொரி 12:31 -ம் வசனத்தை மேற்கோள் காட்டி சிலர் போதிக்கின்றனர். இங்கு,

1. யாரிடத்தில் பவுல் இதைச் சொல்லுகிறார்? மேலும்

2. முக்கியமான வரங்கள் என்று எவைகளைப் பவுல் குறிப்பிடுகிறார் என்று நாம் சிந்திப்பது மிகவும் பயனுடையதாயிருக்கும்.

ஒரு தனிப்பட்ட மனிதனுக்காக இந்த ஆலோசனையை பவுல் சொல்லாமல், சபையாகச் சேர்ந்து செய்ய வேண்டிய காரியமாகவே இதை அறிவுறுத்துகிறார்.

தனிப்பட்ட விசுவாசி வரம் வேண்டுமென்று வாஞ்சிப்பதைக் காட்டிலும், சபையாக ஆண்டவரின் இராஜ்ஜியத்தின் மேன்மைக்காக இதைச் செய்ய வேண்டும். எல்லோரும் அப்போஸ்தலராக நாடுவார்களேயாகில் அது எவ்வளவு தவறானது. எது முக்கியமான வரம்? அந்நியபாஷை பேசுவதா? அல்லது சுகமளிப்பதா? 1 கொரி 12:28 -ல் இதற்கான பதிலைக் காண்கிறோம். மிக முக்கியமான வரமாக இங்கு அப்போஸ்தல வரம் காணப்பட்டுள்ளது உண்மையே. இருந்தாலும், இன்று சபை எப்படி அப்போஸ்தல வரத்தை நாடமுடியும்? கிரேக்க மூல பாஷையில் "நாடுங்கள்" என்ற பதம் "வைராக்கியம் பாராட்டுவது" என்ற செயலுக்கான வார்த்தையாகும். அப்போஸ்தலருடைய போதகத்தை நாம் ஏற்றுக் கொண்டு, அதற்காக வைராக்கியம் பாராட்ட வேண்டுமென்பதே, அப்போஸ்தல வரத்தை நாடுவதென்ற பதத்திற்கு விளக்கமாகும். இன்று அப்போஸ்தலர் மூலம்,

ஆண்டவர் நமக்குக் கொடுத்துள்ள போதகத்தை உண்மையாய் எடுத்துச் சொல்லுகிற போதகர்கள் மற்றும் வேதப் பண்டிதர்களை நாம் உற்சாகப்படுத்துவதே இதன் பொருளாகும். இப்படியிருக்கும் பொழுது அந்நிய பாஷையில் பேசுவதை நாட வேண்டுமென்ற போதனை எங்கிருந்து வந்தது?

அதே போல் தீர்க்க தரிசன வரத்தை நாடுங்கள் என்று பவுல் 1கொரி 14:39 -ல் கூறியதை வேத புஸ்தகம் முழுவதும் எழுதப்படும் வரையிலும் கொடுக்கப்பட்ட தீர்க்கத்தரிசன ஊழியங்களை அன்றும், இன்றும் நாம் கனப்படுத்த வேண்டும் என்பதை திரித்து பிரசங்கம் செய்வதின் விளைவேயாகும். எல்லோரும் தீர்க்கத்தரிசனம் சொல்லுதலை விரும்ப வேண்டுமானால் ஆண்டவர் தமது சித்தத்தின்படி வரங்களை பகிந்து கொடுக்கிறாரென்ற வசனத்திற்கு நாம் பதில் சொல்லவே முடியாது. 1கொரி 12:7-11, 29-30 -ம் வசனங்களில் நாம் விரும்புகிறபடி வரங்கள் கொடுக்கப்படுவதில்லை என்பது மிகவும் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளது. எனவே முக்கியமான வரங்களை நாடுங்கள் என்று சொல்லும்பொழுது, ஆண்டவரின் சித்தத்திற்கு உட்பட்டு சபையாக நாடவேண்டிய வரங்களைப் பற்றியக் காரியமேயல்லாமல் தனிப்பட்டவர்களுக்கல்ல.

ஆவிக்குரிய வரங்களை 1கொரிந்தியரில் குறிப்பிடும் பவுல், ரோமர் 12:6-8 மற்றும் எபேசியர் 4:12-13 -ம் வசனங்களில் அந்நியபாஷைகளில் பேசுவதைப் பற்றி குறிப்பிடப்படாமலிருப்பத்தையும் கவனிக்க வேண்டும். இரட்சிக்கப்பட்ட பிறகு, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெற்று அதற்கு அடையாளமாக நிச்சயம் அந்நியபாஷை பேசப்பட வேண்டுமென்று சிலர் போதிக்கின்றனர். இந்த விதமான உபதேசங்களால் அநேகர் பாதிக்கப்பட்டு எவ்வகையிலாவது அந்நியபாஷையில் பேச கட்டாயமாக்கப்படுகின்றனர்.

அப்படியே இந்த வரம் தனிப்பட்ட மேம்பாட்டிற்கான ஆவிக்குரிய வரமென்றும் மாற்றப்பட்டுள்ளது. ஆவிக்குரிய வாழ்வில் முன்னேற வேண்டுமென்பது மறுபிறப்படைந்த கிறிஸ்தவனின் வாஞ்சையாக இருப்பதில் தவறில்லை, எனினும் கண்டிப்பாக அந்நியபாஷையில் பேசவேண்டுமென்று நினைக்கும்பொழுது இரண்டு வகைகளில் நாம் தேவனுடைய வார்த்தையை தவறாகப் புரிந்து கொள்ளுகிறவர்களாவோம்.

*1.* ஆவியானவர் ஒருவரில் செயல்படுகிற முறையை நாம் தவறாக விளங்கிக் கொள்ளுகிறோம் என்று அர்த்தமாகிறது. ஒருவன் மறுபிறப்படையும் போது நிச்சயமாக, எவ்வித பயமுமின்றி மீட்கப்பட்ட குடும்பத்தில் ஆவியானவரால் கொண்டுவரப்படுகிறான். இதன் பின்பு, இந்த விசுவாசி தொடர்ந்து ஆவியானவரால் நிரப்பப்பட முடியும், நிரப்பப்பட வேண்டும். அப்போஸ்தலர் நடபடிகளிலும், எபேசியர் *5:18* -ம் வசனத்திலும் இந்த போதனையை நாம் காண்கிறோம். ஆவியானவரால் நிரப்பப்படுதல் எல்லா சமயங்களிலும் உணர்ச்சிகரமாக இருக்கவேண்டும் என்று நாம் நினைக்கக் கூடாது. பாவத்தை மேற்கொள்ள போதுமான பெலனும், ஞானமும், வழிநடத்துதலும், சாட்சியில் தெளிவும், நமது அன்றாட செயல்களில் அர்ப்பணிப்பும் ஒவ்வொரு நாளின் நடைமுறை அனுபவமாக இருப்பதே இதன் உண்மையான அடையாளமாகும், ஒரு விசுவாசியின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் கிரியையை வேதத்தின் அடிப்படையில் சுருக்கமாக இப்படிச் சொல்லலாம். "ஞானஸ்நானம் ஒன்று, நிரப்புதல் பல" *(One Baptism, Many fillings).* ஒரு சிலர் போதிப்பதைப் போல் அந்நிய பாஷைகளோடு மட்டும் இது சம்மந்தப்படுவதில்லை. (இதற்கு உதவியாக கொடுக்கப்படுகிற வசனங்களை நாம் யோவான் *7:37-39;* அப் *2:38;* ரோமர் *5:1-5,8,9,15;* 1கொரி *6:11,19-20,12:13;* கலா*3:4-5,4:4-6;* எபே

*1:13-14; 1தெச 1:5-6; 1யோவான் 4:12-13 ஆகிய பகுதிகளில் காணமுடியும். இதை தியானிப்பது நல்லது).*

*2. பெந்தகொஸ்தே நாளில் நடந்த சம்பவத்தின் அர்த்தத்தை நாம் தவறாக விளங்கிக் கொண்டிருக்கிறோம். எல்லா விசுவாசிகளுக்கும் பெந்தகொஸ்தே அனுபவம் மிக அவசியம் என்று சிலர் போதிக்கின்றனர். எப்படி ஆண்டவராகிய இயேசு ஒரேதரம் தம்மை பலியாக ஒப்புக்கொடுப்பதற்கு "வார்த்தை மாம்சமாகி" இந்த உலகத்தில் வந்தாரோ, அதேபோல் பரிசுத்த ஆவியானவர் பலமாக சபையின்மீது ஒரேதரம் நிரந்தரமாக இறங்கி வந்து, மத வைராக்கியங் கொண்ட யூதர்களால் நடத்தப்பட்ட சபையின் ஆராதனைக்கு ஒரு முடிவைக் கொண்டு வந்ததற்கான அடையாளமாக கொடுக்கப்பட்டாரே அல்லாமல், வேறு வித்தியாசமான அனுபவங்களைப் பெறுவதற்காக அல்ல என்பதை நினைவில் கொள்ளவேண்டும். புதிய ஏற்பாட்டு சபை துவங்கிய நாளிலிருந்து, தமது நேரடி ஆளுகையின் கீழ் பரிசுத்த ஆவியானவர் தொடர்ந்து கிரியை செய்கிறாரே அன்றி திரும்பிச் செல்லவில்லை. பெந்தகொஸ்தே அனுபவம் என்ற தனி கிரியையை நாம் அங்கீகரிக்க வாய்ப்பில்லை. 1கொரி 12:13 -ல் பவுல் குறிப்பிடுவதைப் போல, பெந்தகொஸ்தே நாளிலிருந்து யாரெல்லாம் இரட்சிக்கப்படுகிறார்களோ, அவர்கள் ஆவியானவரால் கிறிஸ்துவின் சபைக்குள்ளாக ஸ்நானம் பண்ணப்படுகிறார்கள். உண்மையான விசுவாசியின் உள்ளத்தில் ஏற்கனவே ஆவியானவர் தங்கி கிரியை செய்வதால் ஆவியானவரின் ஸ்நானத்திற்காக காத்திருக்க வேண்டிய அவசியமே இல்லை. "தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால் நீங்கள் மாம்சத்திற்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" (ரோமர் 8:9) என்று பவுல் சொல்லுவதின் உண்மை இதுவே.*

அடையாள உபதேச ஊழியங்களில் எந்தவொரு வரமும் தனிப்பட்ட உணர்ச்சிக்காகவே நாடப்படுகிறது என்பதை நாம் ஆழமாக சிந்திக்கவேண்டியுள்ளது. கலாத்தியர் ஐந்தாவது அதிகாரத்தில் காணப்படும் ஆவியின் கனியைக் காட்டிலும், இந்த அனுபவங்களே முக்கியமாகக் கருத்தப்படுகின்றது. இந்நாட்களில் ஆவியின் கனி நமது வாழ்வில் காணப்பட வேண்டுமென்பதே பிரதானமான வாஞ்சையாக இருக்கவேண்டும். நாம் விரும்புகிறபடி உணர்ச்சிகளுடனான மகிழ்ச்சிக்காக பரிசுத்த ஆவியானவர் நமக்குக் கொடுக்கப்படாமல், நடைமுறை நோக்கங்களுக்காகவே அவர் நம்மில் செயலாற்றுகிறார். தேவனுடைய திட்டத்தை ஆவியானவரின் நிறைவினாலே நிறைவேற்றுவதற்கான தைரியமும், தெளிவும், அன்பும், வாஞ்சையும் பெறுவதாகவே அப்போஸ்தல நடபடிகளில் நாம் வாசிக்கிறோம். நீதியான நடக்கைக்கும், பரிசுத்தமான வாழ்விற்குமே நாம் ஆவியானவரின் நிறைவை நாடவேண்டும் என்பதை எபேசியர் ஐந்தாவது அதிகாரத்தை வாசிக்கும் போது விளங்கிக் கொள்ளலாம். கிறிஸ்தவ நடத்தையில் நாம் பயிற்சி பெற்று, ஆவியின் கனியை வெளிப்படுத்துவதற்காகவே நம் வாழ்வில் சில சமயங்களில் கடினமான, வேதனையான, உபத்திரவமான பள்ளத்தாக்கின் அனுபவங்கள் அனுமதிக்கப்படுகின்றது என்ற சிந்தையோடு, இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் ஆகாயத்தில் மிதப்பது போன்ற அனுபவங்களைப் பெறவேண்டுமென்று அடையாளங்களை நாடக்கூடாது. இது தேவனுடைய வார்த்தைக்கு புறம்பான எதிர்பார்ப்பாகவே அநேக பக்தருடைய வாழ்க்கையை வைத்து நாம் தீர்மானமாகச் சொல்லலாம்.

மேன்மையான நோக்கங்களுக்காக நமது வாழ்வில் சோதனைகளும், பிரச்சனைகளும் ஆண்டவரால் அனுமதிக்கப்படுகிறது என்பதே வேதத்தின் தெளிவான போதனையாகும். சில சமயங்களில் நமது கீழ்படியாமையின் விளைவாகவும் இப்படி நடக்கலாம். இந்த உலகத்தின்

போலி மேன்மையையும், அபாயகரமான வழிகளையும், பயங்கர அழுக்குகளையும் சரியாக அடையாளங்கண்டு, ஆண்டவருடைய மேன்மையான தன்மைகளையும், வழிகளையும் நாம் அறிந்து ருசிப்பதற்காகவே வேதனைகளும், வியாதிகளும் அனுமதிக்கப்படுகிறது. இந்த உலகின் இச்சையிலிருந்து தப்பி அருமையான குணாதிசயங்கள் நமது வாழ்வில், பெருகவும் பல கடினமான சூழ்நிலைகள் அனுமதிக்கப்படுகின்றன. ஆண்டவர் ஒரு விசுவாசியின் வாழ்வில் நிறைவேற்ற வேண்டிய அநேக காரியங்கள் உண்டு. இதை நாம் விளங்கி, ஏற்றுக்கொள்ளாதபடி மனிதனால் உண்டாக்கப்பட்ட போலியான தூண்களைப் போல் காணப்படுகின்ற அடையாளங்களையும் அற்புதங்களையும் மட்டும் எதிர்பார்ப்போமேயானால், மேன்மையான பலனாகிய பரிசுத்தத்தை நாம் ருசிக்க முடியாது. எல்லா சூழ்நிலைகளையும், பிரச்சினைகளையும் ஒரு ஆண்டவருடைய பிள்ளை ஆவிக்குரிய பிரகாரமாகவே அணுகி, ஆண்டவரைச் சார்ந்து, கிறிஸ்தவ நடக்கையை வெளிப்படுத்தி, கனி கொடுப்பதே கிறிஸ்தவ வாழ்வின் மேன்மையான இரகசியமாகும். இதை விட்டுவிட்டு சிலர் போதிப்பதைப் போல மேலோட்டமாக செயல்படும் அனுபவங்களைச் சார்ந்து வாழ முயற்சிக்கக் கூடாது. பல அனுபவங்களின் ஊடாக பரிசுத்தத்தில் வளர்ந்து, பொறுமையிலும், விசுவாசத்திலும் பெருகி, நீதியான மக்களாக வாழவேண்டும் என்பதே நம்மை குறித்த ஆண்டவரின் நோக்கம் என்பதை நாம் வேதத்தின் மூலம் தெளிவாக அறியலாம்.

# 9. சிந்தையையும் வார்த்தையையும் தவிர்த்தல்

அடையாளப் உபதேச போதனைகள் விசுவாசிகளை எவ்வகைகளில், எந்த அளவு பாதிக்கின்றன என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டியது மிக அவசியமாயிருக்கிறது. இந்த போதகங்கள் ஆவிக்குரிய ரீதியில் செயல்படுகின்ற அங்கங்களை காயப்படுத்தும் விதத்தை நாம் காண இருக்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக, ஆண்டவரால் நமக்குக் கொடுக்கப்பட்ட ஆவிக்குரிய தெளிவையும், அறிவையும் இந்த வகை போதகங்கள் எவ்வாறு பாதித்துக் கொண்டிருக்கின்றன என்பதை ஆராய்ந்து பார்ப்போம்.

கிரேக்க பாஷையில் "பக்திவிருத்தி" என்பது ஆவிக்குரிய தெளிவைத் தருகிற செயல் என்று பொருள்படுவதாக ஏற்கனவே பார்த்தோம். எல்லா வரங்களும் நமது ஆவிக்குரிய நிலையில், நம்மில் மேலும் தெளிவோடு கூடிய முன்னேற்றத்தைக் கொண்டுவருகிறதாய் இருக்க வேண்டும். இதன் மூலம் நமது மனசாட்சி, உணர்ச்சிகள் மற்றும் சிந்தனையாகிய சித்தம் ஆகிய அங்கங்கள் மேலும் தெளிவு பெற்று பயிற்றுவிக்கப்படுகிறது. இதையே பவுல் 2தீமோ 1:7 -ல் "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்" என்று சொல்லுகிறார். ஆவியோடும் உண்மையோடும் நாம் ஆண்டவரைத் தொழுது கொள்ள வேண்டுமென்று கிறிஸ்து நமக்குக் கற்றுக் கொடுத்திருப்பதும் (யோவான் 4:24) இதை வலியுறுத்துகின்றன. எல்லாவிதமான ஜெபங்களும், ஆராதனைகளும் மனத்

தெளிவுடனும் கருத்துடனும் ஏறெடுக்கப்பட வேண்டும். தெளிந்த புத்தியை கிறிஸ்தவன் ஒருபோதும் இழந்துவிடக் கூடாது. இதையே பவுல் 1கொரி 14:15 -ல் போதிக்கிறார்.

இதற்கு மாறாக, சிந்தையை இழந்து, தெளிந்த புத்தியோடு இல்லாமல் கருத்துகள் இல்லாத வார்த்தைகளையும், தரிசனங்களையும் மையமாகக் கொண்டே அடையாளப் போதகங்கள் இயக்குவதை நாம் காண்கிறோம். ஆண்டவரோடுள்ள ஐக்கியத்தின் உன்னத ருசிகரமான, கருத்து நிறைந்த தெளிந்த சிந்தையை உதறித் தள்ளிவிடுவது (Bypaasing the mind) எவ்வளவு அபாயகரமானது. தான் செய்கிறதையும் பேசுகிறதையும் குறித்து எப்பொழுது ஒரு கிறிஸ்தவன் தெளிவில்லாமல் இருக்கிறானோ, அப்படிப்பட்ட ஈடுபாடுகள் வெறும் உணர்ச்சியின் ஆர்ப்பாட்டங்களே அன்றி, ஆவிக்குரிய வளர்ச்சிக்கு பலனற்றவைகள். எந்த ஊழியமும் கருத்து நிறைந்து தெளிந்த புத்தியோடு செய்யப்படும்போது மட்டுமே அது சிந்தையின் மூலம் ஒரு விசுவாசியின் வாழ்வில் உள்ளத்தைத் தொடுகிறது. மற்றபடி உணர்ச்சிகளை மட்டும் பாதிக்குமேயானால், அது மாம்சீக ஈடுபாடேயன்றி வேறல்ல. ஆவியானவரால் நிரப்பப்படுவதென்பது மதுபான வெறிக்கு நேர் எதிரானது. இதை எபேசியர் 5:8 -ல் வாசிக்கிறோம். ஒருவன் குடித்து வெறிக்கும்போது நிதானத்தையும், புரிந்து கொள்ளும் சக்தியையும், தெளிந்த புத்தியையும் இழந்து விடுகிறான். மாறாக ஆவியானவரால் நிரப்பப்படுகிற ஒருவன், தேவனுடைய சத்தியத்தை அறிந்து ஏற்றுக்கொள்ளுவதினால், புத்தியில் இன்னும் தெளிவு ஏற்பட்டு விடுதலைப் பெறுகிறான். கிறிஸ்தவர்கள் ஆழமாகச் சிந்திக்கும் பொழுதும், எளிதான வேலையை செய்யும்பொழுதும் பாட்டுகளாலும், சங்கீதங்களாலும் தங்கள் இருதயத்தில் ஆண்டவரை மகிழ்ச்சியோடு ஆராதிக்கலாம். ஆவியினால் நிரப்படும்பொழுது, தெளிவில்லாத அனுபவங்களையோ, கருத்தில்லாத வார்த்தைகளையோ நாம்

பெறுவதில்லை. மாறாக ஆண்டவருடைய காரியங்களை தெளிவோடும், கருத்தோடும் தியானிக்கிறோம். ஆவியின் கனியை நாம் கலாத்தியர் 5:22-23 -ல் வாசிக்கும் பொழுது, சிந்தையும், தெளிவும் புறக்கணிக்கப்படாமல், ஒவ்வொரு நடத்தையும் கருத்தோடு செயல்படுவதைக் காணலாம். உதாரணமாக, இச்சையடக்கம் என்னும் சுபாவத்தை கவனித்தால் ஒரு விசுவாசி உணர்ச்சிக்கு அடிமைப்பட்டு தன்னுடைய கட்டுப்பாட்டை மீறுகிற நிலைமைக்கு வரமுடியாது என்பதே பொருளாகும். உலகம் செய்கிறபடி சிந்தையை மழுங்கடித்து, உண்மைக்கு வெளியே "மிருகத்தின் குணத்தைப் போல" ஒரு கிறிஸ்தவன் செயல்படாமல், ஆவியானவரின் நிறைவோடு தெளிந்த புத்தியினால் தனது இச்சையை கட்டுப்படுத்தி செயல்படுகிறான். அதே சமயத்தில் ஒரு விசுவாசி அடையாளப் போதகத்தை நம்பும் போது, தெளிந்த புத்தியையும், கருத்தையும் ஒதுக்கி தள்ளிவிட்டு, உணர்ச்சியின் உந்துதலுக்கு மட்டுமே அடிமையாகிறான். இதனால் வாழ்க்கையின் எல்லா சூழ்நிலைகளிலும் தேவனுடைய வார்த்தையின்படி எதிர்கொள்ளாமல், உணர்ச்சியின் உந்துதலின்படியே அணுக ஆரம்பிக்கிறான். இப்படியாகும் பொழுது பரிசுத்த வேதாகமம் அதிகாரமுள்ள முழுமையான வழிகாட்டியாக இராமல், அடையாளங்களையும் அதைச் சார்ந்த உணர்ச்சிகளையும் நியாயப்படுத்துவதற்காக, இங்கொன்றும் அங்கொன்றுமாக வசனங்களை எடுப்பதற்கான ஒரு வசதிப் பெட்டியாக மாறுகிறது. இதன் விளைவாக தங்களை அறியாமலே இவர்கள் எப்பொழுதும் அனுபவங்களையும், அடையாளங்களையும் நாடி ஓடுகிற நிலைமைக்கு வந்துவிடுகிறார்கள்.

இன்று மனதை மயக்கி அடிமைப்படுத்தி இயங்கும் "ஹிப்னாடிசம்" என்னும் பழக்கமும் அநேக இடங்களில் புழக்கத்தில் உள்ளது. "ஆவியில் விழுந்து கிடத்தல்" போன்ற சில வினோதமான செயல்களும், சில போதனைகளும் நடைமுறையில்

உள்ளது. உலக அரங்குகளில் நடைபெறுவதைப் போல தங்களை சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதை அறியாமலேயே வெறும் அனுபவங்களை ஆவிக்குரிய நிலைமையோடு சம்பந்தப்படுத்துவதும் சாதாரணமாகிவிட்டது. நாடக அரங்குகளில் இதை சில நூதன வழிகளில் செயல்படுத்துகின்றனர். விளம்பரங்கள் மூலம் வல்லமையை உடையவராக ஒருவரை அறிமுகப்படுத்தி பரபரப்பையும், எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தி, அதன் மூலம் எல்லோரையும் வயப்படுத்தி செயல்படுத்துவது இது பல முறைகளில் மிகவும் பிரபலமாக இருக்கிறது. இந்த நூலின் ஆசிரியர் சில ஆண்டுகளுக்கு முன்பு இப்படிப்பட்ட தந்திரங்களால் நடத்தப்பட்ட நிகழ்ச்சியைப் பார்த்திருக்கிறார். இன்று அநேகர் இவ்வித கலைகளைக் கற்று மேடைகளில் நடத்திக் காண்பிப்பது வழக்கமாகிவிட்டது. சில சபைகளில் சிரிப்பலைகளை எழுப்புவதும், கத்திக் கூச்சலிடுவதும், கீழே மயங்கி விழுவதும், நடுங்கி நிற்பதும் இன்று சர்வ சாதாரணமாகக் காணப்படுகிறது.

ஜான் விம்பர் என்பவர் தான் நிகழ்த்தும் அற்புதங்களைப் பற்றி ஐயமுற்ற பத்து ஜெர்மானிய நாட்டு வேதாகமக் கல்லூரி மாணவர்களை தன்னிடம் அழைத்து அதை நிரூபிக்க இப்படி முயன்றார். அந்த மாணவர்களில் உயரமானவர் முன் நின்று, சற்று நேரம் கழித்து ஏதாவது வித்தியாசமாக உணர முடிகிறதா? என அறிய முற்பட்டபோது, அந்த மாணவர்கள் அசைய முடியாமலிருந்ததைக் கண்டு, இதுவே பரிசுத்த ஆவியானவரின் செயல் என்று விளக்கம் கொடுத்ததை சற்று கவனிப்போம். இது தான் பரிசுத்த ஆவியானவரின் செயல்படும் முறையா? வேதாகமத்தில் இதற்கு எந்த ஒரு ஆதாரமும் இல்லையே. தேவனுடைய பணி மற்றும் ஆராதனையில் சிந்தையை உதறிவிட்டு செயல்பட நமக்குக் கற்றுக் கொடுக்கப்படவில்லையே. ஒரு மனிதனை பாவ உணர்வுக்குள் கொண்டு வரும்போதோ அல்லது விசுவாசியை பெலப்படுத்தும்போதோ பரிசுத்த

ஆவியானவர் சிந்தையை மயக்கி, சித்தத்திற்கு வெளியே செயல்படுவதாக நாம் வேதாகமத்தில் வாசிப்பதில்லையே. அடையாளப் போதனைகளில் சில நூதன முறையைப் பயன்படுத்தி, சிந்தையை மயக்கி, பாதிப்புகளைக் கொண்டுவர முயற்சிப்பது தேவனுடைய வார்த்தைக்கு எவ்வளவு தூரமானது! இது உலகத்தார் கடைபிடிக்கும் வழிமுறைகள் அல்லவா? பெரிய காரியங்கள் நடப்பதாக பிரம்மையை உண்டுபண்ணி, உணர்ச்சிகரமான உச்சக்கட்டத்திற்குள் முழுக் கூட்டத்தையும் கொண்டுவந்து கூச்சலிடுவது தானே கிட்டத்தட்ட எல்லா சுகமளிக்கும் கூட்டங்களிலும் காண்பது. சிலர் கண்களை மூடி சரீர சுகத்தை உரிமையோடு பெறவேண்டுமென்று போதிக்கின்றனர். இயேசுவின் நாமத்தில் நோய்கள் வெளியேறும்படி சொல்லுகின்றனர். பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்யும்பொழுது, தேவனுடைய வார்த்தையை விட்டு வெளியே செயல்படாமல், தேவனுடைய வசனத்தை உறுதிப்படுத்துவதையே நாம் சத்தியம் என்று சொல்லுகிறோம். உலகத்தில் காணப்படுகிற வழிமுறைகளில் ஈடுபட்டு அதை ஆவியானவரின் கிரியை என்று வியாக்கியானப்படுத்த முயற்சி செய்வது நாம் ஏற்கனவே பார்த்தபடி முழுமை இல்லாதவைகள் என்றே சொல்லலாம். கிறிஸ்தவன் தெளிந்த சிந்தையுடன், சத்தியத்தின் பாதையில் எப்பொழுதும் ஆயத்துடனும், விழிப்புடனும் காணப்படவேண்டும். தெளிந்த சிந்தையை குறைத்து மதிப்பிடுவதையே அடையாளப் போதகங்களின் நடைமுறையாக நாம் காணலாம். இதில் வரும்படியான ஆபத்து என்னவெனில், கூர்மையான திறமையுடையவர்களும் அடையாளங்களைக் எதிர்பார்க்கும் நிலைக்கு வந்துவிட்டால், ஆவிக்குரிய விழிப்புணர்வை எளிதில் இழந்துவிடக் கூடும். ஓரல் ராபர்ட் என்பவர் தான் 900 அடி உயரமான இயேசுவின் தரிசனத்தைக் கண்டதாகக் கூறுவதை எவ்விதமான மறுப்புமின்றி ஏற்றுக் கொள்ளும் கிறிஸ்தவர்களும் நம்மிடையே

உண்டே! இப்படி சத்தியத்தைவிட்டு ஆவிக்குரியது என்று சொல்லப்படுகிற எல்லாவறையும் அப்படியே நம்புகிற நிலைமைக்கு கொண்டுவந்துவிடுவதுதான் இந்த அடையாளப் போதகங்களின் மிகப்பெரிய பாதிப்பாகும். நீங்கள் நினைப்பது எதுவாயினும் அது அப்படியே ஆகும் என்று சொல்லப்படுவது, ஆண்டவரின் வேதத்திற்கு புறம்பான இன்னொரு தவறான போதனையாகும். இதற்கு உதாரணம் காட்டவும் செய்கிறார்கள். 1யோவான் 5:15 -ம் வசனம் இதற்கு அதிகமாக சுட்டிக்காட்டுகிறார்கள். இதற்கு முந்தின வசனங்களையோ, அந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள முக்கிய கருத்தின் பின்னணி பற்றியோ அவர்கள் கவலைப்படுவதில்லை. டூ பெளசிஸ் என்பவர் ஒரு மைல் தூரத்தில் வியாதியாயிருந்த தனது நண்பருக்காக ஜெபித்துக் கொண்டிருக்கும்பொழுது, இவருடைய பிரசன்னம் அந்த நண்பருக்கு அருகாமையில் உடனடியாக தேவைப்பட்ட படியால், தாம் ஓரடி எடுத்து வைத்த மாத்திரத்தில், ஆவியானவரால் இமைப்பொழுதில் அந்த இடத்திற்கே எடுத்துச் செல்லப்பட்டதாக ஒரு நூலில் குறிப்பிட்டுள்ளார். அதே வண்ணமாக கூடியிருந்த மக்கள் மத்தியில் ஒரு சுவிசேஷகர் தரைக்கு மேலே சில அடிகள் தூக்கிச் செல்லப்பட்டதாகவும், அதை ஆவியானவரின் செயல் என்றும் விளக்கப்படுத்துகிறார். இதை போன்ற காரியங்களால் அநேக நூல்கள் நிறைந்திருப்பது சாதாரணமாகிவிட்டது. கடைசி நாட்களில் அநேகங் கள்ளத்தீர்க்கத்தரிசிகள் எழும்பி அற்புதங்களையும் அடையாளங்களையும் காண்பிப்பார்கள் என்று தேவன் தாமே எச்சரித்ததைப் பார்க்கிறோம். "ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்" (மத்தேயு 24:24). இன்னுமாக பவுல் தெசலோனிக்கேயர்க்கு எழுதின நிருபத்தில் "அந்த

அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும்" (2தெச 2:9-10) என்று எழுதியிருப்பதை நாம் வாசிக்கிறோம். இப்பொழுது காணப்படுகிற இந்த அடையாளங்களை நாம் கடைசி கால ஏமாற்றம் என்று சொல்லாவிட்டாலும், அதற்கான ஆயத்தப்பகுதி என்று கணிக்கலாம். ஏனென்றால் விசுவாசிகளின் ஆவிக்குரிய விழிப்புணர்வு சிறிது சிறிதாக மங்க ஆரம்பிக்கும் பொழுதுதான் சாத்தானின் ஏமாற்று அடையாளங்களும், செய்கைகளும் எளிதில் வஞ்சிப்பதற்கு ஏதுவாயிருக்கும். இந்த அடையாள ஊழியங்கள் என்று சொல்லப்படுபவைகளால் உண்மையான ஆராதனையும், சுவிசேஷப் பணியின் ஈடுபாடும் அதிகமாக பாதிக்கப்படுகின்றன.

வேதத்தில் நிரூபிக்கப்படாத கோட்பாடுகளை கிறிஸ்தவர்கள் நம்ப ஆரம்பித்து கடினமான நாட்கள் வரும்பொழுது எல்லாவற்றையும் நம்புவதற்கு ஏதுவாகிவிடும். மக்கள் மத்தியில் தங்களின் பெருமையையும் சாகசங்களையும் காண்பிக்கின்ற, ஆவிக்குரிய ரீதியில் எந்த சம்மந்தமும் இல்லாத நபர்களின் போதனைகளை இன்று ஏற்றுக் கொண்டால், கடைசி நாட்களில் பிசாசு பலத்த கிரியையோடு வெளிப்படும் பொழுது நாம் எப்படி தப்பிக்க முடியும்? ஆண்டவரிடம் இருந்து இன்றும் தாங்கள் நேரடி வெளிப்பாடு பெறுகிறோம் என்று சொல்லுபவர்கள், தெளிந்த புத்தியை ஒதுக்கித் தள்ளுபவர்களாகவே காணப்படுகின்றனர். இதுதான் அறிவை உணர்த்தும் வரமென்று பவுல் சொல்லுவதாக அர்த்தப்படுத்தவும் செய்கின்றனர். மற்றவர்களின் வாழ்க்கையை பற்றியும், அவர்களின் எதிர்காலங்களைப் பற்றியும் தங்களுக்கு தரிசனங்கள் வாயிலாக சிறப்பான வெளிப்பாடு கொடுக்கப்படுகிறது என்று சொல்லுவதை நாம் எப்படி

ஏற்றுக் கொள்ளமுடியும்? தேவனுடைய முழுமையான வெளிப்பாடு அடங்கிய வார்த்தையின் வழிநடத்தலுக்கு புறம்பாக, உணர்ச்சிகளை மாத்திரம் சார்ந்து சொல்லப்படுகிற ஆலோசனையைக் குறித்து, விசுவாசிகள் ஜாக்கிரதையோடு இருக்க வேண்டியது இந்நாட்களில் மிக அவசியமாகிறது. மாறாக தெளிந்த புத்தியோடு, மனப்பூர்வமாக நமது சித்தத்தை தேவனுக்கு முற்றிலும் கீழ்ப்படுத்தி வாழ வேண்டும். தரிசனங்கள் மற்றும் உணர்சிகளுக்கு மட்டும் அடிமைகளாவது எளிதில் பிசாசால் நாம் வஞ்சிக்கப்படுவதற்கு ஏதுவாக மாறிவிடும். உண்மைக்கும் தீமைக்கும் இடையே உள்ள வேற்றுமையை அறிந்து கொள்ளுவதற்காக பழைய ஏற்பாட்டுக் காலத்திலேயே பல கட்டளைகள் கொடுக்கப்பட்டுள்ளது. மேசியா இந்த உலகத்தில் வந்து, மனிதனுடைய பாவங்களுக்காக மரித்து உயிரித்தெழுந்த பின்பு எல்லா தரிசனங்களும், தீர்க்க உரைகளும் முத்திரையிடப்பட்டு மூடப்படுமென்று தானியேல் 6, 9:24 -ல் நாம் வாசிக்கிறோம். அநேக வஞ்சிக்கும் அடையாளங்களும், தரிசனங்களும் வெளிப்படுமென்று சொல்லப்படுகிற கடைசி நாட்களில், தேவனுடைய வார்த்தையை சார்ந்து வாழும்பொழுது மட்டுமே, நாம் சத்தியத்தில் நிற்கமுடியும் என்று நம் தேவன் எச்சரித்துள்ளதை நாம் சுவிசேஷங்களில் வாசிக்கிறோம்.

பரிதாபமான காரியம் என்னவெனில், உண்மையான விசுவாசிகளும் தரிசனங்களைக் காண்கிறோம் என்று சொல்லுகிற கூட்டத்தில் காணப்படுகின்றனர். அவர்களிடம் இவ்வகை போதகங்கள் தேவனுடைய வார்த்தையை எவ்வளவு குறைத்து மதிப்பிடுகிறதென்று அன்போடு எடுத்துச் சொல்லப்படவேண்டும். தரிசனங்கள் மூலம் வெளிப்பாடு பெறுகிறோம் என்று சொல்லுபவர்கள் உணர்ச்சியின் உந்துதலுக்கு அதிகம் பலியாகி செயல்படுகிறவர்கள் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஆவிக்குரிய ரீதியில் தாங்கள் மற்றவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்று

காண்பிக்கின்ற இப்படிப்பட்ட விளம்பரங்களை அநேகர் செய்கின்றனர். சில பெலவீனமான கிறிஸ்தவர்கள், இவர்கள் சொல்லுவதை அப்படியே நம்பி, பொறாமை மனப்பான்மையை வளர்க்கின்றனர். விளைவு என்னவெனில், விசுவாசிகள் ஆவிக்குரிய உண்மையான ஆசீர்வாதங்களை இழக்கின்றனர். மற்றவர்களைப் பற்றி புறங்கூறுகின்ற சுபாவமுடையவர்கள் சிலர் அதை மறைப்பதற்காக, தாங்கள் தரிசனம் பெற்றதாக சாமார்த்தியமாக மற்றவர்களைப் பற்றிக் கூறுவதும் சாதாரணமாகிவிட்டது.

சாத்தானின் ஆதிக்கத்திற்கு தங்களை அடிமைப்படுத்தினவர்கள், தரிசனங்களைப் பெற்றதாக அர்த்தப்படுத்துவது இந்த வகைகளில் மிகவும் மோசமானது என்று குறிப்பிடலாம். இது மற்றவர்களை அடிமைகளாக மாற்றி, தனி நபர் வழிபாட்டை ஊக்குவிக்கும். தமது ஜனங்கள் அந்நிய சத்தத்திற்கு செவி கொடாமல் தமது சத்தத்திற்கே செவி கொடுப்பார்கள் என்று இயேசு கிறிஸ்து கூறியுள்ளார். ஆகவே வேதாகமம் முழுவதும் எழுதிக்கொடுக்கப்பட்ட நிலையில் தரிசனங்கள் மூலமாக நேரடி வெளிப்பாடு பெறுகிறோம் என்பவர்கள் தேவனுடைய வார்த்தையின் மேன்மையையும், அதிகாரத்தையும் ஒதுக்கித் தள்ளுவதால், இப்படிப்பட்ட போதகங்களுக்கு அடிமைகளாக உள்ள உண்மையான விசுவாசிகள் வெளிவர நம்மால் இயன்ற வரை முழு பெலத்துடன் உதவி செய்ய வேண்டும்.

# 10. ஆவியானவருக்கு சம்பந்தமுண்டா?

உலகத்தில் கடைபிடிக்கப்படுகின்ற முறைமைகளையே தங்களின் ஊழியங்களிலும் இணைத்துச் செயல்படுவதே அடையாளப் போதகங்களின் ஒரு ஆபத்தாகும். ஒரு கிறிஸ்தவன் தனது வாழ்க்கையின் எந்த ஒரு அம்சத்திலும் உலகத்திற்கு ஒத்த வேஷம் தரிக்க முடியாது. இதைப்பற்றி கவலைப்படாமல் இவ்விதமான ஈடுபாடுகளை சிலர் நியாயப்படுத்தவும் செய்கின்றனர். வேதத்தின் சில உன்னதமான அடிப்படை தத்துவங்களுக்குப் *(Basic Doctrines)* புறம்பான போதனைகள் மற்றும் தனிநபர் வழிபாட்டுக் கொள்கைகளைத் தவிர்க்க வேண்டிய இடங்களில் இத்தகைய உபதேசங்கள் மிகவும் பெலவீனப்பட்டு காணப்படுகின்றன. எல்லாச் சபைகளையும் ஒன்று சேர்க்க வேண்டுமென்ற தத்துவம் இந்த இயக்கங்களில் அதிகம் வலியுறுத்தப்படுகின்றது. போப் தலைமையில் உலகமெங்கும் உள்ள சபைகள் ஒன்று சேருவதை தான் வரவேற்பதாக டியூ பௌசிஸ் என்ற அடையாள உபதேசப் போதகர் கூறுகின்றார். எல்லா இயக்கங்களும் தங்களின் வேற்றுமையை மறந்து ஒன்றுபடுத்துவதற்கு இந்தப் போதகங்கள் மிகவும் உதவி செய்வதாக சிலர் கருதுகின்றனர். எந்தக் காரணத்தைக் கொண்டும் மாற்ற முடியாத அஸ்திபாரம் போன்றுள்ள அடிப்படை உண்மைகளை ஏற்க மறுக்கிறவர்களோடு நாம் எப்படி சம்பந்தப்பட முடியும்? என்பதே பிரதானமான கேள்வியாகும். தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்திற்கு மாறாக உள்ள இப்படிப்பட்ட சில கூடுகைகளில் ஆவியானவர் செயல்படுகிறார் என்பதை எப்படி நாம் ஏற்க முடியும்? ஆவியானவர் கிரியை நடப்பிக்கிற இடத்தில் தேவனுடைய வார்த்தையின் மேல் பிரியமும், வைராக்கியமும்,

உண்மையை எப்படியாகிலும் கடைபிக்க வேண்டுமென்ற வாஞ்சையும், அடிப்படை விசுவாசத்தை விட்டுக் கொடுக்காமல் இருப்பவர்களோடு ஐக்கியப்பட வாஞ்சையும் நிச்சயம் காணப்படும். இன்று ஆண்டவரின் இரட்சிப்பின் திட்டத்தைப் பற்றியும், விசுவாசத்தின் அடிப்படை உபதேசங்களைப் பற்றியும் தவறான சிந்தை உடையவர்களிடமும் கூட ஐக்கியம் கொள்ளும் கரிசனையற்ற நிலையே காணப்படுகின்றது.

பிறப்பிலே கிறிஸ்தவர்களாக உள்ள எல்லோருமே, எந்த சபை பாகுபாடுமின்றி இரட்சிக்கப்பட்டவர்கள் என்றும், அவரவர் விசுவாசத்தைப் பொறுத்து ஆவியானவரின் வரங்களைப் பெற்றுள்ளனர் என்றும் சிலர் போதிக்கின்றனர். ஞானஸ்நானம், ஒழுங்காக ஆலயத்திற்குச் செல்லுதல், பாவ அறிக்கை செய்தல் போன்ற சடங்காச்சாரங்களே ஒருவர் இரட்சிக்கப்பட போதுமானது என்று அடையாள உபதேசப் போதகர்கள் சிலர் போதிக்கின்றனர். மரியாள் மற்றும் பரிசுத்தவான்கள் மூலம் வேண்டுவது என்ற சடங்காச்சாரங்களை விட்டுவிட இன்னும் சிலருக்கு மனமில்லை. இவைகளையும் கடைபிடித்துக் கொண்டு அடையாளப் போதகங்களையும் நம்பலாம் என்று இந்நாட்களில் பிரசங்கிப்பது சாதாரணமாகிவிட்டது. இப்படி சில சடங்காச்சாரங்களை விட்டுவிடாத வரைக்கும் இவர்கள் மற்ற உபதேசங்களை கடைபிடித்தாலும் இவர்களை யாரும் இனம் கண்டுகொள்ள முடிவதில்லை. 1977 மற்றும் 1978 -ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் நடத்தப்பட்ட மாநாடுகளில் அடையாளப் போதகங்களோடு தினந்தோறும் சடங்காச்சாரங்களும் இருந்திருக்கிறது. இப்படி எல்லோரோடும் ஐக்கியம் கொள்ளுகிறோமென்று உலகின் பல பகுதியிலிருந்து அநேகர் வந்து கலந்து கொண்டுள்ளனர். சுவிசேஷ பாப் இசைக் குழுவினர் சிலரும் ஆடல், ஆர்ப்பாட்டங்கள் என்று உருவெடுத்திருப்பவர்களும் இந்த அடையாளப் போதங்களின் முன்னோடிகளே. இதன் மூலம் தங்களின் வருமானத்தைப்

பெருக்கிக் கொள்ளுகிற அநேக அடையாளப் போதகர்களைக் காணலாம். உலகத்தாரின் வழக்கப்படி இவர்கள் தங்களுக்கு கட்டியுள்ள மாளிகைகளும், அலுவலகங்களும் ஆவிக்குரிய ரீதியில் நமக்கு பல சந்தேகங்களை உண்டாக்குகின்றன.

இவர்கள் இந்த ஊழியங்களை நிறைவேற்றுகிற முறைமைகளும் பல அபாய உண்மைகளை நமக்கு படம் பிடித்துக் காட்டுகிறது. உலகப்புகழ்பெற்ற ஒரு அற்புத ஊழியர் தான் மேடையில் பயன்படுத்தும் பாய்களின் ஊடாக மின்சார அலைகளை செலுத்தி, உணர்ச்சி உண்டாக்குவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தேவனுடைய வார்த்தைக்கு எவ்வளவு கனவீனத்தைக் கொண்டுவருகிற செயல்? ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்தி ஊழியஞ் செய்கிறோம் என்ற பெயரில் தவறான முறைகளைப் பயன்படுத்தி தனி நபர் வழிப்பாட்டைத்தான் இவர்கள் ஊக்குவிக்கிறார்கள். சில அருமையான விசுவாசிகள் இப்படிப்பட்ட ஊழியங்களை வேதத்தின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்க்காமல் இதை ஏற்றுக் கொள்ளவும், தள்ளவும் முடியாமல் அடிக்கடி அலைக்கழிக்கப்படுகின்றனர்.

உலக சரித்தரத்தில் இந்தவகை ஊழியமே மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் தேவனுடைய வார்த்தையின் மகத்துவத்தையும், ஆண்டவரின் வல்லமையான கிரியைகளையும் மிக அதிகமாக அசட்டை செய்துள்ளது. பரிசுத்த ஆவியானவர் உண்மையாகவே இந்த அடையாள ஊழியங்களின் பின்னணியில் உள்ளாரா? என்பதை நாம் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். இரட்சிக்கப்பட்டவர்களும் இரட்சிக்கப்படாதவர்களும் வித்தியாசம் இல்லாத அளவிற்கு அஸ்திபாரமாக இருக்கும் போதகங்களைத் தவிர்த்து, உலக வழக்கத்தின் படியான வழிமுறைகளை வைத்தே ஊழியஞ் செய்வதை பரிசுத்த ஆவியானவர் ஆசீர்வதிக்கிறார் என்று நிச்சயமாகக் கூற

முடியாது. அவர் பரிசுத்தத்தின் ஆவியானவர் மட்டுமல்லாமல், உண்மையின் ஆவியானவருங்கூட! வெளிப்படையாக இந்த ஊழியங்கள் பிரம்மாண்டமாகக் காணப்பட்ட பொழுதிலும், தேவனுடைய வார்த்தையின் மகத்துவத்தின் அடிப்படையில் தான் இவைகளை நாம் நிதானிக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்திற்கும், மகத்துவத்திற்கும் வெளியே செயல்படும் இந்த வகை ஊழியங்களால் பாதிக்கப்பட்டுள்ள உண்மையான விசுவாசிகள் ஆண்டவருடைய வார்த்தையில் பயிற்சி பெற அழைக்கப்படுகிறார்கள்.

# பகுதி 2

# கேள்வி / பதில்கள்

சில விசுவாசிகள் இந்த அடையாள ஊழியங்களோடு சேர்ந்து ஈடுபடாவிட்டாலும், இந்த வகையான வரங்களைப் பெற்றிருப்பதாகச் சொல்லுகிறவர்களைத் தவறாக கணித்துவிடக் கூடாது என்ற நடுநிலைமையான எண்ணத்தை கொண்டுள்ளனர். இந்த எண்ணம் கேட்பதற்கு நன்றாகவும், அநேக கிறிஸ்தவர்களுக்கு இது சகிப்புத் தன்மையை வெளிப்படுத்துவதைப் போல காணப்பட்டாலும், கடினமான சூழ்நிலையில் சுலபமான வழியை ஒரு விசுவாசி கண்டுபிடிக்க முயற்சிப்பதாகவே இது காணப்படுகிறது. இங்கு நடுநிலைமையான எண்ணத்திற்கு இடமேயில்லை. இந்தப் போதனைகள் ஆண்டவரின் வார்த்தைக்குப் புறம்பாயிருந்தால், நாம் இந்த ஊழியங்களோடு சம்பந்தப்பட்டுள்ள விசுவாசிகளுக்குத் தெளிவான ஆலோசனைகள் மூலம் உதவி செய்து விடுவிக்க வேண்டும். மாறாக இந்த போதனைகள் உண்மையாக இருப்பின் இதற்கு கீழ்படிவதே சரியாகும். இன்று ஆண்டவரின் போதனைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கிற சபைகளையும் மிகவும் தந்திரமாகவும், சுலபமாகவும் இந்தவகை உபதேசங்கள் பாதிப்பைக் கொண்டுவருவதால் இந்த நேரத்தில் நாம் அவசரமாக செயல்பட வேண்டியுள்ளது. ஆரம்பத்தில் இந்தப் போதகங்களைக் குறித்து அலட்சியமாக இருக்கும் பட்சத்தில் இந்தப் போதனைகளால் குழப்பங்களும், வேதனைகளுமே ஏற்படுகிறது. இந்தப் போதனைங்கள் இங்கு மட்டுமல்ல வேதாகமக் கல்லூரிகள், பத்திரிகைகள், அச்சுக் கூடங்கள், மிஷினரி ஊழியங்கள் மற்றும் சுவிசேஷ ஸ்தாபனங்கள் என்று எல்லா இடங்களையும் பாதித்துள்ளது. தாங்கள் அறியாமலேயே

இந்தப் போதனைகளால் அநேகர் பாதிக்கப்பட்டிருப்பது இந்த போதனையின் விசேஷமாகும். கடந்த சில ஆண்டுகளாக இது வேகம் பிடித்துள்ள நிலையில் சபையின் சீர்திருத்த காலத்திலும், வேதப் பண்டிதர்களின் காலத்திலும் ஏற்பட்ட விழிப்புணர்வு நமக்கும் அவசியமாயிருக்கிறது. வரங்கள் 'ஒரு குறிப்பிட்ட காலத்தின் அடையாளமே' என்று பரிசுத்தவானாகிய அகஸ்டின் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஊழியங்களைப் பற்றி நடுநிலைமையாகப் பேசுகிறவர்களும், மற்ற கிறிஸ்தவர்களும் நியாயப்படுத்துவதற்காக அதிகமாக பயன்படுத்தும் சில வசனங்களை அடுத்த சில அத்தியாயங்களில் ஆராய்ந்து பார்ப்பது எல்லா வகையிலும் சிறந்ததாக இருக்கும்.

# 11. மாற்கு 16 -ம் அதிகாரத்தின் அடையாளங்களின் நிலை என்ன?

**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளையின் (Great Commission) படியாக மாற்கு 16:17-18 வசனங்களில் இப்படி வாசிக்கிறோம். "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்". இந்த வாக்குத்தத்தம் எல்லா விசுவாசிகளுக்கும் கொடுக்கப்பட்டதாயிற்றே! அப்படியிருக்கும்பொழுது இந்த அடையாளங்களை நாம் பயன்படுத்துவது அவசியமல்லவா?**

*இந்த வரங்கள் இன்றுள்ள விசுவாசிகளுக்கும், பிரசங்கிமாருக்கும் பிரத்தியேகமாக பிரதான சுவிசேஷக் கட்டளையோடு கொடுக்கப்படவில்லை. இன்று சர்ப்பங்களைப் பற்றியும், விஷங்களைப் பற்றியும் சவால் எழுப்பினால் நாம் தோற்றுப் போய்விடுவோம். சர்ப்பங்களை எடுப்பதும், விஷங்களைக் குடிப்பதும் சுவிசேஷக் கட்டளையின் ஒரு பகுதி என்று சிந்திக்கும் எந்த விசுவாசியும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். பிரதான சுவிசேஷ கட்டளையை மத்தேயு 28:18-20 வசனங்களை வாசிக்கும் போது இந்த வசனங்களை நாம் எப்படி அர்த்தப்படுத்த வேண்டுமென்பது, அது சொல்லப்பட்ட பின்னணியோடே சிந்தித்து வியாக்கியானப்படுத்துவதே சரியானதாகும்.*

ஆண்டவரின் உயிர்த்தெழுதலைப் பற்றி சீஷர்கள் சந்தேகத்தோடு காணப்பட்டார்கள். இப்படி விசுவாசக் குறைவோடு காணப்பட்ட சீஷர்கள் ஆண்டவரின் கட்டளைக்கு கீழ்படியும்போது இந்த அடையாளங்கள் நடக்கும் என்பதாக அறிவிக்கப்பட்டது. மாற்கு 16:9-ம் வசனத்திலிருந்து தொடர்ச்சியாக ஆராய்ந்து பார்க்கவேண்டும். மதகலோனா மரியாள் ஆண்டவர் உயிர்த்தெழுந்தார் என்று சொன்னதை சீஷர்கள் விசுவாசிக்கவில்லை. 13 -ம் வசனத்தில் எம்மாவூருக்குப் போனபோது ஆண்டவர் தாமே அவர்களுக்கு தரிசனமாகி உயிர்த்தெழுந்திருந்த தம்மைக் கண்டவர்கள் சொன்னதை நம்பாமல் போனதினிமித்தம் அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்தும், இருதயக் கடினத்தைக் குறித்தும் அவர்களைக் கடிந்து கொண்டதாக 14 -ம் வசனத்தில் வாசிக்கிறோம். 15-16 -ம் வசனங்களில் தாங்கள் நிறைவேற்ற வேண்டிய பிரதான சுவிசேஷக் கட்டளையை சீஷர்கள் பெறுகின்றனர்.

இப்பொழுது 17 -ம் வசனம் எப்படி ஆரம்பிக்கிறது என்று பார்ப்போம். சீஷர்கள் தனிப்பட்ட பிரச்சனையான அவிசுவாசத்திற்கு பதிலாக, தம்முடைய பிரதான கட்டளைக்கு, அதாவது உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கிக்கிற பணிக்கு கீழ்ப்படிகிறவர்களை இந்த அற்புதம் தொடருமென்று கூறியதாக நாம் விளங்கிக் கொள்ளலாம். இன்று சுவிசேஷத்தை அறிவிப்பதை விட்டுவிட்டு சர்ப்பங்களை எடுப்பதும், சில இடங்களில் விஷத்தோடு விளையாடி வேடிக்கைக் காட்டுவதும், அதற்கு இந்த வசனங்களை மேற்கோள் காட்டி செயல்படுவதும் வேதனையாக இருக்கிறது. பயத்தினால் சிலர் இப்படிச் செய்யாவிட்டாலும் இந்த வசனங்களை தவறாகப் பயன்படுத்துவது சர்வ சாதாரணமாக காணப்படுகிறது. சபையின் அஸ்திபார நிலையில் இருந்த சீஷர்களில் ஆண்டவருடைய பிரதான கட்டளைக்கு கீழ்படிந்தவர்கள், இந்த அடையாளங்களைக் கண்டார்கள்

என்றே சொல்லலாம். அப்போஸ்தலர்களுடைய கைகளினாலே அற்புதங்கள் எப்படி நடந்தது என்று அப்போஸ்தலர் நடபடிகளிலும், எபிரெயர் நிருபத்திலும் எழுதப்பட்டிருப்பதை ஏற்கனவே சில வசனங்களில் பார்த்திருக்கிறோம்.

சுருக்கமாக சொன்னால், மாற்கு **16:14** -ம் வசனத்தில் நாம் வாசிக்கிற சீஷர்களின் அவிசுவாசம் மற்றும் இருதயக் கடினத்தை ஆண்டவர் கடிந்து கொண்டு, தமது பிரதான கட்டளையாகிய சுவிசேஷ பிரபல்யத்திற்கு கீழ்படியும் சீஷர்களுக்கு கொடுக்கப்பட்ட அடையாளமாகவே நாம் இதை எடுத்துக் கொள்ள வேண்டுமேயன்றி, இன்று காணப்படுகிற தவறான உபதேசத்திற்கு இந்த வசனங்கள் உரியதல்லவே.

# 12. பவுலின் போதனைகள் இன்றைக்கும் பொருந்துமா?

**"அன்பை நாடுங்கள்; ஞானவரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்" (1கொரி 14:1). "இப்படியிருக்க, சகோதரரே, தீர்க்கதரிசனஞ்சொல்ல நாடுங்கள், அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கும் தடைபண்ணாதிருங்கள்" (1கொரி 14:39) என்ற பவுலின் வாதத்தின் பொருள் என்ன?**

பவுல் இந்த வசனங்களில் கூறியுள்ள கட்டளைகள் எந்த விதத்திலும் இன்றைக்கு பொருந்தாது என்று நாம் கூற முடியாது. ஆனால் பின்னணியத்தோடு அதை விளங்கி அர்த்தப்படுத்தி போதிக்காததே இன்றைய பிரச்சனையாகும். தமது சர்வ அதிகாரத்தின்படி ஆவியானவர் இந்த வரங்களை அனுமதிக்கும் வரை இதை பயன்படுத்துவது நமது கடமையாகும். அதை விட்டுவிட்டு கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் கடைபிடிக்கும் முறைமையைக் கையாண்டு, அந்நியபாஷையில் பேசத் தூண்டுவதோ, புது யுத்திகளைக் கையாளுவதோ எவ்வளவு ஆபத்தானது.

வேதத்தில் பொதுவான சில உண்மைகளை நாம் கற்றுக் கொள்வதற்காக சில கட்டளைகள் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் கொடுக்கப்பட்டுள்ளன. சுவிசேஷத்தை, தான் வல்லமையோடு எடுத்துரைப்பதற்கு ஆண்டவர் பெலன் தர ஜெபிக்கும்படிக்கு பவுல் தன்னுடைய நிருபங்களில் எழுதியிருப்பதை ஒரு உதாரணமாக இங்கு எடுத்துக் கொள்ளுவோம். பவுல் உயிரோடு இருக்கும் வரைதான் இந்த வேண்டுகோள் பொருத்தமானது.

இன்றும் பவுலுக்காக ஜெபிக்க வேதம் போதிக்கிறது என்று நாம் சொல்லுவோமா? கூடாதே. மாறாக ஏற்கனவே வெளிப்படுத்தி எழுதப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தையை போதிக்கிறவர்களுக்காக ஜெபிப்பது அவசியமாகிறது என்று இதன் மூலம் நாம் அர்த்தம் கொள்ளவேண்டும். அதேபோல் தேவனுடைய சபையின் அஸ்திபார நிலையில் சீஷர்கள் உபயோகித்ததினால் நாம் இன்று அந்த தேவனுடைய வார்த்தையின் போதனைகளுக்கு கீழ்படிய வேண்டும் என்றும் பவுலின் கட்டளையை ஏற்று செயல்படுத்துகிறோம் என்றும் சொல்லுபவர்கள் பரிபூரணமாக நமக்கு கொடுக்கப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்தை குறைக்கிறவர்களாக ஆகின்றனர். சபையின் போதகர்கள் தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொடுக்கிறவர்கள், மூப்பர்கள், உதவிக்காரர்கள் போன்றவர்கள் எந்தத் தகுதிகளோடு தெரிவு செய்யப்படவேண்டும் என்று நிருபங்களில் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளதே அல்லாமல், இப்படிப்பட்ட வரங்களை பயன்படுத்துகிறவர்கள் எந்த தகுதியைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதைக் காணவில்லை. அதுமட்டுமல்ல, அப்போஸ்தல நடபடிகள் மற்றும் 1கொரிந்தியர் நிருபத்தை தவிர்த்து அந்நிய பாஷைகளைப் பற்றி நாம் அதிகம் வாசிப்பதில்லை. இதே புத்தகங்கள் மற்றும் எபேசியர் நிருபத்தை தவிர்த்து தீர்க்கத்தரிசனங்களைப் பற்றியும் நாம் வேறு இடங்களில் வாசிப்பதில்லை. சபையின் அஸ்திபார நிலைக்கென்று பிரத்தியோகமாக கொடுக்கப்பட்ட வரங்களாகவே மீண்டும் இவைகளை நாம் விளங்கிக் கொள்ளலாம். தீர்க்கத்தரிசனம் பேசப்பட்ட வரையிலும் இந்த வரங்களினால் உண்டாகிய பலன்களை நாம் வாஞ்சிக்க வேண்டுமென்றே ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இது சரியானால் இந்த வசனங்கள் ஏன் எழுதப்பட வேண்டும்? பவுலின் உதாரணத்திலிருந்து நாம் ஏற்கனவே பார்த்தபடி, இங்கு ஆண்டவரின் கிரியை பற்றிய பொதுவான உண்மைகளை நாம் அறிய முடிகிறது. இந்த விசேஷ வரங்கள் எப்படி கிரமமாக பயன்படுத்தப்பட்டது என்று அறிகிறது மாத்திரமல்ல, கிறிஸ்தவ ஆராதனை நெறிகளை நாம் எல்லாக் காலங்களிலும் எப்படிக் கடைபிடிக்க வேண்டுமென்ற சத்தியத்தையும் இதிலிருந்து கற்றுக் கொள்ளுகிறோம். பக்திவிருத்தி சம்பந்தப்பட்ட எல்லா ஊழியங்களும் எப்படி கிரமமாக செய்யப்பட வேண்டும் என்பதோடு இந்த அதிகாரத்தை (40ம்) வசனத்தில் பவுல் முடிக்கிறதை நாம் காண்கிறோம். இந்த சத்தியங்கள் பெரும்பாலும் அற்புத ஊழியங்களில் கடைபிடிக்கப்படுவதில்லை.

# 13. உண்மையான வரங்கள் ஏன் வேறுபடுத்தப்பட வேண்டும்?

**அடையாளப் போதகர்கள் ஒருபுறமாய் சார்ந்திருப்பதால் மட்டும் அவைகளை தள்ளிவிடலாமா? சில அடையாளங்கள் போலியாகத் தெரிவதால் நாம் உண்மையான வரங்களையும் தள்ளிவிட வேண்டுமா?**

சில அடையாளப் போதகர்களைப் பற்றிய சந்தேகத்தால் நாம் இந்த ஊழியங்களைத் தள்ளிவிடக் கூடாதே. பிசாசு சில வரங்களைப் பாசாங்கு செய்ய முடிவதால் நாம் உண்மையான வரங்களை மறுதலிக்க முடியுமா? என்பது இன்றைக்கு அநேகரின் வாதமாகும்.

பொதுவாக, உலகிலுள்ள விலைமதிப்பு மிக்க யாவுமே போலியாக்கப்படுகிறது. ஆனால் ஆவியானவரின் வரங்களோடு இதை ஒப்பிட முடியாது. அடையாள வரங்கள் யாவற்றையும் ஆவியானவர் தாமே மேன்மையான அற்புதங்களாக ஏற்படுத்தினார். அந்நியபாஷையில் பேசுவது ஒரு அடையாளமாக ஏற்படுத்தப்பட்டது என்பதை நாம் எக்காரணம் கொண்டும் மறந்துவிடக் கூடாது. அதேபோல, அப்போஸ்தலர்கள் தேவனிடமிருந்து நேரடியான வெளிப்பாட்டைப் பெற்று அவருடைய வார்த்தையைப் பேசுகிறார்கள் என்று விளங்கும்படிக்கு நிரூபணமாக இந்த அடையாளங்கள் ஏற்படுத்தப்பட்டது என்பதையும் நாம் ஏற்கனவே சிந்தித்திருக்கிறோம். இவைகள் வல்லமையோடும், பலத்த கிரியைகளோடும் ஆண்டவரால் கொடுக்கப்பட்டபடியால், இந்த வரங்களை யாரும் போலியாகச் செய்யமுடியவில்லை. சர்வ அதிகாரம் படைத்த

ஆண்டவர் தாமே இந்த அற்புதங்களை தமது ஞானத்தால் அப்போஸ்தலரின் அடையாளங்களாகக் கொடுத்தப்படியால் ஒருவரும் இதைப் போலியாகச் செய்ய முடியவில்லை. ஆனால் இன்றைய அடையாளங்கள் என்று சொல்லப்படுபவைகளின் நிலையோ முற்றிலும் வேறுபட்டது.

அப்போஸ்தலரின் நாட்களில் வாழ்ந்த மக்கள் இன்றைய நாட்களைப் போல அல்லாமல் சிறிய நகரங்களில் வாழ்ந்தார்கள். அன்று பெரிய பட்டணமாக கருதப்பட்ட கொரிந்து பட்டணமும் நமது பட்டணங்களைக் காட்டிலும் மிகச் சிறியதே. இப்படிப்பட்ட நிலையில் அங்கிருந்தவர்கள் உண்மையாகவே தாங்கள் இதுவரை படித்திராத, கேட்டிராத பாஷைகளில் சீஷர்கள் பேசுவதைக் கேட்டனர். அங்கிருந்த வெளிநாட்டவரும் இவைகளைப் புரிந்து கொண்டனர். மேலும் அதன் அர்த்தம் எல்லோருக்கும் விளங்கும்படி எடுத்துச் சொல்லப்பட்டது. எல்லோரும் இதைக் குறித்து பிரம்பிப்படைந்தனர். சபையின் மீது ஆண்டவரின் மேன்மையான பிரசன்னத்தின் அடையாளமாக இது காணப்பட்டது. இந்த பாஷைகள் உண்மையாயிருந்தபடியால் மற்ற எந்தக் குழுவினரும் இதைப் போல் செய்ய முடியவில்லை. இப்படிப்பட்ட அற்புதங்கள் சபையின் சரித்திரத்திலும் உண்மையானதாகவே வேறு யாரும் போலியாகச் செய்யமுடியாதபடி கிரியை செய்தது.

இன்று அதற்கு மாறாக அநேகர் பரிகாசம் செய்யுமளவிற்கு அடையாளப் போதகர்களின் நடைமுறைகள் இருக்கிறது. அந்நியபாஷையில் பேசுகிறோம் என்று சொல்லுபவர்களுக்கே அவர்கள் பேசுவதின் அர்த்தம் விளங்குவதில்லை. இரண்டு பேருக்கு ஒரு காரியத்தின் அர்த்தம் தெரியாத பட்சத்தில் எப்படி உறுதிப்படுத்தப்பட முடியும்? அப்படியானால் இது ஒரு அடையாளமல்லவே. விசுவாசத்தோடு இவைகளை எல்லாம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது சத்தியத்தை மறைப்பதற்கான

ஒரு போர்வையாகவே கருதமுடியும். ஆண்டவரால் ஒரு நோக்கத்திற்காக (அதாவது அவிசுவாசிகளாயிருந்த யூதர்களுக்கு ஒரு அடையாளமாக) ஏற்படுத்தப்பட்ட வரங்களுக்குச் சமமாக நாம் இவைகளை அங்கீகரிக்க முடியுமா? ஆண்டவரின் திட்டத்தின்படி அல்லாமல், மாறுபட்ட நம்பிக்கைகளைச் சார்ந்து வெளிப்படுத்தப்படுகிறவர்களை நாம் ஆண்டவரின் கிரியை என்று எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

தாங்கள் பயன்படுத்தும் வரங்களை போலியான அடையாளங்களோடு சம்பந்தப்படுத்தாமல், வேறுபடுத்திப் பார்க்க வேண்டுமென்று சில பெந்தகொஸ்தே பிரிவினர் கூறுகின்றனர். ஆண்டவரை உண்மையாகப் பின்பற்றும் எல்லோரையும் நாம் சகோதர சிநேகத்தோடு ஏற்றுக் கொண்டாலும், அவர்கள் பெற்றுள்ளதாகக் கூறும் அடையாளங்களைப் பொறுத்த அளவில் இதே விதமாக நாம் அங்கீகரிக்க முடியாது. அடையாளம் ஒரு நல்ல திறவுகோல்தான். இதில் சந்தேகமேயில்லை. ஆனால் அர்த்தமும் நோக்கமும் இல்லாதபட்சத்தில் அது அதிகமான கனவீனத்தைக் கொண்டுவரமுடியும். ஆண்டவரின் பலத்த கிரியைகள் யாராலும் போலியாகச் செய்யப்படக் கூடாத மேன்மையான அடையாளங்கள் என்பதை நாம் கவனத்தோடு ஏற்றுக்கொள்ள வேண்டுமேயன்றி, நிரூபிக்கப்படாத அர்த்தமற்ற அடையாளங்களை அல்ல. அநேக கிறிஸ்தவ குழுக்கள் அந்நியபாஷைகளில் பேசுகிறோம் என்று உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்ட காரியங்களில் ஈடுபடுவது ஆவிக்குரிய மேன்மையின் அடையாளங்களாக இல்லாமல் இருப்பது எவ்வளவு துக்ககரமானது.

யூதர்கள் பல்வேறு யுத்திகளைக் கையாண்ட போதும் பிசாசுகளைத் துரத்த முடியவில்லை. "உங்கள் பிள்ளைகள் யாராலே பிசாசுகளைத் துரத்துகிறார்கள்?" என்று தேவன் தமக்கு விரோதமாகப் பேசினவர்களைப் பார்த்து கேட்டதை

மத்தேயு 12:27 -ல் வாசிக்கிறோம். ஆண்டவர் தமது பலத்த கிரியையின் ஒரு அங்கமாக பிசாசுகளைத் துரத்தினார். இது யாரும் செய்யமுடியாதபடி ஆண்டவர் மாத்திரமே செய்த அடையாளமாகும். எனவே இன்று காணப்படுகின்ற சில போலியான கிரியைகளினால் உண்மையான வரங்களைப் பற்றிய நமது நம்பிக்கை மாறக் கூடாது என்ற வாதம் எழுவதற்கு இங்கு வாய்ப்பேயில்லை. ஆண்டவர் ஏற்படுத்திய அடையாள வரங்களிலிருந்து இவைகள் எப்படி வேறுபடுகின்றன என்று சிந்திக்கும்போது இப்படிப்பட்ட தீர்மானத்திற்கு வருகிறோம். தேவனுடைய வார்த்தை எழுதப்பட்டபொழுது காணப்பட்ட அடையாள வரங்கள் உன்னதமானவைகள். யாராலும் ஒருக்காலும் அவைகளை போலியாக்க முடியாதிருந்தது.

# 14. ஆதித் திருச்சபை வாழ்க்கை முறை என்ன?

**புதிய ஏற்பாட்டு சபையினர் அற்புத அடையாளங்களை ருசித்தது உண்மையாக இருக்கும் பட்சத்தில், நாமும் அவைகளை அனுபவிக்க முயற்சிக்காமல், இந்த அடையாளங்கள் புதிய ஏற்பாட்டு சபைக்கு மாத்திரம் உரியதென்று ஏன் தள்ளிவிட வேண்டும்?**

*இப்படி சில விசுவாசிகள் நினைக்கும்போது, புதிய ஏற்பாட்டு சபையின் காலத்தில் ஒவ்வொரு நாளும் இந்த அற்புதங்களும், அடையாளங்களும் நிகழ்ந்ததா? என்பதை முதலாவது ஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் மேலே நாம் காண்கிற கேள்விகளுக்கு சரியான பதில் கிடைக்கும். உண்மை என்னவெனில் புதிய ஏற்பாட்டில் மூன்று முறைதான் (அப்போஸ்தலர் 2, 10-11, 19 ம் அதிகாரங்கள்) அந்நியபாஷையில் பேசப்பட்டதாக நாம் வாசிக்கிறோம். அதோடு அன்றைய சூழ்நிலைகளைப் பொறுத்து, நமக்கும் பொதுவான ஆலோசனைகளாக (அத்தியாயம் 12 -ல் நாம் பார்த்தபடி) 1கொரிந்தியர் நிருபத்தில் சில போதனைகள் கொடுக்கப்பட்டதை தவிர்த்து அந்நியபாஷைகளைப் பற்றி நாம் அதிகம் வாசிப்பதில்லை. எருசலேமிலும் மற்ற இடங்களிலும் பரவியிருந்த யூதர்களுக்காக தேவனுடைய மகத்துவத்தின் பிரதான அடையாளமாக சில காலம் வரையிலும் இந்த வரங்களைப் பயன்படுத்தியதாக நாம் அறியலாம்.*

*அப்போஸ்தலர் நடபடிகளில் அந்நியபாஷைகளில் பேசப்பட்ட மூன்று இடங்களிலுமே ஒரு பிரத்தியேகமான செய்தியைச் சொல்லுவதற்கான வெளிப்பாடாகவே நாம் அறிகிறோம். இந்த மூன்று இடங்களிலும் யூதர்கள்*

சம்பந்தப்பட்டுள்ளதை நாம் விசேஷமாக கவனிக்க வேண்டும். இதற்குக் காரணம் என்ன? யூதர்களுக்கான விசேஷித்த பாக்கியம் முடிவு பெற்று, பரிசுத்த ஆவியானவரின் நேரடி ஆளுகையின் கீழ் புறஜாதி விசுவாசிகளையும், யூத விசுவாசிகளையும் ஒன்றுபடுத்துகிற சபையாக புதிய ஏற்பாட்டு சபை உண்டான அடையாளமே இதுவாகும். அப்போஸ்தல நடபடிகள் 10 மற்றும் 11 -ஆம் அதிகாரங்களை நாம் உதாரணமாக எடுத்துக் கொள்ளுவோம். புறஜாதி விசுவாசிகளோடு சம்பந்தப்படுவது எந்த விதத்திலும் தவறில்லை என்பதை பேதுரு உணர்ந்து கொள்ளவே ஆண்டவரால் இந்த அடையாளம் கொடுக்கப்பட்டதாக நாம் அறியலாம்.

விசுவாசிகள் சிலரைக் கூட்டிக்கொண்டு பேதுரு கொர்நேலியு வீட்டிற்குப் போகிறார். அப்பொழுது புறஜாதியினரும் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளுவதின் மூலம் யூத விசுவாசிகளுக்கு சமமானவர்கள் என்பதை இங்கு கொடுக்கப்பட்ட அந்நியபாஷை அடையாளத்தின் மூலம் பேதுருவும் மற்ற யூத விசுவாசிகளும் விளங்கிக் கொண்டதை அப்போஸ்தலர் 10:45-47 வசனங்களிலிருந்து அறிகிறோம். இப்படி ஆண்டவரை ஏற்றுக் கொள்ளும் புறஜாதி விசுவாசிகளை யூத விசுவாசிகள் சகோதரர்களாக அங்கீகரிக்க வேண்டுமென்ற சத்தியத்திற்கான அடையாளமாகவே இது கொடுக்கப்பட்டுள்ளன என்று நாம் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம். இந்த சம்பவம் பெந்தகொஸ்தே நாளிலிருந்து எட்டு வருடங்கள் கழிந்து நடந்த போது, பேதுரு எருசலேமிலிருந்த யூத விசுவாசிகளுக்கு விவரிப்பதிலிருந்து, நோக்கம் எதுவுமில்லாமல் அந்நியபாஷை பேசப்படவில்லை என்பதை நாம் கணிக்கலாம். நான் பேசத் தொடங்கின போது, பரிசுத்த ஆவியானவர் "ஆதியிலே" நம்மேல் இறங்கினது போலவே அவர்கள்மேலும் இறங்கினார்

என்று பேதுரு கூறியதை அப்போஸ்தலர் 11:15-18 -ஆம் வசனங்களில் வசிக்கும் பொழுதே, பெந்தகொஸ்தே நாளுக்குப் பிறகு இரண்டாம் முறையாக தற்பொழுதுதான் இப்படிப்பட்ட அடையாளம் கொடுக்கப்பட்டதாக நாம் அறிந்துகொள்ளலாம்.

அப்போஸ்தலர் 19 -ஆம் அதிகாரத்தையும் சற்றே சிந்திக்கலாம். யோவான் ஸ்நானகனின் செய்தியில் முழு விசுவாசம் வைத்து சிலர் உண்மையாகவே மேசியாவின் வருகைக்கான நம்பிக்கை வைத்திருந்தார்கள். பவுல் சுவிசேஷத்தை எடுத்துச் சொன்ன போது அவர்கள் அதை முழுவதும் விளங்கிக் கொண்டனர். பின்பு பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்த போது அந்நிய பாஷைகளில் பேசி தீர்க்கத்தரிசனங்களைச் சொன்னார்கள். இங்கு பெந்தகொஸ்தே நாளின் அனுபவத்தைப் போன்ற ஒரு சிறிய அனுபவத்தை ஆண்டவர் இவர்களுக்கு அடையாளமாக கட்டளையிட்டார் என்று கூறலாம். முதலாவது யோவான் ஸ்நானகனின் போதகத்தை ஏற்றுக் கொண்ட இந்த யூதர்கள் கல்வாரி மற்றும் உயிர்த்தெழுதலின் நாட்களின் அனுபவத்திற்கு கொண்டுவரப்பட்டனர். பின்பு பேதுரு மற்றும் எருசலேமிலிருந்த மற்ற யூதர்கள் கற்றுக் கொண்டதைப் போன்று, சபை பரிசுத்த ஆவியானவரின் நேரடி ஆளுகையின் கீழ் ஒன்றிணைக்கப்பட்ட அடையாளத்தை இவர்களும் அறிந்துகொள்ள ஏதுவாயிற்று. இப்படி மூன்று இடங்களிலும் அவநம்பிக்கை நிறைந்த யூதர்களுக்கு சத்தியத்தை விளக்கும் அடையாளமாகவே இந்த வரம் கொடுக்கப்பட்டதை நாம் காண்கிறோம்.

ஆதித்திருச்சபையினர் தினந்தோறும் அந்நியபாஷைகளில் பேசினதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பதை இந்த வசனங்களின் அடிப்படையில் உடனடியாக ஏற்றுக்கொள்ள முடியாதது மாத்திரமல்ல, தனிப்பட்ட முறையில் எல்லோரும்

அந்நியபாஷைகளில் பேசினார்கள் என்பதையும் நாம் அங்கீகரிக்க முடியாது. அப்போஸ்தலர் நடபடிகளில் இதற்கு பிறகு அந்நியபாஷைகள் பேசப்பட்டு ஒருவேளை அந்த சம்பவங்கள் கொடுக்கப்படாமல் இருக்கலாம். அதைப்பற்றி நாம் யூகிக்க முயற்சி செய்யாமல் நமக்கு எழுதி வைக்கப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தையை ஆராய்ந்து பார்க்கும் போது அடையாள உபதேசங்களின் தவறான போதனையை விளங்கிக் கொள்ளலாம். அதுமட்டுமல்ல, கொரிந்து சபையில் அந்நியபாஷைகள் பேசுகிற வரத்தை அநேகர் பெற்றிருந்தாலும், ஆராதனையில் அதிகபட்சம் மூன்று பேருக்கு மேல் பேச அனுமதிக்கப்படவில்லை. அர்த்தம் சொல்லுகிற வரம் பெற்றவர்கள் குறைவாக இருந்ததும் இதற்கு காரணமாக இருந்திருக்கலாம்.

இதைப் போலவே அற்புத சுகங்கள் தினந்தோறும் நடைபெற்றது என்பதும் உண்மைக்கு புறம்பான வியாக்கியானமாகும். அற்புத சுகங்கள் நடைபெற்றதாக புதிய ஏற்பாட்டில் நாம் வாசித்தாலும், அப்போஸ்தலரும் அவர்களுடன் இணைந்து ஊழியம் செய்தவர்களுமே இவைகளில் சம்பந்தப்பட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும். தான் நடபித்த அற்புத சுகங்கள் அப்போஸ்தலரின் அடையாளங்கள் என்று 2கொரிந்தியர் 12:11-12 -ல் பவுல் வாதிடுகிறார். புறஜாதி மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும்படி பவுல் அப்போஸ்தலராக ஏற்படுத்தப்பட்டதும், ஆண்டவரின் வார்த்தையை எழுதும் அதிகாரம் பெற்றதும் இந்த அடையாளங்களால் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. இதையே மற்ற அப்போஸ்தலரும் பெற்றிருந்தனர். மற்ற பட்டணங்களில் உள்ள விசுவாசிகள் அந்நியபாஷைகளில் பேசியதாக மற்ற நிருபங்களில் எதையும் வாசிப்பதில்லை. இந்த சம்பவங்களே எல்லா இடங்களிலும்

உள்ள விசுவாசிகளுக்கு அடையாளமாகக் கொடுக்கப்பட்டது. இவைகளை வைத்து ஒவ்வொரு நாளும் அற்புதங்கள் நிகழ்ந்ததாகவும், அந்நியபாஷைகள் பேசப்பட்டதாகவும் சிலர் போதனை செய்வது தேவனுடைய வார்த்தைக்கு எவ்வளவு தூரமானதென்று விளங்கிக் கொள்ளலாம்.

# 15. இன்றும் ஆண்டவர் சுகமளிக்கிறாரா?

**ஆண்டவரும் அவருடைய சீஷரும் நிறைவேற்றின அற்புத சுகங்களை மாதிரியாக வைத்து நாம் இன்று ஊழியஞ்செய்யக் கூடாதா? இன்று தெய்வீக சுகங்கள் என்ற ஊழியம் அவசியமில்லையா?**

*ஜனங்களின் சுகவீனத்தை ஆண்டவர் நிச்சயம் குணப்படுத்துகிறார். இதில் எந்தவித சந்தேகத்திற்கும் இடமில்லை. ஆனால் அவர் சுகப்படுத்தும் இரண்டு முறைகளை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ளவேண்டும். தமது நேரடியான வெளிப்பாட்டைப் பெற்ற செய்தியாளரை நிரூபிக்க ஆண்டவர் பிரம்மாண்டமான முறையில் அடையாளமாக நிகழ்த்திய அற்புத சுகங்கள் முதலாவது வகையாகும். யாக்கோபு* ***5:14-16*** *வசனங்களில் நாம் வாசிப்பது இரண்டாவது வகையாகும். இந்த குணப்படுத்துதல் அடையாளத்திற்கோ அல்லது யாரையும் நிரூபிக்கவோ கொடுக்கப்படவில்லை. கிரேக்க மூல பாஷையில் இந்த வசனங்களில் காணப்படும் சுகவீனம் நீண்ட நாட்களாக காணப்படும் வியாதியின் தன்மையைக் குறிக்கிற ஒன்றாகும். ஒரு அற்புத ஊழியரை அழைக்கும்படி இங்கு நமக்கு கற்றுக் கொடுக்கப்படவில்லை. மாறாக, நம்மை நேசித்து நமக்காக ஜெபிக்கிற உள்ளூர் சபையின் மூத்த விசுவாசிகளை அழைக்க வேண்டுமென்று யாக்கோபு அறிவுறுத்துகிறார். அப்பொழுது நமது விருப்பப்படியோ, எதிர்பார்ப்பின்படியோ அல்லாமல், ஆண்டவர் தமது சர்வ அதிகாரத்தின்படி, எப்பொழுது எப்படி சுகமளிக்க விரும்புகிறாரோ அப்படிச் செய்ய நம்மை ஒப்புக்கொடுக்கிறோம். இந்த வசனங்களில் எப்படி ஒருவர்*

சுகம் பெறுவார் என்றோ, எவ்வளவு காலமாகும் என்றோ குறிப்பிடப்படவில்லை. மருத்துவ உதவிகள் தேவைப்படுமோ, தேவைப்படாதோ என்ற வழிமுறைகளையும் நாம் காண்பதில்லை.

இந்நிலையில் இந்த மனிதர் சுகம் பெற்றால், ஆண்டவர்தான் சுகமளித்தார் என்று எப்படிச் சொல்லமுடியும்? என்ற கேள்வி எழலாம். இங்குதான் சுகங்களைப் பற்றிய ஒரு உண்மையை நாம் காணப்போகிறோம். தேவனுடைய குடும்பத்தோடு சம்பந்தப்பட்டதே சுகமாகும். இது ஒரு காட்சியல்ல. மாயத்தோற்றத்தை விளைவிப்பதுமல்ல. வெளி உலகத்திற்கான அடையாளமுமல்ல. சபையின் ஆசீர்வாதத்தின் ஒரு பகுதியாக விசுவாசிகளின் பக்திவிருத்திக்காக கொடுக்கப்படுகிற அனுபவமே இதுவாகும். யாக்கோபு 5 -ஆம் அதிகாரத்தில் நிச்சயமாக அற்புத ஊழியர்களைப் பற்றி குறிப்பிடப்படவில்லை. ஆனால் ஜனங்களின் சுகவீனத்தைப் பற்றி ஆண்டவருக்கு நிச்சயம் தெரியுமென்பதும், அவர் கரிசனை உள்ளவராக இருக்கிறார் என்பதும், தமது சித்தத்தின் படியும், தமது வழிகளிலேயும் அவர் கிருபையாய் உதவி செய்கிறார் என்பதுமே நாம் இப்படிப்பட்ட வசனங்களில் இருந்து நிச்சயம் அறிந்துகொள்ளுகிற சத்தியம். நாம் எறேடுக்கப்படும் விண்ணப்பத்திற்கு ஆண்டவர் அளிக்கும் பதில் முற்றிலும் அவருடைய சித்தத்திற்கு உட்பட்டது என்பதை எந்தவிதமான சந்தேகமும் இல்லாமல் புரிந்துகொள்ள வேண்டும். நாம் மேன்மையாக அங்கீகரிக்கக் கூடிய புதிய ஏற்பாட்டு விசுவாசிகளில் அநேகர் ஜெபம் செய்தும் சுகம் பெற்றதாக வாசிப்பதில்லையே. பெந்தகொஸ்தே நாளுக்குப் பிறகு வாழ்ந்தவர்களில் மிகவும் அருமையான ஊழியராகிய பவுலை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். பவுல் தொடர்ந்து சரீர பலவீனத்தால் பாதிக்கப்பட்டிருப்பதை அறிகிறோம். மாம்சத்தில் ஒரு முள் தனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பவுல் சொல்லும்போதே அது எப்படிப்பட்ட தன்மையுடையது

என்பதை நாம் ஆராய முயற்சிக்கிறோம். பவுலின் பலவீனத்தை வைத்து நமது சுகவீனங்களை அறிந்துகொள்ள வேண்டுமென்றே, இதுதான் பவுலின் பலவீனம் என்று குறிப்பிடப்படவில்லை. இந்த முள்ளைக் குறித்து பவுல் செய்த காரியமோ நமக்கு அருமையான பாடமாகும். அப்போஸ்தலனாக தான் பெற்ற வரத்தை உபயோகிக்கவோ அல்லது தான் கண்டிப்பாக சுகம் பெற்றே ஆகவேண்டுமேன்றோ பவுல் போராடவில்லை. வல்லமையுள்ள ஆண்டவரிடம் மூன்று முறை மன்றாடியதாக அவரே குறிப்பிடுகிறார். ஒருவேளை அவர் ஆண்டவரே இந்த முள் மிகவும் வேதனையாகவும், துன்பமாகவும் இருக்கிறது, இது ஊழியத்தை பாதித்துவிடும் போல உள்ளது. உமக்கு சித்தமானால் சுகமாக்கும் என்று ஜெபித்திருக்கலாம். ஆனால் ஆண்டவரின் பதில் என்ன? "என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" என்பதாகும். இதனை சந்தோஷமாக பவுல் ஏற்றுக் கொண்டதாக நாம் 2கொரிந்தியர் 12:9-10 வசனங்களில் வாசிக்கிறோம்.

குறிப்பு: ஆண்டவரின் கிருபைக்கு வெளியே பலமுள்ளவர்களாக இருப்பதைக் காட்டிலும், அவருடைய கிருபையின் உள்ளே பலவீனர்களாக இருப்பதே உண்மையான விசுவாசியின் வாஞ்சையாக இருக்கவேண்டும்.

கிறிஸ்தவ வாழ்க்கையின், ஊழியத்தின் உன்னதமான இரகசியத்தை நாம் இங்கு தெளிவாகக் காண்கிறோம். ஆண்டவரின் வல்லமையையும், கொடுத்தலையும் உதவியற்ற நிலைமையிலும், பெலவீனமான சூழ்நிலைகளிலுமே அதிகமாக நாம் ருசிக்கிறோம். "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்பதே ஆண்டவரின் பிரதான கட்டளையாகும். நமது சுகம், பெலன், சக்தி இவைகளை மட்டும் வைத்து ஆண்டவர் தமது இராஜ்ஜியத்தை மேன்மைப்படுத்துவதில்லை.

ஆண்டவர் கல்வாரியில் சம்பாதித்த வெற்றியின் மீது நாம் அதிக விசுவாசம் வைக்காமல் இருப்பதினாலேயே சுகம் பெற்றுக் கொள்ளுகிறதில்லை என்று சிலர் செய்கிற பிரசங்கத்தின்படி பார்த்தால் பவுலும் இவர்கள் பார்வையில் குற்றவாளி ஆகிவிடுகிறாரே? சபை சரித்திரத்தில் குருடர்களாக, பெலவீனர்களாக, உதவியற்றவர்களாக வாழ்ந்த அநேக பரிசுத்தவான்களை நாம் அறிவோமே! யோகன்னாள் (*Joni*) என்று சொல்லப்படுகிற வாலிபச் சகோதரியின் வாழ்க்கை சரிதையை உங்களில் அநேகர் வாசித்திருப்பீர்கள். (இந்த நூல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்நூலை ஒவ்வொரு விசுவாசியும் வாசிக்க வேண்டிய ஆசீர்வாதமான நூல்). இந்த சகோதரி ஒரு விபத்தில் கழுத்திற்கு கீழ் முற்றிலும் செயலற்ற நிலையில், சக்கர வண்டியின் உதவியுடன் அமெரிக்காவில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இந்த சகோதரி ஆண்டவரை விசுவாசித்த போது தான் உடனடியாக முற்றிலும் சுகப்படுத்தப்படுவார் என்று நம்பிக்கைக் கொண்டிருந்தார். கிறிஸ்தவ வாழ்வில் இந்நாட்கள் தான் மிகவும் துக்ககரமான நாட்களாக இருந்தது என்றும், இந்நாட்களில் கொண்டிருந்த நம்பிக்கை எவ்வளவு தவறானது என்றும் வேதத்தை ஜெபத்துடனும், கருத்துடனும் வாசித்தபொழுது கண்டுகொண்டேன் என்று அந்த சகோதரி கூறியுள்ளார்.

பவுல் ஜனங்களை சுகப்படுத்துவதற்காக அசாதாரணமான வல்லமை பெற்றவர் என்று நாம் சொல்லலாம். இந்த அடிப்படையில் அமெரிக்காவில் (தமிழ் கிறிஸ்தவ உலகிலும்) அநேக கிறிஸ்தவ அடையாளப் போதகர்கள் ரேடியோ நிகழ்ச்சிகள் மூலம் ஜனங்கள் தங்கள் கைக்குட்டையை பணத்தோடு அனுப்பி வைக்கச் சொல்லுகிறார்கள். இந்த துணி ஜெபித்து திருப்பி அனுப்பப்படும். யாருக்கு அதிக விசுவாசம் இருக்கிறதோ அவர்கள் சுகம் பெறுவார்கள் என்று விளம்பரம் செய்யப்படுகின்றது. இன்னொரு வகையில் சொல்ல

வேண்டுமானால் அற்புதம் நடைபெறாவிட்டால் ஊழியர் அதற்கு பொறுப்பாளி அல்ல. இது தேவ தூஷணம் இல்லையா? ஆண்டவர் அப்போஸ்தலருக்கு அடையாளமாகக் கொடுத்த இந்த வரத்தை இப்படியா திரித்து போதிப்பது?

ஆண்டவருடைய வார்த்தையில் கொடுக்கப்பட்டுள்ள இந்த இரண்டு விதமான சுகமளித்தலைப் பற்றி அடையாள ஊழியர்களுக்குக் கவலையில்லை. ஆனால் நாம் அவற்றை நன்றாக விளங்கிக் கொள்ளவேண்டும். அப்போஸ்தலரின் கரங்களால் அடையாளமாக நிறைவேற்றப்பட்ட அற்புதமான கிரியைகள் முதலாவது வகை. இன்றைக்கு ஆண்டவர் சுகமளிக்கும் முறை, யாக்கோபு 5-வது அதிகாரத்தில் வாசிப்பதின் அடிப்படையிலான சத்தியமாகும். இதையே நாம் கடைபிடிக்க வேண்டும்.

நாம் தனிப்பட்ட முறையில் நம்முடைய சுகத்திற்காக ஜெபிக்கலாமா? கட்டாயம் ஜெபிக்கலாம். அவ்விதமாக ஜெபிக்கும் பொழுது கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு சுகமளிக்க இன்றும் வல்லவராக இருக்கிறார் என்பதை மறந்துவிடக்கூடாது.

# 16. நாம் பிசாசுகளைத் துரத்தலாமா?

**முதல் நூற்றாண்டு துவங்கி இன்று வரை பிசாசின் ஆதிக்கம் சபையை பாதித்து வருகிற நிலைமையில், அடையாள ஊழியர்கள் செய்யும் பிசாசுகளைத் துரத்தும் ஊழியம் அவசியமானதல்லவா?**

*பிசாசுகளைத் துரத்துவது அடையாள ஊழியர்களின் மையமாக இழையோடினாலும், சத்தியத்தின் வெளிச்சத்திற்கு இது தூரமானதாகும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வந்த நாள் முதல், மனிதனின் "சித்தத்தை" மீறி பிசாசு அவனை ஆட்கொள்ள முடியாது. மாறாக தாங்களாக பிசாசின் கிரியைகளுக்கு தங்களை ஒப்புக்கொடுக்கிறவர்களும், ஆவி உலகத்தோடு சம்பந்தப்படுகிறவர்களும் நிச்சயமாக அவனால் ஆட்கொள்ளப்படுகிறார்கள். வேதத்தில் பிசாசு பிடிக்கப்படுதலின் குணாதியங்களை இப்படி நாம் அறிகிற நிலையில், இப்படிப்பட்ட அறிகுறிகள் இல்லாத நபர்களிடம் இருந்தும் அடையாளப் போதகர்கள் பிசாசுகளை கண்டுபிடித்து விரட்டி வருகின்றனர். இந்த சமயத்தில் பிரத்யேகமான இனம் புரியாத உணர்ச்சிகளை இதற்காக உண்டுபண்ணுவதை இவர்கள் கலையாக்கிக் கொண்டுள்ளனர். மனிதனின் விருப்பத்திற்கு, சித்தத்திற்கு வெளியே பிசாசு ஒரு மனிதனை ஆட்கொள்ள முடியாது என்பதற்கான போதனைகள் அடங்கிய வசனங்களை நாம் கீழே காணலாம்.*

*1. சாத்தான் மனிதர்களின் ஆத்துமாக்களை நேரடியாக ஆட்கொள்ளுகிற வல்லமை குறைக்கப்பட்டுள்ளது என்பதை லூக்கா 11:20-22 மற்றும் மாற்கு 12:31 -வது வசனங்களில் வாசிக்கிறோம்.*

2. மனிதரின் ஆத்துமாக்களை ஆட்கொள்ளும் சுதந்திரம் பறிக்கப்படும் என்பதை பிசாசுகள் அறிந்தே இருக்கின்றன என்பதை லூக்கா 8:28, மாற்கு 1:24 -ம் வசனங்களில் காண்கிறோம்.

3. பிசாசு மனிதனின் மனதையும், ஆத்துமாவையும் ஆட்கொள்ளுகிற சக்தியை இழந்து, கல்வாரி ஆண்டவரால் சிறை பிடிக்கப்பட்டதை எபேசியர் 4:8, சங்கீதம் 68:18 -வது வசனங்களின் மூலம் நாம் அறியலாம்.

4. கடைசி காலம் முடிகிற வரை வெளிப்படையாக செயல்பட முடியாதபடி பிசாசு தள்ளப்பட்டுள்ளான். மற்றபடி இரகசியமாகவும், திருடனைப் போலவும் இன்றும் செயல்படுகிறான். வஞ்சகம் மற்றும் பொய் ஆகியவைகளே பிசாசின் ஆயுதங்களாகும். பிசாசு தான் விரும்புகிறபடி அவதாரம் எடுத்து மனிதனுடைய ஆத்துமாக்களை ஆட்கொள்ளுகிற அதிகாரம் அவனுக்கு இல்லை. (2 தெச 2:6-8).

5. புதிய ஏற்பாட்டின் அநேக இடங்களில் பிசாசின் தொடர்ச்சியான கிரியைகள் குறிப்பிடப்பட்ட பொழுதிலும் ஆத்துமாவை சிறைபிடிப்பதாகவோ அல்லது ஆட்கொள்ளுவதாகவோ நாம் வாசிப்பதில்லை. சபையில் வேற்றுமையை புகுத்துவது, வஞ்சகம், பொய், சபையை பல வகைகளில் துன்புறுத்துவது, கள்ள உபதேசங்களை தந்திரமாக புகுத்துதல் போன்ற கிரியைகளே பிசாசின் செய்கைகளாக 1தீமோ 4:1, யாக்கோபு 3:14-15, 1யோவான் 4:1-6, வெளி 12:17 போன்ற வசனங்கள் நமக்கு கற்றுக் கொடுக்கிறது.

6. ஆண்டவருடைய அப்போஸ்தலரும் அடையாளமாக பிசாசுகளை துரத்தியதை நாம் நிச்சயம் சுவிசேஷங்களில் வாசிக்கிறோம். என்றாலும் மற்ற விசுவாசிகளும் ஊழியர்களும் இப்படி செய்யவேண்டும் என்று கட்டளையோ,

ஆலோசனையோ கொடுக்கப்படவில்லை. நிருபங்களில் பிசாசுகளை துரத்தும்படியான கட்டளையோ ஆலோசனையோ கொடுக்கப்படவில்லை.

இந்த வசனங்களின் அடிப்படையில் "பிசாசு பிடித்திருக்கிறது" என்பதை மனுக்குலத்தின் குறைவாகவே நாம் காண்கிறோம். மெய்யாகவே பிசாசினால் பிடிக்கப்பட்ட ஒருமனிதனை நாம் காணும் பொழுது என்ன செய்யவேண்டும்? இப்படிப்பட்டவர்களை உண்மையாகவே விடுவிக்க அதிகாரம் படைத்த ஆண்டவரிடமே வழிநடத்த வேண்டும். எப்படி ஒரு மனிதனின் ஆத்துமாவை நாம் விடுவிக்க முடியாதோ, அதே போல பிசாசினால் ஆட்கொள்ளப்பட ஒருவரையும் நாம் விடுவிக்க முடியாது. மனித ஆத்துமாவின் எல்லா பிரச்சனைகளுக்கும் உதவி செய்யக்கூடிய பிரதான ஆசாரியராகிய கிறிஸ்துவிடமே இவர்கள் விடுதலைப் பெறும்படிக்கு அறிவுறுத்தப்பட வேண்டும். நமது ஆண்டவரின் பிரதான ஆசாரியப் பணியை நாம் எடுத்து செயல்பட முடியாது. பிசாசோடு எந்த வகையிலும் நேரடியாக தொடர்பு வைக்கக் கூடாது என்பதை லேவி 20:27, உபாகமம் 18:10-12 வசனங்களில் வாசிக்கிறோம்.

பிசாசோடு நமக்கு மறைமுகமான போராட்டம் உண்டென்று புதிய ஏற்பாட்டில் கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. தேவன் நமக்காக ஏற்படுத்தியுள்ள ஆயுதங்களைப் பயன்படுத்தி மட்டுமே பிசாசுகளை எதிர்க்க வேண்டுமேயன்றி, தொடுவதோ, பேசுவதோ, நேரடியாகப் போர் செய்வதோ எபேசியர் 6:10-18 வசனங்களிலோ, வேறு எங்கோ நமக்கு போதிக்கப்படுவதில்லை. பிசாசு நம்மை சோதிக்கும் போது வார்த்தைகளைக் கொண்டு அதட்டாமல், ஆவிக்குரிய நமது கடமைகளைச் செய்து, சுவிசேஷத்தை அறிவித்து ஜனங்களின் இருதயத்தை ஆண்டவருக்கு நேராக திருப்ப வேண்டும்.

*சாத்தானை விரட்டிவிட்டால் எல்லா வியாதிகளில் இருந்தும் நாம் விடுதலைப் பெறலாம் என்று சிலர் போதிப்பது, சுகவீனங்கள் எல்லாவற்றிக்கும் அவனே காரணம் என்று கூறுவது போல் உள்ளது. தாங்களாகவே பிசாசுக்கு ஒப்புக்கொடுத்து அவனால் நேரடியாக ஆட்கொள்ளப்பட்டவர்கள் தவிர, புதிய ஏற்பாட்டில் சுகவீனங்கள் எல்லாவற்றிற்கும் சாத்தானே காரணமென்று நாம் வாசிப்பதில்லை. இந்த மேலோட்டமான உபதேசங்கள் இளம் விசுவாசிகளை அதிகம் பாதிக்கும் என்பதால், நாம் சிரத்தையோடு இவர்களுக்கு கற்றுக் கொடுப்பது அவசியமாகும்.*

*இன்று சபைகளுக்குள் புகுந்து தவறான போதகங்களால் மறைமுகமாக தேவனுடைய ஜனங்களை திசைதிருப்ப முயற்சிப்பதே பிசாசின் பிரதான வேலையாகக் காணப்படுகிறது. இப்படி தன்னுடைய பிரதான வேலையை அவன் கவனமாக செய்து கொண்டிருக்கும்பொழுது, சில விசுவாசிகள் தங்களது கற்பனையில் உருவான பிசாசை துரத்திக் கொண்டிருப்பது எவ்வளவு வினோதமானது!*

# 17. தீர்க்கத்தறிசனம் அபிஷேகிக்கப்படுவதில்லையா?

**இன்று பிரசங்கத்தின் மீது ஆண்டவரின் அபிஷேகத்தை பிரசங்கிமார் நாடும்போது, தீர்க்கத்தரிசனம் உரைகிறவர்களையும், அறிவை உணர்த்துகிறவர்களையும் நாம் மறுக்கலாமா? பரிசுத்த ஆவியானவரின் கிரியையோடு செய்யப்படுகின்ற பிரசங்கத்தில் இன்றைய தேவைகளுக்குக்கான தேவனுடைய செய்தியாக தீர்க்கத்தரிசனமும் அடங்கியிருக்கும், இதற்கும் ஞானத்தையும், அறிவையும் உணர்த்துகிற வரத்திற்கும் என்ன வித்தியாசம்?**

இந்த கேள்வியை கேட்கும்போது தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்தைப் பற்றி தெளிவில்லாத ஆபத்தான எண்ணத்தை நாம் கொண்டுள்ளோம் என்றே விளங்குகிறது. சபையில் ஏற்பட்ட சீர்திருத்தம் *(Reformation)* "தேவனுடைய வார்த்தை மட்டுமே" என்ற உபதேசத்தை வலியுறுத்தியத்தின் விளைவாக நிறைவான பலனைப் பெற்றது. இதை தவிர்க்கும் போது தேவனுடைய வார்த்தைக்கு வெளியே நேரடியாக வெளிப்பாட்டை இன்றும் பெறுகிறோம் என்று சொல்லுபவர்களை அங்கீகரிக்க வேண்டியதாகும். தேவனுடைய வார்த்தையை விளங்கிக் கொள்ளுவதற்கு ஆவியானவரின் தொடுதலும், அனுகிரகமும் கண்டிப்பாக அவசியமானதாகும். இரட்சிப்பு, விசுவாசம் மற்றும் வாழ்க்கையின் நடைமுறைக்குத் தேவையான எல்லா ஆலோசனைகளும் தேவனுடைய வார்த்தையில் கொடுக்கப்பட்டுள்ள நிலையில், மனித ஞானமோ, புதிய வெளிப்பாடுகள் என்று சொல்லப்படுபவைகளோ ஏற்றுக் கொள்ளப்பட முடியாது. சில பிரசங்கிமார் தங்களுக்கு மட்டுமே

இப்படிப்பட்ட ஆவியின் வரம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், விளம்பரப்படுத்துகின்றனர்.

ஆண்டவர் மனிதனோடு பலவகைகளில் பேசுகிறார் என்றும், அதில் வேத புஸ்தகம் ஒரு அம்சம் மட்டுமே என்கிற ரீதியில் இப்படிப்பட்ட அடையாள போதகர்கள் செயல்படுவது எவ்வளவு துணிகரமானது. ஆண்டவரின் வார்த்தையாகிய வேத புஸ்தகத்தைத் தவிர தாங்கள் பெறும் தரிசனம், நேரடி வெளிப்பாடு இவைகள் மூலமாகவும் ஆண்டவர் பேசுகிறார் என்பது போன்று இவர்கள் செயல்படுவது எப்படிப்பட்ட வேதபுரட்டு! நமது எல்லாவிதமான கருத்துகளுக்கும், அபிப்பிராயங்களுக்கும், யோசனைகளுக்கும், செயல்களுக்கும், வழிகாட்டுதலாக தேவனுடைய வார்த்தை மட்டுமே சரியான கருவியாக கொடுக்கப்பட்டுள்ளது. இரட்சிக்கப்பட்ட எல்லா விசுவாசிகளும் தங்கள் வாழ்க்கையின் அனைத்து தேவைகளுக்கும் சரியான பரிகாரமாக, தேவன் தமது சித்தத்தை வார்த்தையின் மூலம் கொடுத்துள்ளார். வரம் பெற்றவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் சிலரை மட்டுமே நாம் சார்ந்து அவர்கள் மட்டுமே நமக்கு அர்த்தப்படுத்த வேண்டுமென்ற நியதியையும் ஆண்டவர் ஏற்படுத்தவே இல்லை. சபையின் இருண்ட காலத்தில் இந்த கருத்தே பிரதானமாக வலியுறுத்தப்பட்டதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். **1689** -ஆம் ஆண்டு விசுவாச அறிக்கை இந்த விதமாக நமக்கு போதிக்கிறது. "வேத வசனங்களுக்கு சரியான அர்த்தத்தை வேத வசனங்கள் மட்டுமே தர இயலும். எனவே, தேவனுடைய வார்த்தையில் சில பகுதிகளைப் பற்றி ஐயம் எழுகிற நிலையில் இந்தப் பகுதியைப் பற்றி இன்னும் தெளிவாக நமக்கு எடுத்துரைக்கிற வேதப்பகுதிகளின் உதவியோடு ஆராய்ந்து பார்த்தல் அவசியமானது. இப்படி எந்தவொரு சந்தேகத்தையும் புரிந்து, நிதானிப்பதற்கு தேவனுடைய வார்த்தை மட்டுமே

மூலக் காரணமாக இருக்கவேண்டும். நாம் தேவனுடைய வார்த்தையில் திட்டமாக சார்ந்து நிலைத்திருக்க வேண்டும்".

தேவனுடைய வார்த்தையை போதிக்கிறவர்களும் சரி, அதை வியாக்கினப்படுத்துகிறவர்களும் சரி, புதிய வெளிப்பாடு என்ற போர்வையில் எதையும் கூட்டவோ குறைக்கவோ முயற்சிக்கக் கூடாது. தேவனுடைய வார்த்தை பரிபூரணம் பெற்ற நிலையில், இவர்கள் அந்த வார்த்தையிலிருந்து மட்டும் கருத்துக்களை எடுத்துச் சொல்லுகிறவர்களாக தங்கள் பணியை செய்கிறவர்களாக இருக்க வேண்டும். கிட்டத்தட்ட கி.பி 66 -ல் அப்போஸ்தலனாகிய பேதுரு "தீர்க்கத்தரிசிகள்" என்ற வார்த்தைக்குப் பதிலாக "போதகர்கள்" என்ற வார்த்தையை பயன்படுத்தியதை 2பேதுரு 2:1 -ல் வாசிக்கிறோம். கள்ளத்தீர்க்கத்தரிசிகள் ஜனங்களுக்குள் "இருந்தார்கள்" என்ற இந்த வசனத்தின் வார்த்தைகள் தேவனுடைய வார்த்தையைப் பற்றி நேரடி வெளிப்பாடு நிறைவடைகிற சூழ்நிலையில் எழுதப்பட்ட வார்த்தைகளாகும். அதுமட்டுமல்ல கடைசியாக தீமோத்தேயு மற்றும் தீத்து நிருபங்களில் போதகர்கள் நியமிப்பதற்கான தகுதிகள் கொடுக்கப்பட்டதே அன்றி தீர்க்கத்தரிசிகளை எப்படி நியமிப்பது என்ற வரைமுறை கொடுக்கப்படவில்லை.

தேவனுடைய வார்த்தையிலிருந்து ஒருவர் எதையாவது விளக்கிச் சொல்லும்பொழுது அவர் "தீர்க்கத்தரிசி" என்ற ஸ்தானத்திலிருந்து இந்த பணியைச் செய்யாமல், உன்னத தீர்க்கத்தரிசியான ஆண்டவரின் பிரதிநிதியாக மட்டும் செயல்படுகிறார் என்று பொருள்படுத்தலாம். தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்திற்குப் புறம்பே உள்ள எந்த போதனையும் தீர்க்கத்தரிசன ஊழியம் அல்லவே. அபிஷேகத்துடன் அல்லது ஆவியானவரின் கிரியையோடு போதிக்கிறவர்களை தீர்க்கத்தரிசிகள் என்று சொல்லாமல் இருப்பது நல்லது.

ஏனெனில் இந்த வார்த்தை தேவனுடைய வார்த்தையை நேரடியாகப் பெறுகிறோம் என்று சொல்லுபவர்களைப் பற்றியே குறிப்பதாக மாறிவிடும். தேவனுடைய வார்த்தையை தைரியத்தோடும், கரிசனையோடும், முழு முயற்சியோடும், சரியான ஆயத்தத்துடனும் வியாக்கியானப்படுத்தி தெளிவாகவும், கருத்துடனும், உணர்வுடனும் பிரசங்கிப்பவர்களையே அபிஷேகத்தோடு போதிக்கிறவர்கள் என்று நாம் சரியாக அர்த்தப்படுத்தலாம். இதைத் தவிர்த்து, தாங்கள் புதிதாக வெளிப்பாடு பெறுகிறோம் என்று சொல்லுபவர்களை இப்படி அழைக்க முடியாது.

# 18. ஆண்டவர் வரும்வரை வரங்கள் இருப்பதில்லையா?

**“நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்து போகும்” என்று 1கொரி 13:10 -ல் தேவனுடைய வார்த்தை பரிபூரணம் பெறுகிறதைப் பற்றி மாத்திரம் குறிப்பிடாமல் ஆண்டவரின் வருகையைப் பற்றியும் குறிப்பிடுவதால் அதுவரையிலும் வரங்கள் இருக்க வேண்டியது தானே உண்மை. இந்த வசனம் ஆண்டவரின் வருகையைப் பற்றியே குறிக்கிறதென்று அநேக வேதப் பண்டிதர்கள் வியாக்கியானப்படுத்தியுள்ள நிலையில் வரங்கள் கடைசிவரை இருக்க வேண்டுமென்று கூறுவதில் தவறொன்றும் இல்லைதானே?**

தேவனுடைய வார்த்தை பரிபூரணம் பெறுகிற நிலையில் நேரடி வெளிப்பாடு ஓயும் என்று அநேக வேதப்பண்டிதர்கள் இந்த வசனத்திற்கு அர்த்தம் கொடுத்திருக்கிறார்கள். தீர்க்கத்தரிசன வரமோ, அந்நிய பாஷைகள் பேசுவதோ குறையும் என்பதே இதன் பொருளாகும். கடந்த காலத்தில் வாழ்ந்த சில வேதப்பண்டிதர்கள் இதையே ஆண்டவரின் இரண்டாம் வருகைக்குப் பின்பு நித்திய வாழ்வில் நிறைவடையக் கூடிய நிலைமை என்றும் நம்பினர். எப்படியாயினும் பவுல் இங்கே சொல்லுவதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். தேவனுடைய வார்த்தை பரிபூரணமடைவதற்காக, வெளிப்பாட்டின் வரங்கள் முடியும் என்பதையே இந்த அதிகாரத்திலிருந்து அறியலாம். ஞான வரங்கள் கொடுக்கப்பட்டிருந்ததின் கனியே இன்று நாம் பெற்றுள்ள சத்தியமாகும். இந்த உலகில் வாழும் வரை தேவனுடைய வார்த்தை போதுமானதாக கொடுக்கப்பட்டுள்ள நிலையில் ஆண்டவர் திரும்பி வந்தபின்பு நாம் முழு வெளிச்சத்தையும் பெறப்போகிறோம்.

"அந்நிய பாஷைகள் ஓயும்" என்று 1கொரி 13 -ஆம் அதிகாரத்தில் வாசிக்கும்பொழுது, சபையின் ஆரம்ப காலத்தில் கொடுக்கப்பட்ட வெளிப்பாட்டுடன் இது முடிவடைகிறதாக நாம் ஏற்கனவே சிந்தித்துள்ளோம். பவுல் இந்த இடத்தில் இன்று பேசப்படுகிற இயற்கையான பாஷைகளைப் பற்றியே கூறுவதாக விளக்கம் கொடுக்கின்றனர். நித்திய மகிமையில் எல்லா மொழிகளும், மனித பாஷைகளும் ஒழிக்கப்படும் என்று விளக்கமும் உண்டு. ஒரு நேரம் வரும்போது இந்த உலகத்தின் எல்லா பாஷைகளும் முடிவுபெற்று, மீட்கப்பட்டவர்கள் பரலோக பாஷையில் பேசப்போகிறார்கள் என்று அநேக வேதப்பண்டிதர்கள் விளக்கம் கொடுக்கின்றனர். படிப்பு, அறிவு மற்றும் இந்த உலகத்திற்கு தேவையான இப்படிப்பட்ட வரங்கள் காலம் வரும்பொழுது அவசியமற்றதாக போய்விடும் என்று ஜான் கால்வின் என்ற வேதப்பண்டிதர் கூறியுள்ளார்.

இந்த வசனங்களை நாம் எப்படி ஆராய்ந்து பார்த்தாலும் உலகின் கடைசிவரை அந்நிய பாஷைகளின் அவசியம் இருக்கும் என்று தீர்மானிக்க முடியாது. இந்த வசனங்களில் காலங்கள் முடிவதற்கும், பாஷையின் வரங்கள் முடிவதற்கும் எந்த சம்பந்தத்தையும் பவுல் குறிப்பிடாதபடியால் ஆண்டவரின் வருகைவரை அந்நியபாஷைகள் இருக்கும் என்று நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

# 19. தனி தியானத்தில் பாஷைகளின் நிலை என்ன?

**இப்படியும் ஒரு கேள்வி கேட்கப்படுகிறது: அந்நியபாஷையில் பேசுகிறவன் மனுஷரிடத்தில் பேசாமல் கர்த்தரிடத்தில் பேசுகிறான் என்றும், தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான் என்று பவுல் 1கொரி 14:2 -ல் குறிப்பிடப்படவில்லையா? அப்படி இருக்கும்பொழுது அந்நியபாஷையில் ஜெபிப்பதையும், பக்திவிருத்தி அடைவதையும் நாம் மறுக்கலாமா? அது சரிதானா?**

இந்த வசனங்களை அதின் பின்னணியோடு ஆராய்ந்து பார்க்கைவிட்டால் இந்த கருத்தை நாம் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கும். பேசப்படுகிற அந்நியபாஷை ஜனங்கள் விளக்கிக் கொள்ளும்படி அர்த்தப்படுத்தப்படாவிட்டால் அதனால் எந்த பிரயோஜனமும் இல்லை என்று இதே அதிகாரத்தில் விரிவாக இதைப் பற்றி நாம் படித்திருந்தாலும் இந்த கேள்வியின் அடிப்படையில் இதை ஆலோசிப்பது நன்மை பயக்கும்.

எல்லா வரங்களும் சபையிலுள்ள எல்லோருக்கும் ஆண்டவரின் செய்தியை அறிவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை பொதுவான போதனையாக 1கொரி 12:67 -ஆம் வசனங்களின் மூலம் நாம் ஏற்கனவே அறிந்துள்ளோம். அந்நியபாஷை பேசப்பட்டு அது அர்த்தப்படுத்தப்படாத நிலைமை கொரிந்து சபையில் இருந்துள்ளது. பவுல் இந்த சூழ்நிலையை மனதில் வைத்துதான் மேற்கண்ட வசனத்தை எழுதியுள்ளார். அர்த்தப்படுத்தப்படாத நிலைமையில் அந்நியபாஷையில் பேசுகிறவர்களே இந்த செய்தியை பெறுவதினால் மற்றவர்களுக்கு இதனால் எந்த பயனும் இல்லாதபட்சத்தில் தங்களுக்கே பக்திவிருத்தி உண்டாகப்

பேசுகிற நிலைமை ஏற்பட்டு விடுகிறது என்பதையே பவுல் இப்படி விவரிக்கிறார். அந்நியபாஷையில் பேசுகிறவர் அதன் அர்த்தத்தை அறிந்தே இருக்கிறார் என்பதும் இதிலிருந்து தெளிவாக விளங்குகிறது. இன்றும் அந்நியபாஷையில் பேசுகிறோம் என்று சொல்லுபவர்கள் செய்கிற தவறுகளை அழகாக இதன் மூலம் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

கிரேக்க பாஷையில் சொல்லப்பட்ட அர்த்தத்தோடு இந்த வசனங்களை தியானிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நமது சிந்தையை தெளிவாகவும், உணர்வோடும் வளர்க்கிறோம் என்பதே மூல பாஷையில், அதாவது கிரேக்க பாஷையில் "பக்திவிருத்தி" என்ற வார்த்தைக்கு அர்த்தமாகும். கொரிந்து சபையில் அந்நியபாஷை பேசுகிற வரம் பெற்றவர்கள் இருந்தும் சபையில் அது உறுதிப்படுத்தப்படவில்லை. எனவே இந்த செய்தி சபைக்கானதே அன்றி தனிப்பட்ட நபருக்கல்ல என்று 1கொரி 12:7; 14:5 -வது வசனங்களில் இருந்து நாம் அறிகிறோம்.

அந்நியபாஷையில் பேசுகிறவருக்கு அவர் பேசுவது இன்னதென்று விளக்க வேண்டிய அவசியமில்லை என்கிற போதனை இன்று மிகவும் பிரபலமாகியுள்ளது. அர்த்தப்படுத்துகிறவர் இருந்தால் அவர் மட்டும் அதை விளக்கி வியாக்கியானப்படுத்துவது போதுமானது என்று சொல்லப்படுகிறது. பேசுகிறவருக்கே தான் பேசுகிறது என்னவென்று விளங்காதபட்சத்தில், அந்நிய பாஷையில் பேசுகிறவரும் பக்திவிருத்தி அடைகிறதில்லை என்பது பெரிய ஆபத்தாகும். அந்நியபாஷை பேசுகிறவரின் சிந்தை தெளிவான எந்த போதனையையும் பெறாமல், வெறும் உணர்ச்சிகரமான அனுபவத்தை மட்டும் பெறுவது எந்த வகையில் அவருக்கு பயனளிக்கும் என்பது பெரிய கேள்வியாகிறது? தான் பேசுவது

இன்னதென்று அறியாமல் ஏதோ ஒன்றைப் பேசி அதை வரம் என்று ஒருவர் சொல்லும்பொழுது அதை வேதப் புரட்டாகவே கருத வேண்டும். இப்படி உணர்ச்சிகளை மட்டும் சார்ந்து கற்பனையில் பேசுகிற வழக்கத்திலிருந்து உண்மையான விசுவாசிகள் நிச்சயம் விடுவிக்கப்பட வேண்டும். தெளிந்த புத்தியை இழந்து ஒரு விசுவாசி ஒருபோதும் வாழமுடியாது. அந்நியபாஷையில் பேசுகிறவன் மனிதனிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பேசுகிறான் என்று அந்நியபாஷையில் ஜெபிப்பதற்கு விளக்கம் கொடுக்கின்றனர். பேசப்படுகின்ற பாஷை அர்த்தப்படுத்தப்படாத பட்சத்தில் ஆண்டவருக்கே பிரசங்கிக்கிற வினோதமான சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது. தேவன் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறபடியால், இதை வைத்து ஒருவர் அந்நியபாஷையில் ஜெபிக்க முடியும் என்று விளக்கம் சொல்லுவது தவறானது. ஆண்டவரின் செய்தியை சபைக்கு சொல்லுவதற்காகவே அந்நியபாஷை ஏற்படுத்தப்பட்டதே அன்று வேறொன்றிற்கும் இல்லை.

இனி 1கொரி 14:14 -ம் வசனத்தையும் கவனிப்போம். ஒருவர் அந்நியபாஷையில் பேசும் வரம் பெற்றவராக இருந்த பொழுதிலும், சில சமயங்களில் பாஷை வெளிப்படும் போது அதற்கு அர்த்தம் தெரியாத பட்சத்தில் அதற்காக ஜெபிக்க வேண்டுமென்று பவுல் போதிக்கிறார். ஜெபமோ, பாடலோ, ஆராதனையோ எதை செய்தாலும் கருத்தோடும், அர்த்தத்தோடும் செய்யப்பட வேண்டுமென்பதே வேதத்தின் மாறாத போதனையாகும். மாறாக நமக்கே விளங்காமல் அந்நியபாஷையில் பேசுவது எவ்வளவு ஆபத்தானது என்றே இங்கு நமக்கு கற்றுக்கொடுக்கப்படுகிறது. நமக்கு நாமே கீழ்கண்ட கேள்விகளை கேட்டுப்பார்ப்போம். நாம் பேசுவது நமக்கே விளங்காத பட்சத்தில் அந்நியபாஷையில் ஜெபிக்கும்

பொழுது நாம் எந்த காரணத்திற்காக ஆண்டவருக்கு நன்றி சொல்லுவோம்? என்ன வார்த்தைகளால் நன்றி சொல்லுவோம்? என்ன வேண்டுதலை ஏறெடுப்போம்? இந்த கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாது அல்லவா? இப்படிப்பட்ட ஜெபங்களும், ஆராதனைகளும், மன்றாட்டுகளும் அர்த்தமற்றவைகளாக போய்விடுகிறது அல்லவா? ஒரு மெய்க் கிறிஸ்தவன் இப்படிப்பட்ட காரியங்களில் சம்பந்தப்படவே முடியாது.

# 20. பிசாசின் தந்திரங்கள்

**இன்றைய தீர்க்கதரிசனங்களும் அந்நியபாஷைகளும், தரிசனங்களும் ஆண்டவருடைய வார்த்தைக்கு புறம்பாக இருக்குமானால் இவைகள் பிசாசின் இடத்தில் இருந்தா வருகிறது? என்பது அடிக்கடி கேட்கப்படுகிற கேள்வியாக உள்ளது.**

அவ்வாறு இல்லையென்றால் இப்படித்தானே என்பது அநேகரின் சிந்தையாக உள்ளது. எல்லா சமயங்களிலும் அப்படி இருக்க வேண்டிய அவசியமில்லை. அருமையான தேவனுடைய மக்களும் தவறு செய்ய வாய்ப்புகள் உண்டு. பிசாசு இந்த விசுவாசிகளை நேரடியாக ஆட்கொண்டு அவர்களை ஏவுகிறான் என்பது இதன் அர்த்தமல்ல. எப்பொழுது ஒரு விசுவாசி உணர்ச்சிகளுக்கு அடிமைப்படுகிறானோ அப்பொழுது வித்தியாசமான அனுபவங்களைப் பெற வாய்ப்புள்ளது. சரீர, மன அலைச்சல்களினால் மாறுபட்ட மனோபாவங்களைப் பெற வாய்ப்புகளும் ஒருவருக்கு இருக்கவே செய்கிறது. இதனால் இவர் பிசாசினால் பிடிக்கப்பட்டு விட்டாரென கூறிவிட முடியாது. ஆண்டவர் அந்நியபாஷையில் தங்களை கட்டாயம் பேசச் சொல்லுகிறார் என்கிற தவறான எண்ணத்தினால் கீழ்படிய வேண்டுமென்ற விருப்பத்துடன் யதார்த்தமாக இந்த முயற்சிகளைச் செய்கிறவர்களும் உண்டு. சிலருக்கு இதற்கான பயிற்சிகளும் கொடுக்கப்படுகின்றது. உண்மையான விசுவாசிகளைப் பொறுத்தளவில் பிசாசிடமிருந்து இது வெளிப்படுவதல்ல. இனம் புரியாத அனுபவங்களைப் பெற விரும்புபவர்களும், தேவனைப் பிரியப்படுத்த விரும்பாதவர்களும் மட்டுமே பிசாசின் பாதிப்புகளுக்கு தங்களை ஒப்புக்கொடுக்க வாய்ப்புகள் உண்டு.

அதேபோல இன்று அநேக சுகங்களும் உண்மையாக இராமல் மேலோட்டமாக மனதளவில் சொற்ப நேரம் மட்டும் ஏற்படும் அனுபவங்களாக இருக்கிறது. இந்த சமயங்களில் பிசாசு நேரடியாக இதில் ஈடுபட்டுள்ளான் என்றும் நாம் கூறிவிட முடியாது. மாறாக இருளின் தொடர்புகளோடு, ஆவியின் சம்பந்தத்தோடு செய்யப்படுகின்ற எல்லா அடையாளங்களும் நிச்சயமாக பிசாசின் கிரியை என்று வியாக்கினப்படுத்துவதற்கு நாம் ஏற்கனவே பார்த்த வசனங்கள் உதவி செய்கிறது. இப்படி வெறும் அடையாளங்களை மட்டும் நாடிப் போவார்களேயென்றால் அநேக உண்மை விசுவாசிகளும் மேற்கண்ட வலையில் விழுவதற்கு வாய்ப்புகள் இருக்கவே செய்கிறது. இந்த வகைப் போதகங்கள் உணர்ச்சிகளையும், இனம் புரியாத அனுபவங்களையும், அடையாளங்களையும் மட்டுமே வலியுறுத்துவதாக உள்ளது. பிசாசு இந்த சமயங்களை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளுகிறான். அதன் பாதிப்புகளை நடைமுறையில் அநேக கூடுகைகளில் நாம் கண்டிருக்கிறோமே. இன்று இந்த அடையாளங்களும், சொப்பனங்களும் தேவனுடைய நேரடியான வழிநடத்துதலாக ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை பரவலாக காணப்படுகிறது.

"அந்நியபாஷை பேசுவதால் தேவன்மீது அன்பு பெருகுகிறது. அவரோடு நெருங்கிய ஐக்கியம் ஏற்பட்ட உணர்வு உண்டாகிறது. அநேக பிரச்சனைகளின் பாரம் குறைகின்றது" என்று டாக்டர். டொனால்ட் பிரடிரக் என்பவர் அந்நியபாஷையினால் பேசும் போது ஏற்படும் சில நன்மைகளாக தனது நூலில் எழுதுகிறார். சில உண்மையான விசுவாசிகளின் அடிப்படை வாஞ்சைகளாக இவைகள் கருதப்படுகிறது என்பது சரியே. ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்படியும் போது அந்நியபாஷைகளில் பேசாமலேயே இந்த நன்மைகள் அருளப்படுகிறது என்பதே உண்மையாகும். இப்படி

அந்நியபாஷையில் பேசி நன்மைகள் பெற்றோம் என்று சொல்லுகிற உண்மையான விசுவாசிகள் அறிந்துகொள்ள வேண்டிய உண்மை ஒன்று இருக்கிறது.

அது என்னவெனில், மேற்கூறிய ஆசீர்வாதங்களை அவர்கள் தாங்கள் கொண்டிருக்கும் வாஞ்சையினாலே பெற்றார்களேயன்றி, அந்நியபாஷையில் பேசினதால் இல்லை என்பதாகும். இதை மறந்து மேலும் மேலும் அடையாளங்களையும், அற்புதங்களையும் மட்டும் தொடர்ந்து ஒரு விசுவாசி நாடினால் திசை திரும்பிவிட வாய்ப்புகள் அதிகம். விசுவாசிகளாகிய நமக்கு தேவன் ஈவாகக் கொடுத்துள்ள மிகப்பெரிய பொக்கிஷமாகிய தெளிந்த புத்தியை நாம் இழந்து ஒருபோதும் செயல்படக் கூடாது. அந்நியபாஷையில் பேசுவதும், அற்புதங்களை நாடுவதும் தேவனுடைய பிரசன்னத்தை நிருபிக்கும் சின்னங்களாக ஏற்றுக் கொள்வது நாளடைவில் அதுவே பழக்கமாகி ஆபத்தில் கொண்டு செல்ல வாய்ப்புகள் உண்டு. இங்கே உண்மையான விசுவாசத்திற்கு இடமில்லாதது மட்டுமல்ல, தேவனுடைய வாக்குத்தத்தமும், அவருடைய சித்தமும், கிரியைகளும் முற்றிலும் மறக்கப்படுகின்றன. இது ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை சுருக்கமான வழிமுறைகளில் பெற கடைபிடிக்கிற செயலாக மாறிவிடுகிறது.

# 21. அப்போஸ்தலர்கள் அல்லாதவர்களும் அற்புதங்கள் செய்தார்களே?

**லூக்கா பத்தாவது அதிகாரத்தில் சொல்லப்பட்ட ஸ்தேவான், பிலிப்போடு சேர்ந்த மற்ற எழுபது சீஷர்கள் அற்புதங்களைச் செய்தார்கள். இன்னுமாக 1கொரிந்தியர் புத்தகத்திலும், கலாத்தியர் புத்தகத்திலும் அப்போஸ்தலர்களாக இல்லாதவர்களும் அற்புதங்கள் செய்ததாக சொல்லப்பட்டிருக்கிறதே?**

*2கொரி 12:12 -ல் பவுல் "அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமைகளோடும், உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே" என்று சொல்லுகிறார்.* இந்த இடத்தில் பரவச போதனைகளை செய்கிறவர்கள் மற்றும் அற்புத அடையாள போதகர்கள் அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் என்ற தனித்தன்மையை மட்டுப்படுத்தி போதிக்கிறார்கள். அதாவது மற்றவர்கள் போலவே அப்போஸ்தலர்களும் அற்புத அடையாளங்களைச் செய்தார்கள் என்பதாகப் போதிக்கிறார்கள். ஆனால் பவுல் இந்த இடத்தில் குறிப்பிடும் அற்புதங்களும் அடையாளங்களும் அப்போஸ்தலருக்குரிய அடையாளங்கள் மட்டுமே என்று சொல்லுகிறார். இங்கு அப்போஸ்தலருடைய அடையாளங்களில் அநேக ஆத்துமாக்கள் அவர்களுடைய ஊழியங்கள் மூலமாக இரட்சிக்கப்பட்டதும், மேலும் உயிர்த்தெழுந்த ஆண்டவரை அவர்கள் பார்த்ததும் சேர்த்துச் சொல்லப்படுகிறது. ஆனால் இந்த இடத்தில் அற்புதங்கள் அடையாளங்கள்

என்று சொல்லப்படுகிறபவைகளைப் பார்க்கும் பொழுது அப்போஸ்தலர்கள் மற்றும் அவர்களோடு கூட இருந்த ஒருசிலரைத் தவிர, மற்றவர்கள் இந்த அளவிற்கு அற்புதங்களை செய்யவில்லை என்பதை வேதத்தில் பார்க்கிறோம்.

அப்போஸ்தலர்கள் அநேக அற்புதங்களை செய்தார்கள், ஆனால் அவர்கள் மற்றவர்களைவிட அதிகமாக அற்புதங்களை செய்தார்கள் என்பதும் வேத போதனைக்கு புறம்பான ஒன்றாகும். மேலும் வேத வாக்கியங்களை எழுதும்படியான விசேஷித்த தன்மையை அல்லது அதிகாரத்தை தேவன் அப்போஸ்தலருக்கு கொடுத்திருந்தார் என்பதும் தேவனுடைய வார்த்தையானது அவர்கள் மூலமாக தேவ ஆவியினால் கொண்டு எழுதப்பட்டது என்பதை நாம் மறுக்க முடியாது.

**எழுபது சீஷர்கள் குறித்த காரியம் என்ன?**

லூக்கா பத்தாவது அதிகாரத்தில் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்து பிரசங்கிக்கும்படியாக எழுபது சீஷர்கள் சுகமளிக்கும் வல்லமையோடு கூட அனுப்பப்பட்டார்கள் என்பது அப்போஸ்தலர்களைத் தவிர மற்ற அநேகருக்கும் இந்த வரங்கள் கொடுக்கப்பட்டது என்பதைக் காட்டுகிறதல்லவா? என்று நாம் கேட்கலாம். லூக்கா ஒன்பதாவது அதிகாரத்தில் பன்னிரண்டு பேரை அனுப்பினது போல, அந்த எழுபது பேரும் ஓர் குறிப்பிட்ட பணி செய்யும்படியாக அனுப்பப்பட்டார்கள். இயேசு கிறிஸ்து சந்திக்க இருந்த இடங்களுக்கு சென்று தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்து சொல்லுபடியாக அனுப்பப்பட்டார்கள். இயேசு கிறிஸ்து அந்த ஊழியத்தைக் குறித்து பன்னிரண்டு சீஷர்களோடு கூட சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பாக சொன்னதை நாம் கவனிக்க வேண்டும். "பின்னும் அவர் அவர்களை நோக்கி: நான் உங்களைப்

பணப்பையும் சாமான்பையும் பாதரட்சைகளும் இல்லாமல் அனுப்பினபோது, ஏதாகிலும் உங்களுக்குக் குறைவாயிருந்ததா என்றார். அவர்கள், ஒன்றும் குறைவாயிருந்ததில்லை என்றார்கள். அதற்கு அவர்: இப்பொழுதோ பணப்பையும் சாமான்பையும் உடையவன் அவைகளை எடுத்துக்கொள்ளக்கடவன்; பட்டயம் இல்லாதவன் தன் வஸ்திரத்தை விற்று ஒன்றைக் கொள்ளக்கடவன்" (லூக் 22:35-36) என்று தேவன் சொல்லுகிறார். இந்த இடத்தில் இயேசு,அவருடைய அறிவிப்பை மாற்றி சொல்லுகிறதை நாம் பார்க்கிறோம். ஆகவே ஆரம்பத்தில் அந்த எழுபது பேரையும் மற்றும் பன்னிரண்டு பேரையும் அனுப்பினது ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக அனுப்பினார் என்று பார்க்கிறோம். அதற்கு பின்பாக அந்த எழுபது பேரும் சுகமளிக்கும் படியாக வரங்களோடு அனுப்பப்படவில்லை. இயேசு கிறிஸ்துவின் கல்வாரியின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பாக அடையாளங்களும் அற்புதங்களும், அப்போஸ்தலர்கள் என்பதை நிரூபிக்கும்படியாகவும், இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பதை யூதர்களுக்கு வெளிப்படுத்தும் படியாகவும், புதிய ஏற்பாட்டை அவர்கள் எழுதும்படியாகவும், அவர்களுக்கு கர்த்தருடைய அதிகாரத்தை கொடுத்தத்தை நிரூபிக்கும் படியாகவும் அவைகள் அப்போஸ்தலருக்கு கொடுக்கப்பட்டன. ஒருவேளை அப்போஸ்தலர்கள் அல்லாதவர்களும் அதே அடையாளங்களும், அற்புதங்களும் செய்யும்படியாக காணப்பட்டிருந்தால், சபைகள் எவ்விதம் அப்போஸ்தலர்களால் எழுதப்பட்ட வேத புஸ்தகங்களை, நிரூபங்களை கர்த்தருடைய வார்த்தை என்பதான நிரூபணத்திற்கு அது உதவியாக இருந்திருக்க முடியும்? நிச்சயமாக இந்தக் காரியங்களை பவுல், அப்போஸ்தலருக்குரிய தனித்தன்மை என்பதை முக்கியப்படுத்துவதை நாம் பார்க்கிறோம்.

**அடுத்ததாக ஸ்தேவானும் பிலிப்பும் அப்போஸ்தலர் அல்லாதவர்களாக இருந்தும், அவர்கள் எவ்விதம் சுகமளிக்கும் காரியத்தை செய்தார்கள்?**

*ஆம்! அப்போஸ்தலர்கள் அல்லாத இரண்டு, அல்லது மிஞ்சினால் மூன்று பேர்கள் அற்புதங்கள், அடையாளங்களை செய்ததற்கான நிகழ்வுகளை வேதத்தில் நாம் பார்க்கிறோம். ஸ்தேவான் எருசலேமிலும், பிலிப்பு சமாரியாவிலும், ஒருவேளை பர்னபா பவுலோடு கூட சென்றபொழுது இவ்விதமான அற்புத அடையாளங்களை செய்திருக்கலாம் என்று நாம் நம்பலாம். இவர்களுக்கு அடுத்ததாக எந்த இடத்திலும் புதிய ஏற்பாட்டில் இவ்விதமாக சுகமளிக்கும் வரங்களை பெற்றிருந்தார்கள் என்று நாம் வாசிக்கவில்லை. அனனியாவும் கூட சவுலுடைய கண்கள் திறக்கப்படத் தக்கதாக ஒருமுறை மட்டும் அனுப்பினதைப் பார்க்கிறோம். ஸ்தேவானும் பிலிப்பும் அப்போஸ்தலர்களுடன் மிகவும் நெருங்கியிருந்தவர்களாக, அவர்களுக்கு உதவியாளர்களுமாக இருந்தார்கள். பிலிப்பும் கூட சாமாரியாவிற்கு போகும்பொழுது, அப்போஸ்தலர்களின் மூலமாக வழிநடத்தப்பட்டு அவர்களின் பார்வையின் கீழாகவே சென்றார் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்(அப் 8:14). ஆகவே ஸ்தேவானும் பிலிப்பும் செய்த அந்த அற்புத அடையாளங்களும் அப்போஸ்தலர்கள் மூலம் செய்யப்பட்டதேயன்றி அவர்கள் தனிமையாக செய்யப்பட்டவைகள் என்று நாம் தீர்மானிக்கக் கூடாது. ஒருவேளை அப்போஸ்தலர்கள் தாங்கள் பெற்றிருந்த வல்லமைகளை தங்களுக்கு நெருக்கமான நபர்களுக்கு கொடுத்து செயல்பட்டிருக்க வாய்ப்புண்டு. ஆனாலும் கூட இங்கு இரண்டு பேர் அல்லது மூன்று பேர் மாத்திரமே சொல்லக்கூடிய அளவிற்கு உள்ளனர். அப்போஸ்தலர்கள் பெற்றிருந்த அந்த வரங்கள், அவர்கள் விசேஷித்தவர்கள்*

என்பதைக் காண்பிக்கும் வண்ணமாக வேதத்தில் அநேக இடங்களில் அவர்கள் செய்த அற்புத அடையாளங்களை நாம் வாசிக்கிறோம். தேவனுடைய வார்த்தை எவ்வித மாறுபாடும் இல்லாதத்தினால், நாம் நிச்சயமாக வேதத்தில் எவ்வித மாற்றான கருத்தும் இல்லை என்பதை உணர்ந்து அப்போஸ்தலர்களை நிராகரித்து மற்றவர்களை வியாக்கியானப்படுத்தக் கூடாது. இதற்கு முக்கியமான ஆதாரமான வசனங்கள்: அப் 2:43; 5:12; 14:3; 19:11; 2கொரி 12:12. இவைகள் எல்லாமே இயேசு உயிர்த்தெழுந்த பின்பாக, அப்போஸ்தலர்களாக நிரூபிக்கும் வண்ணமாக, சொல்லப்பட்ட வசனங்கள் ஆகும்.

**கலாத்தியர் 3:5-ல் சொல்லியவண்ணம் அற்புதம் செய்யும் ஊழியர்கள் இருந்தார்களா?**

"அன்றியும் உங்களுக்கு ஆவியை அளித்து, உங்களுக்குள்ளே அற்புதங்களை நடப்பிக்கிறவர் அதை நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே செய்கிறார்?" (கலா 3:5). சிலர் இந்த வசனத்தைப் பற்றிக் கொண்டு கலாத்திய நாட்டில் அற்புதங்கள் செய்தவர்கள் இருந்தார்கள் என்று வாதாடுகின்றனர். இந்த நிகழ்வுகள் பவுல் அந்த இடத்தில் இல்லாத வேளையில் மற்றவர்கள் செய்த அற்புதங்களாக அவர்கள் சொல்லுகிறதுண்டு. ஆனால் பவுல் இந்த இடத்தில் தான் செய்த அந்த அற்புதங்களை குறித்து பேசும் வண்ணமாகவே சொல்லுகிறார். ஆகவே தொடர்ச்சியாக பவுலின் மூலமாக கர்த்தர் செய்த அற்புதங்கள் அடையாளங்களைக் கொண்டு அப்போஸ்தலர்களை நிரூபிக்கும் வண்ணமே இந்த வசனங்கள் உறுதிப்படுத்துகிறது. ஆகவே கலாத்திய நாட்டில் அப்போஸ்தலர்கள் அல்லாதவர்கள், இந்த வசனத்தில் சொல்லப்படும் அற்புதங்களை செய்தார்கள் என்று வாதிடுவது சரியான முறையல்ல.

**1கொரிந்தியர் 12-வது அதிகாரத்தில் குணமாக்கும் வரங்கள் அப்போஸ்தலர்கள் அல்லாதவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்ததா?**

*1கொரிந்தியர் 12:7-11 வரை உள்ள வசனங்களின் மூலமாக அப்போஸ்தலர்கள் அல்லாதவர்களுக்கும் இந்த வரங்கள் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படுவதுண்டு. இவ்விதமான வரங்கள் முழுமையான சபைக்கு கொடுக்கப்பட்ட வரங்களும், இவைகள் அப்போஸ்தலர்கள் மூலமாக ஆதித்திருச்சபையில் கொடுக்கப்பட்ட வரங்களாகவும் இருக்கிறதே தவிர, தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட வரங்கள் என்று பவுல் இந்த இடத்தில் குறிப்பிடவில்லை. சிலர் 1கொரிந்தியர் 12:28-31 வசனங்களை தனியாக பிரித்து "தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார். எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளா? எல்லாரும் போதகர்களா? எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறவர்களா? எல்லாரும் குணமாக்கும் வரங்களுடையவர்களா? எல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசுகிறார்களா? எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா? இப்படியிருக்க, முக்கியமான வரங்களை நாடுங்கள்; இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்". இவ்விதமான வரங்கள் மிக மேன்மையுள்ளது என்பதையும் அந்நியபாஷை போன்ற வரங்கள் கடைசியாக கொடுக்கப்பட்ட வரங்களாக காட்டும் படியாகவும் உள்ளது. ஆனால் பரவச போதனையைக் போதிப்பவர்கள் தவறான உபதேசத்தின் மூலம், தங்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கும் வண்ணம்,*

இவ்விதமான வசனத்தைப் பிடித்துக் கொண்டு தங்களுக்கு ஏற்ற வண்ணமாக விளக்குவத்தின் மூலம் ஏற்படும்படியான குழப்பங்கள் அநேகம். ஆனால் நாம் அப்போஸ்தல நடபடிகளை எடுத்து அதோடு கூட மற்ற வேதப்பகுதிகளை ஒப்பிட்டு வியாக்கியானப்படுத்துவது மிக அவசியமான ஒன்றாகும் என்பதை மறந்துவிடக்கூடாது.

# 22. முடிவுரை

இந்த பரவச இயக்கங்களில் இருந்து இப்படிப்பட்ட முயற்சிகளில் ஈடுபட்ட அநேக வாஞ்சையான விசுவாசிகள் அதிலிருந்து வெளியேறியுள்ளனர். சரீரத்தை இயக்கி, கரங்களை வேகமாக தட்டி இன்னும் பல உணர்ச்சிகளை உந்தக்கூடிய செய்கைகளைச் செய்து இவைகளையே ஆவியானவரின் கிரியை என நம்பினவர்களே இவர்களில் பெரும்பாலானோர். இதை ஆராதனையின் மேன்மையாகவே இவர்கள் கருதி வந்துள்ளனர். அந்நியபாஷையாகிய பரலோக பாஷையில் பேசுகிறோம் என்று சொல்லி அதன் மூலம் விடுதலை கிடைக்கிறதாக இவர்கள் எண்ணிக் கொண்டிருந்தனர். இந்த உபதேசங்கள் தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்தை எவ்வளவு தூரம் குறைத்து மதிப்பிடுகின்றன என்று உணர்ந்து கொள்ளாதவரையில் இவைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். இந்த அடையாளங்கள் எவ்வளவு மேலோட்டமானது என்று பின்பு அறிந்துகொண்டனர். இந்த போதகங்களால் பரிசுத்தத்தைப் பற்றியும், நீதியான நடைமுறை வாழ்க்கையைப் பற்றியும் எந்தவிதமான அக்கறையும் காட்டாதது குறித்து இந்த இயக்கங்களோடு சமீப காலங்களில் சம்பந்தப்பட்டிருந்த இவர்கள் வருத்தமாகக் கூறுகின்றனர்.

பரிசுத்தமான வாழ்க்கை வாழுவதற்கு ஆவியானவரின் விசேஷித்த அபிஷேகமும், அதன் அடையாளமாக அந்நியபாஷைகளும் அவசியம் என்ற போதனைகளை நம்பியவர்கள் தங்கள் வாழ்வில் பாவங்களின் மேல் வெற்றியோ, எத்தகைய முன்னேற்றமோ பெறவில்லை என்பதை ஒப்புக்கொள்ளுகின்றனர். வெறும் உணர்ச்சிகளை மட்டும் நம்பி ஏறெடுக்கப்படும் ஆராதனைகளை குறிப்பாக

இவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. இந்தவிதமான ஆராதனைகள் அடிப்படை விசுவாச அனுபவங்களைத் தாண்டி முன்னேற எந்த விதமான உதவியையும் கொண்டுவருவதில்லை என்றே குறிப்பிடுகின்றனர். ஆண்டவருக்குரிய கனத்தை அவருக்குக் கொடாமல், சில வார்த்தை ஜாலங்களையும் தங்களின் நலன், அனுபவம் என்று சுயத்தையே முக்கியப்படுத்தி செயல்படுகிற இந்த ஊழியங்கள், உண்மையான விசுவாசி விரும்புகிற ஆழமான, கனமான, பரிசுத்தமான, தெய்வீக நோக்கமுடைய விசுவாச வாழ்க்கையைக் கொண்டு வருவதில்லை என்று உறுதிபட கூறுகின்றனர். உண்மைக்குப் புறம்பான அற்புதங்களை மிகைப்படுத்திச் சொல்வதும் இந்த விசுவாசிகளை பாதித்துள்ளது. இவைகளுக்கு சிகரமாக, தாங்கள் அறியாமலே உணர்ச்சிகளுக்கும், வெளிப்படையான அடையாளங்களுக்கும் எல்லா சமயங்களிலும் அடிமைப்பட்டுவிட்டதை இவர்கள் நினைவு கூறுகின்றனர்.

சுவிசேஷ வல்லமை நிறைந்த ஆராதனைக்கும், சாட்சியுள்ள உபதேசங்களுக்கும் திரும்பும்படி குழப்பங்கள் நிறைந்து காணப்படுகின்ற இந்த நாட்களில் ஆண்டவர் தமது பிள்ளைகளுக்கு அழைப்பு கொடுக்கின்றார். ரோம அரசின் ஆதிக்கத்தில் இருந்தும், அதைச் சார்ந்த பயங்கரத்தில் இருந்தும் விடுபட்ட வல்லமையை சீர்திருத்தக் காலத்தில் அநேக சபைகள் ருசிபார்த்தனர். இப்பொழுது பிசாசின் அதிபயங்கர கிரியை அலையாக மீண்டும் எழும்பியிருக்கிறது. அடையாள உபதேசங்கள் மூலம் இருளின் தந்திரங்களும், பழக்கங்களும் பெருகிவிட்டன. அந்நியபாஷைகளில் பேசுதலும், உணர்ச்சி சம்பந்தப்பட்ட காரியங்களும் விசுவாசத்தை மழுங்கடிக்கச் செய்யும் நிலையையே ஏற்படுத்தும். நம் வாழ்வில் ஆண்டவருடைய பிரசன்னத்திற்கு அடையாளம் வேண்டுமென்று சொல்லும்பொழுது விசுவாசத்திற்கு இடமில்லையே. இந்த நிலைமை உள்ளான உணர்ச்சி சம்பந்தப்பட்ட அனுபவங்களுக்கே

முக்கியத்துவம் ஏற்படுத்தி தேவனுடைய வார்த்தையிலுள்ள வாக்குத்தத்தங்களை நாம் நம்புவதிலிருந்து தூரம் கொண்டுபோய் விடும். ஆவிக்குரிய வாழ்வின் ஆசீர்வாதங்களை விசுவாசிகள் தேடுவதற்கு இது மிக அபாயகரமான வழிமுறை என்றே சொல்லலாம்.

தற்சமயம் அநேக விசுவாசிகள் இந்த பரவச அனுபவ உபதேசங்களுக்குள் சென்று வெளி வந்துள்ளனர். ஆவியானவரின் அசைவாடுதல் என்ற பெயரில் செய்யப்படுகின்ற சில உடல் அசைவுகள் போன்ற உணர்வுகளுக்கு அவர்கள் அடிமைப்பட்டுள்ளனர். இந்த வகை ஆராதனைகளின் ஐக்கியங்களில் இவர்கள் ஈர்க்கப்பட்டுள்ளனர். விடுதலையோடு கூடிய ஆராதனை என்ற பெயரில் அந்நிய பாஷைகளோடு பரலோக அனுபவம் வேண்டுமென்ற தத்துவம் இவர்களுக்கு பெரும் எதிர்பார்ப்பாகிவிட்டது.

இறுதியாக இந்த வகை ஆராதனைகள் தேவனுடைய வார்த்தைக்கு எவ்வளவு தூரமானதென்று சில விசுவாசிகள் கண்டுபிடித்துவிட்டனர். இவர்கள் தேவனுடைய வார்த்தையை தாங்களே ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்த பிறகு, தீர்க்கதரிசனம் என்று சொல்லப்படுபவைகளும், மற்ற உபதேசங்களும் *(Doctrines)* எவ்வளவு மேலோட்டமானவைகள் என்று அறிய ஆரம்பித்தனர். சில நூதனமான அனுபவங்களைப் பற்றி சிலர் அதிர்ச்சியடையவும் ஆரம்பித்துவிட்டனர்.

இந்த பரவச அனுபவ உபதேசத்தில் இருந்து வெளிவந்தவர்கள், இக்கூட்டங்களின் ஆவிக்குரிய பின்தங்கிய நிலையையும், பரிசுத்தத்தைப் பற்றியோ இவர்களின் கரிசனையின்மையை விவரிக்கின்றனர். எந்த விதத்திலும் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்ற போதனை பாவத்தின் மேல் வெற்றியோ அல்லது ஆழமான விடுதலையோ கொண்டுவரவில்லை என்று வருத்தப்படுகின்றனர்.

குறிப்பாக ஆராதனை முறைகளில் வெறும் அனுபவங்களை முக்கியப்படுத்துவதை அதிகமாக இவர்கள் கூறுகின்றனர். இந்த வகை முயற்சிகள், இரட்சிக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவனுடைய ஆவிக்குரிய வாழ்வில் முதிர்ச்சி அடைவதற்கான *(Spiritual Maturity)* எந்த ஒரு பயனையும் தரமுடியாததை இவர்கள் துக்கத்தோடு கூறுகின்றனர். ஆண்டவரைப் பற்றிய பயமோ, அவரது பிரசன்னத்தின் உணர்வோ இக்கூட்டங்களில் காணப்படாத நிலையில், உலக வழக்கத்தின் படியான சில யுத்திகளை இன்னிசையிலும், ஆராதனையிலும் இக்கூட்டங்கள் கடைபிடித்ததால், இந்த விசுவாசிகள் வேதனை அடைந்து ஆழமான, பரிசுத்தமுள்ள வழியில் வருகிற ஆவிக்குரிய மேன்மையை வாஞ்சித்தவர்கள் என்பதே உண்மை. கணக்கிலும், தரத்திலும் நடந்திராத காரியங்களை தங்கள் அற்புதக் கூட்டங்களில் நடந்தது என்ற உண்மைக்குப் புறம்பாகக் கொடுக்கப்படும் புள்ளியியல் விபரங்கள் இந்தக் கூட்டங்களில் காணப்படும் மற்றும் ஒரு அவநம்பிக்கையின் சின்னமாக வெளிவந்த விசுவாசிகள் கருதுகின்றனர். தாங்கள் எவ்வாறு வெறும் உணர்ச்சிகள், அடையாளங்கள், எதேச்சையாக நடைபெறும் நிகழ்ச்சிகளை முக்கியத்துவப்படுத்துவது போன்ற மேலோட்டமான பக்தியிலிருந்து விடுவிக்கப்பட்டோம் என்று மகிழ்ச்சியடைந்தனர்.

எப்படி ஆராதிக்க வேண்டும் என்றும், எப்படி அவருக்காக சாட்சியாக இருக்கவேண்டும் என்றும் ஆண்டவருடைய வார்த்தையில் எழுதப்பட்டு நமக்கு தெளிவாக போதிக்கப்பட்டுள்ள சத்தியத்திற்கு திரும்பி வரவேண்டுமென்று ஆண்டவர் தமது மக்களை இந்த ஆவிக்குரிய குழப்பமான நாட்களில் அழைக்கிறார். தவறான போதகங்களுக்கு பயப்படாமல், சீர்திருத்த நாட்களில் விசுவாசிகள் துணிந்து ஆவிக்குரிய தைரியத்தோடு வாழ்ந்தார்கள். ஆனால் இப்பொழுது நிலைமை தலைகீழாக மாறி, பிசாசின் தந்திரங்கள்

வைராக்கியமாக செயல்படுகிறது. இந்தப் போதகங்களால் உண்மை விசுவாசிகளும் அவனுடைய தந்திரங்களுக்கு நூலிழையில் நெருங்கியிருக்கிறார்கள். என்றுமே இல்லாத அளவு இன்று நமக்கு கீழ்கண்ட வசனங்களில் உள்ள போதனைகள் மிகவும் அவசியமாகிறது. அவைகள்:

"ஆகையால், சகோதரரே, நீங்கள் நிலைகொண்டு, வார்த்தையினாலாவது நிருபத்தினாலாவது நாங்கள் உங்களுக்கு உபதேசித்த முறைமைகளைக் கைக்கொள்ளுங்கள்" (2 தெச 2:15).

"உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக்கொண்டிருங்கள்" (வெளி 2:25).

# குறிப்புகள்

டாக்டர். பீட்டர் மாஸ்டர்ஸ் இங்கிலாந்து தேசம் லண்டன் மாநகரத்தில், மெட்ரோபாலிட்டன் டேபர்னேக்கில் என்ற சீர்திருத்த பாப்திஸ்து சபையின் போதகராக 1970–ஆம் ஆண்டு முதல் கர்த்தருக்கென்று பணி செய்து வருகிறார். இந்த சபையானது பிரசங்கிகளின் இளவரசன் என்றழைக்கப்படும் சி.எச். ஸ்பர்ஜன் என்ற தேவ மனிதரால் ஆரம்பிக்கப்பட்டது.





டாக்டர். ஜான் சி. விட்கோம் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள விநோனா லேக், இண்டியானா என்ற இடத்தில் கிரேஸ் இறையியல் கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றினார்.

இந்த 20-ம் நூற்றாண்டில் ஆவிக்குரிய வரங்கள் என்று சொல்லப்படுகிற அந்நியபாஷை பேசுதல், சுகமளித்தல், தரிசனம் பெறுதல், அற்புத அடையாளங்களைச் செய்தல், பிசாசுகளை துரத்துதல் மற்றும் தீர்க்க தரிசனம் உரைத்தல் ஆகியவை உண்மைதானா? ஆதி திருச்சபை அடையாளங்களுக்கு ஈடாக இன்றைய வரங்களை ஒப்பிட முடியுமா? புதிய ஏற்பாட்டின் காலங்களில் இருந்த வரங்களின் நோக்கம் என்ன? திருச்சபையின் வாழ்விலே நிரந்தரமான அம்சமாயிருப்பதற்காக இது அருளப்பட்டதா? இப்படிப்பட்ட கேள்விகளுக்கு வேதாகமத்தின் அடிப்படையில் ஆதாரத்தோடும், தெளிவாகவும் இந்த புத்தகம் பதில் அளிக்கிறது.


## சீர்திருத்த பாப்திஸ்து சபை

5/295, சாந்தி நகர், ஏற்காடு மெயின் ரோடு, சேலம் – 636 008

தொடர்பு எண் : +91 98427 67184

Website : www.reformedbaptistchurch.in

www.tamilchristianmessages.com